

# அசை

மலரன்னை

# அசை

சிறுகதைத் தொகுப்பு

மலரன்னை

ஜீவநதி வெளியீடு

அசை(சிறுகதைகள்)/ மலரன்னை/ முதற்பதிப்பு: பங்குனி 2021/ ©மலரன்னை/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 128/விலை: 400.00/அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Asai (a collection of Short Stories) / Malaranai/ First Edition: March 2021/ ©Malaranai/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 128/Price: 400.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN:978-955-0958-70-2

ஜீவநதி வெளியீடு – 185

# உள்ளே...

1. ஏன் இந்த மாற்றம்
2. இணையும் கரங்கள்
3. மீண்டும் நாளை வருவான்
4. பங்களிப்பு
5. பரிவும் பகிர்வும்
6. பருந்தின் பசி
7. பாதுகாப்பு
8. சபதம்
9. சரியான பாதை
10. தளிரின் தாகம்
11. ஈரம்
12. அலைகள் ஓய்வதில்லை
13. நீ நடந்த பாதையிலே...
14. ஒத்தடம்
15. புதுச்சட்டை
16. சங்கமம்
17. சுகந்திரதாகம்
18. தெளிவு
19. புயலாக மாறும் பிஞ்சுகள்
20. விழிப்பு
21. விண்ணிலிருந்து

## என்னுரை

*அன்பார்ந்த வாசக நேயர்களுக்கு வணக்கம்.*

*மற்றமொரு சிறுகதைத் தொகுதியான "அசை"மூலம் எனது எழுத்துலக வாழ்க்கையின் ஆரம்ப கால கட்டத்தை வாசகர்களாகிய உங்களுடன் சேர்ந்து அசை போடக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தை நான் இது எனக்கு கிடைத்த ஒரு வரசப்பிரசாதமாகவே கருதுகிறேன்.*

*போர் நடந்த மண்ணின் சுவடுகளை இன்றைய சந்ததியினர் பலரும் அறிந்து உணர்ந்திருக்க வாய்ப்பில்லை. தொண்ணூறுகளின் பதிவுகளாகிய இந்தச் சிறகதைகள் வெறும் கற்பனையில் உதித்தவையல்ல. அவை காலத்தின் கோலத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி என்பது எனது கணிப்பு.*

*அந்தக்காலகட்டத்தில் மக்களது வாழ்வியல் நடைமுறை, பாதிக்கப் பட்ட மக்களின் மனநிலை, இளம் நெஞ்சங்களின்துடிப்பு எனப் பல்வேறு அம்சங்களை ஊடுருவிப் பார்த்தால், புறநிலைக் காரணிகள் தான் யாவற்றையும் வழிநடத்தி அவர்களது உணர்வுகளை உருவேற்றி யிருக்கின்றன. இச்சிறுகதைகள் அவற்றை தெளிவுற விளக்குவதுடன் மன நிலை மாற்றங்களுக்கான காரணிகளையும் இலகுவாகப் புரிய வைக்கிறது.*

*இந்நூல் உருவாகிய விதம் சற்று விந்தையானதான். எனது ஆரம்ப காலக் கதைகள் அனைத்தும் போர்ச் சூழலால் அழிந்து போய் விட்டதாகக் கருதி நான் ஆதங்கத்துடன் இருந்தவேளை, எனது மூத்த மைந்தன் இணையத்தளத்திலிருந்து இந்தத் தொகுப்பில் பிரசுரமாகியிருக்கும் இச்சிறுகதைகளை மீட்டுத் தந்தார். அதே சமயம் தனது சிரமத்தை இம்மியளவும் பொருட்படுத்தாது அவற்றை அச்சேற்றித் தந்த பெருமை அது மைந்தன் பரணீதரனையே சாரும். மைந்தர்கள் இருவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். மற்றும் இச்சிறுகதைகளை பிரசுரித்த சஞ்சிகைகளான ஈழநாதம், மாற்றம், சாளரம், களத்தில், சுதந்திரப்பறவைகள், வெளிச்சம் ஆகியவற்றுக்கும் இணையத்தளத்தில் பதிவு செய்த அன்பு நெஞ்சங் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.*

*காலத்தின் பதிவுகளான இச்சிறுகதைகள் நீடூழி நிலைத்திருந்து எமது சந்ததியினருக்கு தமது மூதாதையர் அனுபவித்த இன்னல்களை உணர்வு பூர்வமாக உணர்த்திட வேண்டும் என்பதே எனது குறிக்கோள். நேயர்களே! இனி பக்கத்தைப் புரட்டுங்கள். போர்க்காலப் பதிவுகளில் மூழ்கியெழத் தயாராகுங்கள்.*

*நன்றி*

*திருமதி அற்புதராணி காசிலிங்கம்* — *இங்ஙனம்*
*99/1 இராஜவீதி* — *மலரன்னை*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்* — *0776331515*

# ஏன் இந்த மாற்றம்

*காலை நேரத்து இள வெயில் திறந்திருந்த கதவினூடாக வீட்டிற்குள் பட்டுத் தெறித்தது. கமலா ஆற, அமர இருந்து அன்றைய "ஈழநாதம் வெள்ளி மஞ்சரி"யைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.*

*"அம்மா! அம்மா!!"*

*பர பரப்புடன் கமலா, தாயை அழைத்தாள்.*

*"அம்மா! இண்டைக்கு "விழுதுகள்" பக்கத்தில் தம்பியைப் பற்றி ஆரோ எழுதி இருக்கினம்"*

*"என்னடி பிள்ளை அது? சத்தம் போடுறாய் அங்கை இருந்து கொண்டு. நான் இஞ்சை கிணத்தடி யில குளிச்சுக் கொண்டிருக்கிறன். இஞ்சை வந்து சொல்லனடி."*

*கையில் பத்திரிகையுடன் கிணற்றடிக்கு வந்தாள் கமலா.*

*"அம்மா! இண்டைக்கு எங்கடை தம்பி ராசனைப் பற்றிப் பேப்பரிலை வந்திருக்கு, இஞ்ச பாருங்கோ தம்பியின்ரை படமும் போட்டிருக்கு"*

*சொல்லியவாறே பத்திரிகையைத் தாயின் முகத்திற்கும் கிட்டவாகப் பிடித்தாள் கமலா.*

*"வடிவாய்ப்பிடி பிள்ளை, பாப்பம்" சொல்லிய வளின் குரல் கரகரத்தது.*

*"அம்மா பாத்திட்டியளெல்லோ. இனிக் குளிச்சிட்டு வந்து ஆறுதலாய் வாசியுங்கோ. நான் படிச்சிட்டு வைக்கிறன்"*

கமலா போய்விட்டாள். பொன்னம்மாவிற்கு மகனின் ஞாபகம் வந்ததும் தன் நிலை மறந்தாள். மகனின் நினைவில் அமிழ்ந்து போனாள்.

பொன்னம்மா இளம் வயதிலேயே விதவையாகிவிட்டவள். தன் இரு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கிவிட வேண்டுமென ஆர்வங்கொண்டாள். அவர்களுள் மூத்தவள் கமலா துணிவு மிக்கவள். இளையவன் ராசன். பயந்த சுபாவங் கொண்டவன், அவனுக்கு பொழுது சாய்ந்தால் போதும் தாயை விட்டுப் பிரிய மாட்டான். இருளென்றால் அவனுக்கு அவ்வளவு பயம். பொன்னம்மாவிற்கு இப்போதும் இருளைக் கண்டதும் மகனின் நினைவு வந்துவிடும். கண்ணீர் சிந்தத் தொடங்கிவிடுவாள். அப்பாவிச் சுபாவமுள்ள ராசன் இயக்கத்திற்குப் போவான் எனப்பொன்னம்மா கனாக்கூடக் கண்டிருக்க மாட்டாள்.

ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து ராசன் வரும்போதே "அம்மா!" என்று அழைத்தவாறு வந்தான். பொன்னம்மா வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். ராசன், நாய்க்குட்டி ஒன்றை நன்றாகக் கட்டிப்பிடித்து வைத்துக்கொண்டிருந்தான்.

"அம்மா! இந்த நாய்க்குட்டியை ஆரோ றோட்டிலை கொண்டந்து விட்டிட்டினம். அது கிடந்து கத்திக் கொண்டிருந்தது. வாகனம் ஏதும் வந்தால் அடிபட்டுச் செத்துப் போயிடும் எண்டு நான் தூக்கிக் கொண்டு வந்திட்டன் பாவம்! சின்னக்குட்டி"

சொல்லியவாறு குட்டியைத் தடவிக் கொடுத்தான். பொன்னம்மாவிற்குத் தன் மகனின் செயல் எரிச்சலை உண்டு பண்ணி விட்டது.

"ஆரும் பெட்டை நாய்களை வளக்கிறது. அதுகள் குட்டி போட அதுகளைக் கொண்டு வந்து றோட்டுகளில விடுறது. உனக்கு வேறை வேலையில்லை. இஞ்சை தூக்கிக்கொண்டு வந்திட்டாய். உடனகொண்டு போய் எங்கையாகிலும் விட்டிட்டு வந்து குளிச்சிப் போட்டு வீட்டுக்கை வா. சீ! ஊத்தை நாயைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு நிற்கிறாய், கொண்டோடிப் போ!"

ராசன் விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டான். பிறகு அவனைச் சமாதானப்படுத்தத் தாயும் மகளும் பட்ட பாடு அப்பப்பா! அவர்களுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. அவனுடைய ஜீவகாருண்யம் நிறைந்த செயல்களை எண்ணிப் பார்க்கிறாள்.

மற்றுமொரு நாள். குசினிக்குள் எலிகளின் தொல்லை

அத்துமீறிவிட்டது. தொல்லை பொறுக்க முடியாத பொன்னம்மா, ஒரு எலிப்பொறி வாங்கி வந்தாள். அந்தப் பொறியை ஏற்றி வைக்க விடமாட்டேன் என்று ராசன் அடம் பிடித்து ஆர்ப்பாட்டம் செய்யத் துவங்கி விட்டான். "எலிகள் தங்களுடைய வயிற்றுப் பசியைத் தீர்க்கத்தான் குசினிக்குள்ள வருகுதுகள். அதுகளைக் கொல்லக் கூடாது" என்று சண்டைக்கு வந்து விட்டான். பின்னர் கமலா அக்கா எலி அளைஞ்ச சாப்பாடுகளால் ஏற்படும் தீமைகளைப் பற்றி அவனுக்கு விளங்க வைத்து சமாதானப்படுத்தப்பட்டபாடு, பொன்னம்மாவின் நினைவில் அலை மோதியது.

பொன்னம்மா சிந்தித்தாள். "எப்படி என்ரை குஞ்சுக்கு இப்படி மனமாற்றம் வந்தது? எனக்கு அவன் எண்டைக்குமே குழந்தையாய்த் தானே இருந்தவன். அவன் பெரியவனாய் வளர்ந்த மாதிரி எனக்குத் தெரியேல்லையே? என்னெண்டு மாறினவன்?"

பொன்னம்மா விடை காண முயன்றாள். ராசன் வீட்டிற் கென்று வரும் போதெல்லாம் தாயுடன் செல்லமாக இரண்டு வார்த்தை கதைக்காமல் விடமாட்டான் அன்றொரு நாள் அவன் பொன்னம்மாவைத் தடவி விட்டு,

"அம்மா! ஏனம்மா இப்படி மெலிஞ்சு போயிருக்கிறியள். ஏன் வடிவாய்ச் சாப்பிடுறதில்லையே! அக்கா, நீயெண்டாலும் அம்மாவைக் கவனிச்சுச் சாப்பிட வையன். பார்! அம்மா சரியாய் மெலிஞ்சு போனா"

சொல்லும் போது அவனது குரல் கரகரத்தது. பொன்னம்மா வுக்கு கண்கள் குளமாகி விட்டன.

"இவ்வளவு பாச உணர்வு கொண்ட என்ரை மகன் ஏன் இப்படி ஒரு முடிவை எடுத்தவன்? எப்படி அவனால தன்ரை உணர்வுகளை மறைக்க முடியுது? ஓ!... அப்படியெண்டால் அவனுக்கு என் மேலே உள்ள பாசத்திலும் பார்க்க கூடுதலான பற்றுத் தன்ரை சொந்த மண்ணிலை இருக்குதோ!, பொன்னம்மாவின் மனம் மீண்டும் மீண்டும் இந்தக் கேள்வியைக்கேட்டுக் கொண்டிருந்தது.

"கோட்டைப் பிரச்சினை நடந்து கொண்டிருந்தபோது ஒருநாள் ராசன் முகத்தை தொங்கப் போட்டவாறு வீட்டிற்கு வரு கின்றான். வந்தவுடன் ஒருவருடனும் கதைக்காமல் தனியே இருந்து யோசித்துக் கொண்டிருந்தான், பொன்னம்மா அவனை அணுகி,

"ஏனப்பு விறைச்சமாதிரிக் குந்திக் கொண்டிருக்கிறாய்" என்று கேட்டாள்.

“அம்மா நேற்றுச் சகடை போட்ட குண்டு கோயிலிலை விழுந்து வெடிச்சிருக்கு. என்னோடை படிக்கிற பெடியன் ஒருத்தனும் அந்தக் கோயிலுக்கை பாதுகாப்புக்காக ஓடி இருக்கிறான் அவன்ரை உடம்பைப் பார்க்கேலாது. எல்லாம் எரிஞ்சு கருகிக்கிடக்குது. ஏன் தான் இப்பிடிப் போட்டுக் கொல்லுறாங்களோ”

மகனின் வாட்டத்திற்கான காரணத்தை அறிந்து கொண்ட பொன்னம்மா,

“அவங்களுக்குத் தமிழர் எல்லாரையுமே அழிக்கிறது தானே நோக்கம்” என்று சொல்லித் தன் மன நிலையை வெளிப்படுத்தினாள்.

அந்த நிகழ்வின் பின் அவனது செயல்களில் மாற்றம் தென்பட்டது. சில நாட்களில் அவன் தன்னை இயக்கத்துடன் இணைத்துக்கொண்டான். ஆனால் பொன்னம்மா அதனைச் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

கடைசியாய் ராசன் வீட்டிடிற்கு வந்த அன்று கமலா தான் அவனுக்குச் சோறு போட்டுக் கொடுத்தாள். சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் இடையில்,

“அம்மா! முந்தி நாங்கள் சின்னனாய் இருக்கைக்க நீங்கள் எனக்கும் அக்காவுக்கும் சோறு குழைச்சு உருட்டித் தாற நீங்க ளெல்லே? இப்பவும் நான் அதை நினைக்கிற நான் அம்மா குழைச்சுத் தாற சோறு தனி ருசி தானெண்டு” மகன் அப்படிச் சொன்னதும் பொன்னம்மா,

“பொறுகுஞ்சு, இண்டைக்கும் நான் குழைச்சு தாறன்”

என்று சொல்லித் தானே குழைத்து உருட்டிக்கொடுத்தாள், ராசன் ஆவலுடன் வாங்கிச் சாப்பிடுவதைப்பார்த்து அவளது மனம் பூரிப்படைந்தது.

ராசன் புறப்படும்போது மழை தூறல் போடத் துவங்கி இருந்தது. பொன்னம்மாவும் கமலாவும் ஒழுங்கை வரை வந்து ராசனை வழியனுப்புவது வழக்கம். அன்றும் அவ்வாறே அவனுடன் கூட வந்து கொண்டிருந்தார்கள்.

“ஏனம்மா மழையுக்கை வாறியள் மழையிலை நனைஞ்சால் தடிமல் வரப்போகுது அக்கா! அம்மாவை மழையிலை நனைய விடாதை”

ராசன் தடுக்கத் தடுக்க இருவரும் படலையைத்தாண்டி ஒழுங்கை முகப்பு வரை வந்து வழியனுப்பி, அவனது உருவம்

*மறையும் வரை நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். இருவரது கண்களிலும் நீர் பனித்திருந்தது. இருவருமே தம் மனதுக்குள் தெய்வத்தை வேண்டிக் கொண்டனர். பொன்னம்மா தன் இஷ்ட தெய்வமான முருகப்பெருமானை வேண்டிக் கொண்டாள்.*

*"எம்பெருமானே! என் பிள்ளைக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்துக் காப்பாற்று"*

*கமலா தன்குலதெய்வமான பிள்ளையாரை வேண்டினாள்.*

*"காலத்தின் தேவையை அவனுக்கு உணர வைத்தவனும் நீயே அவனுக்கு பக்க பலமாய் இருந்து பாதுகாக்க வேண்டியவனும் நீயே"*

*இதுதான் கடைசிச் சந்திப்பாயிருக்குமென்று அவர்களில் எவருமே நினைத்திருக்க முடியாது. ஒருவேளை, கழுத்தில் சயனைட் குப்பியைக் கட்டியிருக்கும் ராசன் "சாவு எந்நேரமும் என்னை அணைக்கலாம்" என்று எண்ணியிருப் பானோ? என்னவோ!*

*"அம்மா! என்னம்மா துலாவைப் பிடிச்சுக்கொண்டு ஈரத் தோடை அப்பிடியே நிற்கிறியள். நீங்கள் இருங்கோ. நான் அள்ளி வாத்து விடுறன்"*

*கூறியவாறு கமலா வந்து துலாக்கயிற்றைத் தாயிடமிருந்து வாங்கித் தண்ணீரை அள்ளி அம்மாவிற்கு வார்த்து விட்டாள். குனிந்து வார்த்த போது கமலாவின் கண்களிலிருந்தும் இரு சொட்டுக் கண்ணீர் அம்மாவின் முதுகில் விழுந்து தண்ணீருடன் சங்கமமாகியது.*

- ஈழநாதம் - 3.12.1993

# இணையும் கரங்கள்

டாக்டர் வசந்தி மேசை முன் அமர்ந்து அன்று நடைபெற்ற ஆபரேசன் கேஸ்களின் பதிவேடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தாள். நோயாளிகளின் இரத்த அழுத்தம், வெப்பநிலை முதலியவை அங்கே பதியப் பட்டிருந்தன. அவற்றை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தவளை டொக்! டொக்! என்ற காலடிச் சத்தங்கள் நிமிர்ந்து பார்க்க வைக்கிறது.

அவள் எதிரே டாக்டர் நாதன் புன்முறுவலு டன் நின்று கொண்டிருந்தான். பிரபல்யமடைந்து வரும் சர்ஜனான அவன் சிறந்த கைராசிக்காரன் என நோயாளர்களால் மட்டுமன்றி மற்றும் யாவராலும் புகழப்படுவதுடன் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டிருந்தான். அண்மையில் தனது படிப்பை முடித்துக் கொண்டு லண்டனிலிருந்து திரும்பி, யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகிறான். குறுகிய காலத்தில் மக்களின் நன் மதிப்பைப் பெற்று விட்ட அவன் கடமையே கண்ணென மதிப்பவன்.

ஒரு கணம் அவனை நிமிர்ந்து பார்த்த வசந்தி, சட்டெனத் தன் இருக்கையை விட்டு எழுந்து, "குட் ஈவினிங் டொக்டர்" என்று வந்தனம் கூறினாள்.

"குட் ஈவினிங் வசந்தி எனி கொம்பிளிக் கேஷன்ஸ்?"

"நத்திங் டொக்டர், எவ்ரி திங் இஸ் ஓ கே"

"குட்!" என்று சொன்னவன், ஒரு தரம் அவளது முகத்தைப் பார்வையால் ஊடுருவினான்.

"ரைட்" ஐ வில் மீற் யூ லேற்றர்.

சொன்னவன், திரும்பி நடந்தான். மீண்டும் "டொக்! டொக்!" அவனது காலடிச்சத்தம் தேய்ந்து போனது கூடத் தெரியாமல் வசந்தி அவன் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஐ வில் மீற் யூ லேற்றர்"

அவனது குரல் மீண்டும் மீண்டும் அவளது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

"ஐயோ! அம்மா..."

நோயாளி ஒருவரின் குரல், அவளைத் தன்னிலைக்குத் திரும்ப வைத்தது. இருக்கையில் அமர்ந்து கொண்டவள், ஒவ்வொரு பதிவேடுகளையும் அவதானித்து அந்தந்த நோயாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய மருந்து வகைகளைப் பதியலானாள். பதிந்து முடிந்ததும் வார்ட்டிலுள்ள நோயாளர்களை ஒரு தரம் சுற்றிப் பார்வையிட்டாள்.

அவளது கால்கள் விடுதியை நோக்கிவிரையத்தொடங்கின. அவனது சிந்தனைக் குதிரையோ அவளது நடை வேகத்தை முந்திக் கொண்டு விட் டது.

நான்கு நாட்களின் முன் ஒரு மாலைப் பொழுதில் டாக்டர் நாதன் அவளைத் தனிமையில் சந்தித்த நிகழ்வு அவள் மனக்கண் முன் நிழலாடியது.

"மிஸ் வசந்தி! ஏன் நீங்கள் திருமணமே செய்யிறதில்லை என்று சபதமா?"

இயல்பாகவே கேள்விக்கணையைத் தொடுத்தான் நாதன் "இல்லை டொக்டர்,ஆனால்... திருமணம் குறித்து சில குறிக்கோள் கள் எனக்கு உண்டு."

"அப்படியென்றால்..."

"சீதனம் கேட்டு டிமான்ட் பண்ணுற ஆம்பிளையல நான் அடியோட வெறுக்கிறன்"

"மிஸ் வசந்தி! அப்படி நீங்க வெறுக்கிறதுக்கு ஏதோ பின்னணி உங்கட வாழ்க்கையில நடந்திருக்க வேணும் என்று நான் நினைக்கிறன். உண்மையா?" நாதனின் ஊக்கத்தை அவளால் மறைக்க முடியவில்லை.

***

நீண்ட இடைவெளிக்குப் பின் எம்.பி.பி.எஸ். இறுதிப் பரீட்சையை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்திருந்தாள். வசந்தி, வன்னி மண்ணின் வளம்மிகு வனப்புகளில் தனை மறந்து லயித்துப்

போயிருந்த அவளை அம்மாவின் குரல் உலுப்பியது.

"அம்மா என்னைக் கூப்பிட்ட நீங்களே?"

"ஓம் பிள்ளை, வசந்தி இண்டைக்கு மாப்பிள்ளை வீட்டார் பொம்பிளை பாக்க வாற தெண்டிருக்கினம். அது தான்... முகத்தைக் கழுவி வெளிக்கிட்டு நில்லன்"

"அம்மா, அதுக்கிடையிலை எனக்குக் கல்யாணத்துக்கு என்ன அவசரம்?" கேட்க நினைத்தவள், தனக்குக் கீழே வரிசையாகக் காத்திருக்கும் மூன்று சோதரிகளின் நினைவு வரவே, மௌனத்தைத் தழுவிக் கொண்டாள்.

மாப்பிள்ளை வீட்டார் வந்து, பெண்பார்க்கும் படலமும் இனிது நிறைவேறியது. மாப்பிள்ளையின் தாயார் மெதுவாகக் கதையைத் தொடங்கினாள்.

"எங்களுக்கு இவர் ஒரே ஒரு மகன் தான். இவருக்குக் கீழ இன்னும் இரண்டு பொம்பிளைப் பிள்ளையள் இருக்கினம்"

"ஓம், ஓம்... அது எங்களுக்குத்தெரிஞ்ச விசயந்தானே எங்களுக்கும் இவதான் மூத்தவ. மற்றவை மூன்று பேரும் படிச்சுக் கொண்டிருக்கினம்"

"நான் அதுக்குச் சொல்ல வரயில்லை. எங்கடை மகன் தான் தங்கச்சிமாரையும் கவனிக்க வேணும். இவ்வளவு காலமும் இவர் உழைச்சதெல்லாம் மகனைப் படிப்பிச்சதோடை சரி பேராதனைக்கு விட்டு என்ஜினியருக்குப் படிப்பிக்கிறதெண்டால் என்ன லேசான காரியமே?"

"ஓ... அது எங்களுக்கும் தெரிஞ்ச விஷயந்தானே"

அப்பா சொல்ல, மாப்பிள்ளையின் தாயார் நேராக விஷயத்துக்கு வந்தாள்.

"நான் இப்பவே விஷயத்தை நேராய்ச் சொல்லிப் போடுறன். தங்கச்சிமார் ரெண்டு பேரின்ரை பேரிலையும் ஆளுக்கு ரெண்டு லட்சம் போட்டு வைக்க வேணும். நான் இதை ஏன் சொல்ல வாற னெண்டால்... தம்பி கலியாணஞ் செய்திட்டால் பிறகு அதுகளை நாங்கள் என்னெண்டு கரை சேர்க்கிறது?"

"நீங்கள் சொல்றது எங்களுக்கு நல்லாய் விளங்குது. ஆனால்... நானும் தனியனாய்க்கிடந்து இந்த மண்ணிலை வியர்வை சிந்தி, இரத்தத்தைப் பிழிஞ்சுதான் உழைச்சு என்ரை மகளை ஒரு டொக்டருக்குப்படிக்க வைச்சனான். இனி மற்றப்பிள்ளையளையும்

படிப்பிக்கவேணும். என்னாலை தர முடிஞ்சதெல்லாம் ஒரு அஞ்சு லட்ச ரூபாய்க்காசுதான். அதுவே என்ரை தகுதிக்குக் கூடித்தான் போச்சு. அதுக்கு மேலை நீங்கள் தரச்சொல்லிக் கேட்டால்... அது என் சக்திக்கு அப்பாற்பட்டது."

"ஓ!... யாழ்ப்பாணத்திலை இருந்தும் தம்பிக்குப் பேசி வந்தவை. பதினைஞ்சு தாறதாய்ச் சொன்னவை. அந்தப் பொம்பிளை ஏ எல் தான் படிச்சதெண்டு தம்பிக்குப் பிடிக்கேல்ல. வேறையும் ஒரு பகுதி, கொழும்பிலை வீடும் காசும் கூடக் குறையத் தாறனெண்டு கேட்டவை. பொம்பிளை ஒரு பி. எஸ்.ஸி ரீச்சர். அதுவும் தம்பிக்குப் பிடிக்கேல்ல.

இடையில் அம்மா பேசினாள்.

"நாங்களும் என்ன செய்யிறது. இன்னும் மூன்று குமர்கள் இருக்குதுகள், இப்ப கையிலை, மடியிலை கிடக்கிறதைக் குடுத்து இந்தக் கலியாணத்தை ஒப்பேத்திப் போட்டுப் பிறகுதான் அது களுக்கும் ஏதும் தேடவேணும். எங்கடை நிலைமையையும் ஒருக்கால் யோசிச்சுப் பாருங்கோ"

வசந்திக்கு அம்மாவின் பேச்சைக் கேட்கக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. அம்மா ஏன் இப்படி இறங்கி வந்து பேசுகிறாள்?

"இன்னும் எத்தினையோ பேசி வந்தது பாருங்கோ, ஒண்டுக்கும் சாதகம் பொருந்தமாட்டன் எண்டிட்டுது. நீங்கள் கடைசி பத்தெண்டாலும் தந்தியளெண்டால், நாலைப் பிள்ளை யளின்ரை பேரிலை போட்டிட்டு, ரெண்டைச்செலவுக்கும் எடுக்க லாம் மிச்சத்தை அவை என்னவும் செய்யட்டன்"

இது மாப்பிள்ளையின் பொறுப்புணர்வுள்ள தந்தையின் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகள், அப்பாவின் முகம் சுருங்கிப் போவதை வசந்தி அவதானித்தாள்.

"நாங்கள் கேக்றது ஒண்டும் பெரிய காசில்லை. என்ரை பிள்ளைக்கு எவ்வளவு சம்பளமெண்டு உங்களுக்குத் தெரியுமே? அதைவிட அவனுக்கு இந்த வருஷமுடிவிலை "ஸ்காலர்சிப்" வேறை கிடைக்கப்போகுது. அவன் வெளிநாட்டுக்குப்போனால் அங்கை ஒரு மாசத்திலை உந்தக்காசை உழைச்சுப் போடுவான்"

தாயாரின் பெருமிதம் செறிந்த வார்த்தைகளைக் கேட்க, வசந்திக்கு நரம்புகள் புடைத்துப் பொறுமை எல்லையைக்கடந்து கொண்டிருந்தது. அப்பா தயங்கியவாறே, "அப்பிடியெண்டால் ஒண்டைக் கூட்டித் தரத் தெண்டிக்கிறம். அதுக்கு மேலை எண்டால்

நிச்சயமாய் என்னால ஏலாது"

சொல்லிவிட்டு அம்மாவைத் திரும்பிப் பார்த்துக் கொண்டார். வசந்திக்கு அம்மாவின்வாடிய முகத்தைப்பார்க்கப்பரிதாபமாக இருந்தது.

"அப்படியெண்டால் சரிவராது. வாங்கோ நாங்கள் போவம்"

மாப்பிள்ளையின் தாயார் விருட்டென எழுந்து நடக்கத் தொடங்கினாள். மற்றவர்களும் அவளைப் பின் தொடர்ந்தனர். அவர் களது அநாகரிகச் செயலைக் கண்டு வசந்தியின் உள்ளம் தகிக்கும் அனலாகியது. அவர்களைப் பின் தொடர்ந்தவள். ஆத்திரத்தினால் நெஞ்சு படபடக்க, சுட்டெரிக்கும் வார்த்தைகளை அள்ளி வீசினாள்.

"நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேட்டுக் கொண்டு போங்கோ. உங்கடை மகனுக்கு நீங்கள் காசைச் செலவழிச்சுப் படிப் பிச்சுப் போட்டியள் எண்டு எங்களிட்டைச் சொல்ல உங்களுக்கு வெட்க மில்லையா? என்னையும் அப்பா படிப்பிச்சவர் தான் உங்கடை மகன் மட்டும் தான் சம்பளம் எடுக்கிறவர் என்று நினைக்காதையுங்கோ நானும் தான் உழைக்கிறன். ஏன் நாங்கள் உங்களிட்டை இதையே திருப்பிக் கேட்கக் கூடாது? என்ரை தங்கச்சிமாருக்கு நீங்கள் காசு கொடுக்கத் தயாரா? இனியாவது கொஞ்சம் சிந்திச்சு நடந்து கொள்ளுங்கோ" மளமளவென்று பொரிந்து தள்ளிவிட்டுத் திரும்பினாள் வசந்தி. மகளின் வார்த்தைகளில் நியாயம் இருப்பதை உணர்ந்து கொண்ட தாயும் தந்தையும் செய்வதறியாது வாயடைத்துப்போய் நின்றனர்.

மாப்பிள்ளையின்தாயினது குரல்மட்டும்தெளிவாகக்கேட்டது;

"நல்லகாலம் தப்பிட்டம். பெட்டை சரியான வாய்க்காரி போல கிடக்குது வசந்தியின் சீற்றம் தணிய நெடு நேரம் எடுத்தது. "திருமணம்" என்ற சொல்லே அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆணை யும் பெண்ணையும் வெவ்வேறு கண்ணோட்டத்தில் பார்க்கும் இந்தச் சமூகத்தை அவள் அடியோடு வெறுத்தாள். பெற்றோரிடம் தனது நிலைப்பாட்டை விளக்கியவள், லீவு முடிந்ததும் யாழ்ப்பாணத் திற்குப் புறப்பட்டு விட்டாள்.

வருடங்கள் நான்கு நகர்ந்து விட்டன. இன்னமும் வசந்தி தன் நிலையிலிருந்து விலகவில்லை.

இன்று வசந்தி தன் கடமையுடன் ஒன்றிவிட்ட ஒரு டாக்டர் புனிதத்தன்மையுடன் செயற்படும் அவள் காலநேரம் பார்க்காத ஒர சேவகியாக விளங்குகிறாள். நோயாளர்கள் அவளை அம்மா! என்று அழைக்கும் போது தாயாகவே மாறி அவர்களை அன்பினால் அரவணைப்பாள். விழுப்புண் அடைந்து வரும் நோயாளரைச்

சிகிச்சையினால் மட்டுமல்ல அன்பினாலும் பராமரித்து மனநிறை வெய்துவாள்.

***

வசந்தியின் விரக்தியில் நியாயமிருப்பதை நாதன் உணர்ந்து கொண்டான்.

"டொக்டர் என்னுடைய பிடிவாதத்தினை ஏதும் பிழையிருக் கிறதாய் நான் நினைக்கேல்லை. யாராவது என்னையே மட்டும் விரும்பி என்னை மணக்க முன்வந்தால் நான் அதை மறுக்கப் போற தில்லை. தவிர, பணத்திற்காகவே பேரம் பேசி என்னைக் கடிமணம் புரிய வருபவர்களை நான் மணக்கத் தயாராயில்லை இந்தப்புனித பணியே எனது இலட்சியமாக வாழ்ந்து விட்டுப் போகிறேன்"

"வசந்தி! உமது இலட்சியமும் பிடிவாதமும் நியாயமானதென நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால்... என்னையறியாமலே எனது மனம் உம்மை ஆழமாக நேசிக்கத் தொடங்கி விட்டதை என்னால் உணர முடிகிறது நீர் சம்மதித்தால் நாமிருவருமே இந்தப் புனித பணியை இலட்சியமாக ஏற்று வாழலாம். என்ன சொல்கிறீர்?"

நாதனின் உணர்ச்சி பூர்வமான வார்த்தைகளைக்கேட்டு வசந்தி திடுக்கிட்டுப் போனாள். சற்றும் எதிர்பார்த்திராத இந்தக் கேள்வி, அவளது வதனத்தை நிலம் நோக்க வைத்தது.

நீண்ட நேரம் நிலவிய மௌனத்தை நாதனே களைந்தான். "வசந்தி! பிளீஸ் டேக் யவர் ஒன் டைம். ஆறுதலாய் யோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வாரும்"

நாதனின் அந்த வார்த்தைகள் இப்போதும் வசந்தியின் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. நான்கு நாட்களாக அவளை ஆட்டி, அலைக்கழித்த மனக்குரங்கை ஒரு படியாக நிலைக்குக் கொண்டு வந்து விட்டாள்.

தீர்க்கமான ஒரு முடிவை எடுத்துக் கொண்டான்.

அவளது கை பெற்றோருக்குச் சந்தோஷமான செய்தி ஒன்றை எழுதிக் கொண்டிருந்தது.

அவளது வாழ்வு மலருவதற்குத் தடைக்கல்லாக இருந்த அவளது இலட்சியத்தை நிறைவேற்ற நாதன் முன் வந்திருப்பதை நிச்சயமாக அவர்கள் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையுடன் எழுதிக் கொண்டிருந்தாள்.

- ஈழநாதம் - 30.09.1994

# மீண்டும் நாளை வருவான்

*ஆழ்ந்த உறக்கத்திலிருந்த நான் அம்மாவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தேன். "தம்பி ஆதவன்! என்ன இண்டைக்கு இவ்வளவு நேரமும் நித்திரை கொள்ளுறாய். இண்டைக்கு வகுப்பில்லையே?"*

*"இப்ப எத்தினை மணியிருக்கும்" மனதுக்குள் நினைத்தவாறே சோம்பல் முறித்துக் கொண்டு எழும்பிய நான், மேசையிலிருந்த அலாரம் மணிக் கூட்டை நோக்கிப் பார்வையைத் திருப்பினேன்.*

*நேரம் சரியாக 6-30 ஐக் காட்டியது. மருத்துவ பீட மாணவனாகிய நான், இரவு நீண்ட நேரம் விழித்திருந்து படித்ததினால், என்னையறியாமலே இத்தனை நேரம் தூங்கிவிட்டேன். அவசரமாக எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு அம்மா தந்த கோப்பியைச் சுவைத்தவாறே அன்றைய தினசரியை எடுத்துப் பிரித்தேன். பிரித்ததுதான் தாமதம் என் விழிகள் அகலத் திறந்தவாறு அப்படியே நிலைகுத்தி நின்று விட்டன.*

*அந்தப் பத்திரிகையின் முன் பக்கத்தில் என் ஆருயிர் நண்பன் கண்ணனின் படமல்லவா அது...*

*என்னையறியாமலே எனது கண்கள் அதில் பிரசுரிக்கப்பட்டிருந்த தலைப்புச் செய்தியை மேய்ந்தன.*

*"கிளாலிக் கடலில் கரும்புலித் தாக்குதல்"*

*நடுங்கும் கரங்களால் பத்திரிகையைப் பிடித்த வாறு, என் கண்ணனை உற்று நோக்குகிறேன். கறுப்புச் சீருடையில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கறுப்புத்*

தொப்பியுடன் காட்சியளித்த அவனது கண்களில் தோன்றியது... பெருமிதமா?... இல்லை காலனையும் வென்றுவிட்ட கர்வமா?... அல்லது இலட்சிய வெறியா?... என்னால் எதையுமே கிரகிக்க முடியவில்லை.

எனது பார்வை பத்திரிகையின் கீழ்ப்புறத்தைத் தாவியது. அங்கே... என் ஆருயிர் நண்பன் கண்ணன் பக்திப் பரவசத்தில் தனை மறந்து நிற்கும் ஞானிபோல் எமது தேசியத் தலைவரின் அரவணைப் பில் நின்றான். என் மனத்தில் இனம் புரியாத ஒரு சலனம்... கண்களை இருட்டிக் கொண்டு வரவே, மெதுவாகப் போய் அருகிலிருந்த சோபா வில் அமர்ந்து கொண்டேன். எனது மேனியெங்கும் புல்லரித்து, உடல் சோர்ந்து, விறைத்துப் போவதை என்னால் உணர முடிந்தது. கண்களை இறுக மூடிக்கொண்டேன்.

பள்ளிப்பருவம் பசுஞ்சோலையில் பவனி வந்த அந்த நாட்கள்... நெஞ்சத்தில் நிறைந்த நினைவுகள்... இன்னும் பசுமையாய் எனது உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

நகரில், பிரபல்யமான அந்தக்கல்லூரியில் ஆண்டு ஒன்பதில் அன்றுதான் நான் காலடி எடுத்து வைக்கிறேன். தயங்கியவாறு பட படக்கும் நெஞ்சத்துடன் வகுப்பறையைச் சுற்றி ஒருதரம் நோட்ட மிட்ட போது, கணீரென்ற குரல் ஒன்று கேட்கிறது.

"ஹலோ ! நியூகம்மர், உம்முடைய பெயர் என்ன?"

இப்படித்தான் கண்ணன் எனக்கு அறிமுகமாகினான். கல்வி யில் மிகுந்த ஆர்வமுடையவனாய்த் திகழ்ந்த அவன் சகமாணவர் களையும் ஊக்குவிப்பான். எனது முன்னேற்றத்திற்கு முக்கிய காரணியாய் இருந்த அவனை எப்படி என்னால் மறக்க முடியும்...?

"ம்!" - நீண்ட பெருமூச்சொன்று வெளிவருகிறது. ஒரு முறை விம்மித் தணிந்த மார்பைக் கையால் பொத்திப் பிடித்துக் கொள்கிறேன்.

வள வளவென்று எந்நேரமும் ஏதாவது கதை அளந்து கொண்டிருக்கும் அவனது வாய் இப்போது ஓய்ந்து போய் விட்டதா?...

வார்த்தைகளால் வம்புக்கு இழுத்து, சிலேடையாகப் பேசிச் சாடி விட்டுப் பின்னர் புன்முறுவல் பூத்து நிற்கும் அந்தப் பொன் மேனி உருக் குலைந்து போய் விட் டதா? ..

ஒரு நாள் அவனுடைய வீட்டிற்குப் போயிருந்த ஞாபகம் எனக்கு இப்போது வருகிறது. வீட்டின் முன் அமைந்திருந்த

பூந்தோட்டத்தைச்சுட்டிக் காட்டி,

"மச்சான் ஆதவன்! பாத்தியே என்ரை பூந்தோட்டத்தை என்ரை பொழுது போக்கு இதுதான்"

பூத்துக் குலுங்கிய பல்வேறு வண்ணப் பூக்களால் நிறைந்திருந்த அந்தப்பூந்தோட்டத்தைப் பார்த்து நான் பிரமித்து நின்றேன். ஒரு சாடிக்குள் வளர்ந்திருந்த றோசாச் செடியின் கிளைகள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு நிறப்பூக்கள் மலர்ந்திருந்தன

"ஆதவன்! இதைப் பார்த்தியே எல்லாம் நானே தான் ஒட்டின நான்"

பெருமையுடன் சொல்லிக் கொண்டாலும் குழந்தைத் தனம் அதில் இழையோடியது.

"கண்ணன்! என்னெண்டு நீ இதைப் பராமரிக்கிறாய்? எனக் கெண்டால் எந்த நேரமும் படிப்பும் ரியூசனுமெண்டு திரியிறதில அலுத்துப் போகுது"

"ஆதவன்! எனக்கெண்டால் ஒரு நிமிசத்தையும் வீணாய்ச் செலவழிக்கிறது பிடிக்காது. எந்த நேரமும் எதையாவது பிரயோசன மாய்ச் செய்து கொண்டிருக்க வேணும். ஒய்வு கிடைக்கிற போதெல்லாம் இந்தத் தோட்டத்துக்குள்ள தான் ஏதும் செய்து கொண்டிருப்பன்"

ஆம் அவன் அன்று சொன்ன வார்த்தைகள் உண்மையானது தான் அவன் அதைச் செயலிலும் நிரூபித்துக்காட்டி விட்டான். தன் வாழ்வின் கடைசி நிமிடத்தையும் பயனுள்ள தாக்கி, ஒரு மாபெரும் சாதனையை நிலை நாட்டி விட்டுப் போய்விட்டான்.

நாங்கள் ஏ. எல் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்த காலப்பகுதி அது ஓ.எல் பரீட்சையில் எட்டுப்பாடங்களிலும் அதி விசேடசித்திபெற்று எங்கள் கல்லூரியிலேயே முதன்மையாக விளங்கிய கண்ணன் மீது அதிபரும், ஆசிரியர்களும் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். அந்தச் சமயத்தில் தான் ஸ்ரீலங்கா அரசுடனான இரண்டாவது யுத்தம் மூண்டது, யாழ். கோட்டை விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குட்பட்டிருந்த அந்த நாட்களில் பொம்மர்களும் உலங்கு வானூர்திகளும் வானில் பறந்து குண்டுகளை வீசி எம் மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தன.

எனக்கு வீட்டில் பலத்த கட்டுப்பாடு. வீட்டை விட்டு வெளியே போக அம்மா அனுமதிக்கமாட்டாள். ஒரு நாள் மாலைப் பொழுதில் கண்ணனின் அப்பா என்னைத்தேடி வந்தார்.

"இவன் கண்ணன் வந்தவனே தம்பி?"

"இல்லை அங்கிள், ரியூசன்கள் நிற்பாட்டின பிறகு நான் அவரைச் சந்திக்கவே இல்லை. அம்மா வீட்டை விட்டு வெளிக்கிட விடுறதில்லை. அதாலதான் நான் வீட்டையும் வரயில்லை"

இல்லைத் தம்பி. கண்ணனைக் காலையில இருந்து காணேல்ல. எப்படியும் மத்தியானம் சாப்பிட வீட்டை வந்திடுறவன். அவனுக்குத் தெரியும் தான் சாப்பிடாட்டில் அம்மாவும் சாப்பிட மாட்டா எண்டு ஏனோ.... இன்னும் காணேயில்லை. எதுக்கும் விசாரிச்சுப் பாப்பம்"

சொல்லிவிட்டுப் போய்விட் டார் அவர்.

சில நாட்களின் பின் அவன் இயக்கத்துடன் இணைந்து விட்டதாகக் கதை பரவியது. என் உள்ளத்தில் ஓர் அரிப்பு.

ஏன் அவன் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டான்? வகுப்பில் முதல் மாணவனாக ஆசிரியர்களே வியக்கும் வண்ணம் கல்வியில் ஒரு வித்தகனாகவே விளங்கி வந்த கண்ணன் எப்படிக் கல்வியை மறக்கத் துணிந்தான்?

இந்தக் கேள்விக்கு என்னால் விடைகாண முடியவில்லை. நாட்கள் நகர்ந்தன பாடசாலைகள் வழமையாய் இயங்கத் தொடங்கின. நான் படிப்பில் கவனத்தைச் செலுத்த முற்பட்டாலும் கூட, அடிக்கடி கண்ணனின் நினைவு வந்து என்னை அலைக்கழிக்கும். மாணவர்கள் நாங்கள் ஒன்றுகூடி ஒரு பாடத்தை பயிலும் போது சிக்கலான ஒரு வினாவுக்கு விடையைத் தேடும் சமயம் கண்ணனின் பெயர் அடிபடும்.

எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் குறிப்பிட்ட திகதியிலிருந்து ஏழு மாதங்கள் பின்போடப்பட்டு ஒருவாறு ஏ. எல். பரீட்சையும் நடந்து முடிந்தது. நான் ஒரு மங்கிய மாலைப் பொழு தில், கோயில் வீதியால் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தேன்.

"என்னடாப்பா! எப்படிப் போகுது. எக்ஸாம் எல்லாம் வடி வாய்ச்செய்தியோ?" கண்ணனுக்கே சொந்தமான அந்தக் கணீரென்ற குரல் கேட்டு நான் திடுக்கிட்டவனாய் திரும்பிப் பார்த்தேன்.

கண்ணன் தான் சைக்கிளை விட்டிறங்கி என்னிடம் வந்து கொண்டிருந்தான். இருவரும் சிறிது நேரம் மனம் விட்டுப் பேசினோம். எனது மனதில் உறுத்திக் கொண்டிருந்த அந்தக் கேள்வியை நான் அவனிடம் கேட்டேன்.

“கண்ணன்! ஏன் நீ இப்பிடியொரு முடிவுக்கு வந்த நீ எங்கட பிரின்சிப்பலும், ரீச்சர்ஸ்களும் கூடச் சரியாய்க் கவலைப்பட்டவை. அவை உன்னிலை வைச்சிருந்த ஹோப், எல்லாத்தையும் வீணாக்கிப் போட்டியே?”

அங்கலாய்ப்புடன் சொன்னேன். புன்சிரிப்பொன்றை உதிர்த்தான் அவன்.

“மச்சான்! நீ என்னைப் புரிஞ்சு கொள்ளாதபடியால் தான் இப்பிடிக் கேக்கிறாய்.”

கோட்டைப் பிரச்சினை நடந்த அந்த நாட்களில் சகடை போட்ட குண்டிலை எங்கடை கிளாஸ்மேற் ரகுவின்ரை தம்பி உருக் குலைஞ்சு செத்தது உனக்கு ஞாபகமிருக்குதே?”

“ஓ!... அந்த நாட்களில் அம்மா என்னை வீட்டை விட்டு வெளியில போக விடுறதில்லை. அது தான் நான் ரகு வீட்டை செத்த வீட்டிற்குக் கூடப் போகேல்ல”

“என்ன ஆளடாப்பா நீ. நான் அங்கை போன போது, அந்தப் பிள்ளையின்ரை “பொடி” வைச்சிருந்த பெட்டிக்கு மேல விழுந்து அவயின்ரை அம்மாவும், அக்காமாரும் அழுததை நேரில பாத்தன். என்ரை மனதில் ஒரு விறைப்பு இரண்டு நாளாய் இருந்தது யோசிச்சுப் பார்த்தன்.

“அடிமைத் தனத்திற்கு மூலம் கொடுங்கோலனுடைய பலம் அல்ல, அடிமையவன் கோழைத் தனம்”

இந்த வரிகள் எனக்கு ஞாபகம் வந்தது. உறுதியான ஒரு முடிவை எடுத்துக்கொண்டன். அவ்வளவு தான்.

அவனது வார்த்தைகளில் எனது கோழைத்தனம் சுட்டிக் காட்டப்படுவது போல் எனக்குத் தோன்றியது. சிறிது நேரத்தில் என்னிடம் விடை பெற்றுக் கொண்டான்.

மீண்டும் ஒரு முறை அவனைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. எங்களுடன் மருத்துவ பீடத்தில் பயிலும் தென் தமிழீழ நண்பர்கள் சிலரை வழியனுப்புவதற்காகக் கிளாலித் துறைமுகத் திற்குப் போயிருந்தோம்.

திடீரென்று யாரோ என் தோளில் தொட்டதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினேன்.

என் பால்ய நண்பன்... கண்ணன் சிரித்தவாறு நின்று கொண்டிருந்தான்.

“என்னடாப்பா! அங்காலை போகப் போறியே?”

“இல்லை மச்சான். என்ரை பாட்ச் மேற்ஸ் வக்கேசனுக்கு அங்காலை போகப் போகினம் அது தான் வழியனுப்ப வந்த நான்”

அவனுக்கு எனது நண்பர்களை ஒவ்வொருவராக அறிமுகம் செய்தேன்.

மிகுந்த அக்கறையுடன் அவர்களைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டான், நீண்ட நாட் பழகியவன் போல் அவர்களுடன் சகஜமாக உரையாடினான். என்னிடம் படிப்பைப்பற்றியும் விசாரிக்கத் தவறவில்லை. நானும் அவனைப் பற்றி அறிய விரும்பினேன்.

“கண்ணன் இப்ப நீ இஞ்சையே நிக்கிறாய்”

“ஆதவன், போன வருசம் கிளாலிக் கடலுக்குள்ள வைச்சு நேவி செய்த அட்டூழியங்கள் கொஞ்சமே. நீயும் அறிந்திருப்பாய்தானே. எனக்கு அவர்களுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்ற கொதிப்பு மனதிற்குள்ளே உண்டு”

சொன்னவன் சில நிமிட நேரம் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரெனச் சொன்னான்

“நிச்சயமாய் இந்தக்கடல் எங்கடை ஆதிக்கத்துக்கை வரும். அப்ப... எங்கடை மக்கள் சுதந்திரமாக இந்தக் கடலில உலா வருவினம்”

ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் தனது பாண்ட் பைக்குள் கையை விட்டு ஒரு டைரியை எடுத்து என்னிடம் தந்தான்.

மச்சான் ஆதவன்! உனக்குத் தெரியும்தானே. என்னாலை ஒரு நொடியும் சும்மா இருக்க ஏலாதெண்டு எனக்கு நேரம் கிடைச்ச போதெல்லாம் என்ர மன உணர்வுகளைக் கவிதையாய் எழுதி வைச்சிருக்கிறன். உனக்கு நேரம் கிடைக்கைக்க வாசிச்சுப் பார். என்ன !...

வள்ளங்கள் புறப்படும் நேரம் நெருங்கி விட்டதால் பாதுகாப்பு வழங்கும் பொறுப்புக்களைக் கவனிக்க வேண்டியிருப்பதாகக் கூறி, எம்மிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

அவன் போன பின் நான் எனது நண்பர்களுக்கு அவனது கதையைக்கூறினேன். அவர்கள் ஆச்சரியத்தால் வாயடைத்துப் போய் நின்றார்கள்.

இப்போது எனது சிந்தையில் அவனது டைரியின் நினைவு வரவே, என் உணர்வலைகள் சுய நினைவைப் பெறுகின்றன. எழுந்து போய் எனது மேசை லாச்சிக்குள் பத்திரமாக வைத்திருந்த அந்த

டைரியை எடுத்து வந்து பக்கத்தைப் புரட்டுகிறேன். முதற்பக்கத்தில் அவனது முத்தான கையெழுத்தினால் சிலவரிகளைப் பதிவு செய்திருந்தான்.

"உயரிய கொள்கைக்காக தமது வாழ்வை அர்ப்பணிக்கத் துணியாத நபர் வாழ்வதற்கே தகுதியற்றவர்"

தனது தாயகத்தை மீட்டிட வேண்டுமென்ற உயர்ந்த கொள்கைக்காகத் தனது வாழ்வை மட்டுமல்ல, உயிர், உடல் அனைத்தையுமே அர்ப்பணித்து விட்ட அந்தத் தியாகியை எண்ணி என் மனம் ஏங்கித் தவிக்கிறது ஒருகணம். மறுகணமே என்னுள் ஓர் நம்பிக்கை துளிர்க்கிறது. தாயகக் கனவைத் தன் நெஞ்சினில் சுமந்து, தாயகத்தின் விடிவுக்காய் தன் இறுதி மூச்சை வெப்பமாய் உமிழ்ந்து எதிரியை அத்தீயினால் சுட்டுப் பொசுக்கித் தமிழீழ வரலாற்றில் மாபெரும் சாதனை படைத்துவிட்ட அந்த மாவீரனது ஆன்மா, தாயகத்தை மீட்கும் வரை ஓயாது. தணியாத இலட்சிய வேட்கை யுடன், தாயக மீட்பில் பங்கேற்க மீண்டும் நாளை உருவெடுக்கும். இது நிச்சயம்.

- ஈழநாதம் - 8.7.1994

# பங்களிப்பு

*அந்த அகால வேளையிலும், யாழ் போதனா வைத்தியசாலை சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டி ருந்தது. இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் சேவையின் சின்னமாக விளங்கிக்கொண்டிருக்கும் அந்த வைத்தியசாலையில் பொறுப்புணர்ச்சி மிக்க டாக்டர்களும், கடமையே கண்ணாகக் கருதும் மருத்துவத் தாதியரும், ஊழியர்களும், இன்னும் இயல்பான இனப்பற்றுதலால் உந்தப்பட்டு நேசக்கரம் கொண்டு நோயாளர்களை அணைத்து ஆறுதலளிக்கும் நலன்விரும்பிகளுமென அனைவரது செயல்பாடு களும் துரிதகதியில் நடை பெற்றுக் கொண்டிருந்தன.*

*நுழைவாயிலில் அடிக்கடி வாகனங்கள் வந்து நிற்பதும் காயமடைந்தவர்கள் உடனுக்குடன் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படுவதுமாய் அந்தப் பிரவேசப் பகுதி அமளிதுமளிப்பட்டது அங்கு கடமையாற்றுபவர்களது முகங்கள் இறுகிக் கிடப் பதை அவதானிக்க முடிந்தது. பொறுப்புணர்ச்சி, புரிந்துணர்வு என்ற அடிப்படையைக் கொண்டு அங்கு எல்லோரது செயற்பாடுகளும் அமைந்திருந்தன.*

*ஆபரேசன் தியேட்டர் அமைதியாக, ஆனால் சுறுசுறுப்புடன் இயங்கிக்கொண்டிருந்தது. அங்கே அறுவைச் சிகிச்சை நிபுணராக அண்மையில் லண்டனி லிருந்து திரும்பியிருந்த டாக்டர் ராகவனது தலைமை யின் கீழ் சிகிச்சைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. காயமடைந்தவர்களது உறுப்புகளில் ஊடுருவிக் கிடந்த சன்னங்கள் ஷெல் துண்டுகள் முதலியவற்றை*

அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி இளைபோட்டு வார்ட்டுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

பிரத்தியேகமான சில கேஸ்களை ராகவனே கையாண்டான். தலையில் பலத்த காயத்துடன் ஒருவரை அவசரமாக ஸ்ரெச்சரில் வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தனர். அந்த நோயாளியினது மண்டை யின் பிற்பகுதி சேதமடைந்திருந்தது. ராகவன் முழு நம்பிக்கையுடன் அந்த நோயாளியைக் காப்பாற்ற முயற்சித்தான். அவனது கைகள் ஏறக்குறைய இரண்டு மணித்தியாலங்கள் இயங்கிய பின்னர், உதவி டாக்டர்கள் அந்தக் காயமடைந்தவரின் மண்டையைச் சுற்றி கட்டுப் போட்டனர். I.C.U எனும் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அந்த நோயாளி அனுப்பி வைக்கப்பட்டான்.

நோயாளரின் வருகை ஸ்தம்பித்துவிட்டதனால் டாக்டர் ராகவன் ஆபரேசன் தியேட்டரை விட்டு வெளியேறி அவசரமாகத் தீவிர சிகிச்சைப் பிரிவை நோக்கி நடந்தான். வார்ட்டினுள் நுழைந்தவன் ஒரு கணம் தனது பார்வையை வார்ட் முழுவதிலும் சுழல விட்டான்.

அங்கே... டாக்டர் சுகந்தி மண்டையில் கட்டுப்போட்டிருந்த அந்த நோயாளியின் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துக் கொண்டி ருந்தாள். இரவு முழுவதும் நித்திரை விழித்திருந்ததால் அவளது விழிகள் சிவந்து கிடந்தன. ராகவன் அவளருகே சென்றதும் அவள் இருக்கையை விட்டு எழுந்து கொண்டாள். ஒவ்வொரு நோயாளி யினது விபரங்களை விபரித்துக் கொண்டே அவனுக்கு வார்ட் முழுவதையும் சுற்றிக் காண்பித்தாள். எல்லாக் கேஸ்களையும் பார்த்து முடித்ததும் ராகவன் அவளிடம்

“சுகந்தி! நான் குவாட்டஸ்க்குப் போய் கொஞ்ச நேரம் றெஸ்ட் எடுக்கலா மென்று யோசிக்கிறன்”

“அதுக்கென்ன, போய் றெஸ்ட் எடுங்கோ நான் டியூட்டி முடிய வாறன்”

சொன்னவள் ராகவன் நடந்து போவதையே கண் இமைக் காது பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது மனத்தில் தோன்றிய பெருமிதம் பார்வையினூடாக வெளிப்பட்டது. அவளுக்கு அந்த நேரத்திலும் தான் வாசித்த “மாக்ஸீம் கோர்க்கி” யின் சில வரிகள் ஞாபகத்தில் வந்தன.

“நமது உரிமைகளுக்காகப் போராடும்போது மக்கள் ஒன்று திரண்டு ஒருவரோடொருவர் பிணைந்து நின்று நாமெல்லாம்

உரிமையை இழந்தவர்கள் என்ற உண்மையை உணர்ந்தாலன்றி நமது உரிமைகளைப் போராடிப் பெறமுடியாது”

எவ்வளவு உண்மை பொதிந்த வார்த்தைகள் என எண்ணியவள், வார்ட்டினுள் தனது பார்வையைத் திருப்பி நோட்டமிட்டாள் எல்லா நோயாளிகளும் சலனமின்றி இருப்பதாக அவளது உணர்வுக்குத் தோன்றியது. அவளது கால்கள் தனது பிரத்தியேக அறையை நோக்கி நடந்தன.

சற்று ஓய்வாகக் கதிரையில் அமர்ந்து கொண்டவளின் நினைவலைகள் பின் நோக்கிப் பாயத்தொடங்கின.

சுகந்தி அப்போது ஏ.எல். வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அவளது அத்தான் டாக்டர் ராகவன் “ஸ்காலர்சிப் மூலம் மேற்படிப்பை மேற்கொள்ள லண்டனுக்குப் புறப்பட்ட வேளையது சுகந்தி மாமா வீட்டிற்கு போயிருந்தாள் மாமா, ராகவனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியவாறே அவளைக் கேலி செய்தார்.

“சுகந்தி ஒரே முறையில் மெடிசினுக்கு என்ர பண்ணிப்போடு சோதினையில கோட்டை விட்டியோ பிறகு கொத்தானையும் கோட்டை விட்டிடுவாய்”

இப்போதும் அந்த வார்த்தைகள் அவளது காதில் ஒலிப்பது போலிருக்கின்றது. மாமாவின் வேண்டுகோளைச் சுகந்தி நிறைவேற்றி விட்டாள். அல்லும் பகலும் முழு மூச்சுடன் முயன்று தன் பெயருக்குப் பின்னால் எம். பி. பி. எஸ். என்ற பட்டத்தைச் சேர்த்துக்கொண்டாள். சுகந்தி யாழ் போதனா வைத்தியசாலையில் டாக்டராகக் கடமை யேற்றபோது, ராகவனும் தன் பெயருடன் பல பட்டங்களைச் சுமந்து கொண்டு தாயகம் திரும்பினான்.

ராகவனுக்கு வரும் வழியில் பிரயாணத்தினால் ஏற்பட்ட கஷ்டங்கள் வெறுப்பைத் தந்தது. லண்டனிலிருந்து புறப்பட்டு பன்னிரண்டு மணி நேரத்திற்குள் கொழும்பிற்கு வந்து இறங்கியவனுக்கு, யாழ்ப்பாணம் வந்து சேரச் சில நாட்கள் சென்றன. அதுவும் கரிய இருட் பொழுதினில் கிளாலிக் கடலைக் கடந்த அனுபவம் அவனுக்கு வாழ்க்கையையே வெறுக்க வைத்தது. ஒரு கணம், தான் இங்கிருந்து புறப்பட்டபோது “லக்ஸறி” பஸ்ஸில் சொகுசாக அமர்ந்து ஏதோ சினிமாப் படமொன்றைப் பார்த்தவாறு குஷியாகப் பயணித்த சம்பவத்தை நினைத்துக் கொண்டான். எவ்வளவு மாற்றங்கள் இந்த மண்ணில் ஏற்பட்டிருக்கின்றன. மண்ணெண்ணெய் புகையைக் கக்கிக் கொண்டு திரியும் வாகனங்களைப் பார்க்க அவனுக்கு

*வயிற்றைக் குமட்டியது. அத்துடன் மின்சாரம் இல்லாமல் குப்பி விளக்குகளுடன் இருளில் வாழும் மக்களைப் பார்க்க அவனுக்கு மேலும் வெறுப்பை ஊட்டியது. கடந்தபல ஆண்டுகளில் எந்த ஒரு வேலையையும் மின்சாரம் மூலமே செய்து பழக்கப்பட்டு விட்டவனுக்கு இவை சலிப்பைக் கொடுத்தது வியப்பில்லைத்தான்.*

*ராகவன், சுகந்தியைத் திருமணம் செய்து கொண்டு லண்ட னுக்குத் திரும்பிவிடுவதெனத் தீர்மானித்தான். இருவரது பெற்றோர் களும் திருமண ஆயத்தங்களைச் செய்வதில் ஆரவாரத்துடன் ஈடுபட்டனர்.*

*சுகந்தியைச் சந்தித்த ராகவன் தனது தீர்மானத்தை வெளியிட்டான். அதிர்ந்து போனாள் சுகந்தி. அவள் இதைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. இந்த மண்ணை விட்டு அந்நியப் பட்டுப்போவதென்பது அவளால் முடியாத காரியமென்பதை அவள் ராகவனுக்குச் சற்றுத் தயக்கத்துடன் வெளியிட்டாள். அவளை அன்றாடம் சந்திக்கும் நோயாளரின் முகங்கள் அவளெதிரே தோன்றி நியாயம் கேட்பதை உணர்ந்தாள். "எங்கள் இனத்தவரை இங்கே நிர்க் கதியாய் விட்டுவிட்டு அந்நியருக்குச் சேவை செய்யப்போகிறாயா?"*

*முடியவில்லை. அவளால் அதை சிந்திக்க முடியவில்லை. ஒரே பிடியாகத் தான் ஊரை விட்டு வர முடியாது என மறுத்து விட்டாள்.*

*ராகவன் எவ்வளவோ சொல்லிப்பார்த்தான், "சுகந்தி வசதி களையும், வாய்ப்புக்களையும் உதறி விட்டு இங்கை இருந்து நீர் என்ன சுகத்தைக் காணப் போகிறீர்?"*

*"அத்தான்! இங்கை ஆகக் குறைந்த வசதியோடை இருந்தாலும் கூட எங்கடை சனங்களுக்கு, எங்கடை மண்ணுக்காக என்று சேவை செய்யிறபோது என்ரை மனம் குளிர்ந்து போகுது. அதிலை கிடைக்கிற நிம்மதி போதும் எனக்கு. தயவு செய்து நீங்கள் என்னை மறந்திடுங்கோ"*

*ஒரே முடிவாகச் சொல்லி விட்டாள் சுகந்தி. ராகவனால் அவ்வளவு எளிதில் சுகந்தியை மறந்து விட முடியவில்லை. அவளை மட்டுமல்ல. அவளது ஆணித்தரமான வார்த்தைகளையும் தான்.*

*ராகவன் இப்போது சிந்திக்கத் தொடங்கினான். சுகந்தியின் பிடிவாதத்தில் நியாயமிருப்பதை முதன்முதலாக அவனது உணர்வுகள் சீரணிக்கத் தொடங்கின. நீண்ட சிந்தனையின் பின் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். தாயகத்திலேயே தங்கித் தனது பணியைத் தொடருவதென உறுதியெடுத்துக் கொண்டான்.*

*"டொக்டர்! எட்டாம் நம்பர் பெட்ல இருக்கிற பேஷண்டுக்கு பிற்ஸ் மாதிரிக்கிடக்கு ஒருக்கா வந்து பாருங்கோ"*

*நர்ஸின் குரல் அவளது சிந்தனைத் தொடரை அறுத்து கடமைக்கு அழைப்புவிடுத்தது. சுகந்தி அவசரமாக எழுந்து போனாள். அந்த நோயாளியின் குணம் குறிகளைச் சிறிது நேரம் அவதானித்தவள் நாடியோட்டத்தைப் பரிசோதித்த பின் நர்ஸிடம் ஏதோ ஊசி மருந்தைக் கொண்டுவரும்படி ஏவினாள் நர்ஸ்கொண்டு வந்து கொடுத்த மருந்தை நாளத்தின் மூலம் அந்த நோயாளியின் உடலில் செலுத்தினாள் சிறிது நேரத்தில் வலிப்புத் தணிந்து நோயாளி உறக்கத்தில் ஆழ்ந்து போனான். மீண்டுமொரு முறை நாடித் துடிப்பை பரிசோதித்து விட்டுச் சுகந்தி தன் இருக்கைக்குத் திரும்பினாள்.*

*இப்படியாக அந்த வைத்தியசாலையில் உயிர் காக்கும் பணி ஓய்வு ஒழிச்சலின்றி நடைபெற்றுக் கொண்டிருந்தது.*

*அன்றைய கடமை முடித்துப் புறப்பட்ட சுகந்தியை இரத்த வங்கியில் கடமையாற்றும் அவளது சக தோழி டாக்டர் உமா சந்தித்தாள்.*

*"சுகந்தி! உம்முடைய அத்தான், டொக்டர் ராகவன் இன்றைக்கு வந்து பிளட்டொனேற் பண்ணினவர்"*

*"உண்மையாகவே சொல்லுறீர் உமா!"*

*அவளது கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. மறுகணம் அவளது கண்களில் நீர்த்துளிகள் தோன்றிப் பளபளத்தன உமாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை கண்களைத் துடைத்துக் கொண்டே சுகந்தி சொன்னாள்.*

*"உமா: நான் சரியாய் உணர்ச்சி வசப்பட்டுப் போனேன். அத்தான் லண்டனில் இருந்து வந்த நாட்களில் அவருக்கு எங்கள் மண்ணைப் பற்றிய நிலைமை விளக்கமில்லாமல் இருந்தது. ஆனால்... இப்ப அவர் முற்றாக மாறிப் போயிட்டார், என்று நினைக்க எனக்குச் சந்தோஷத்தில கண்ணீரே வந்திட்டுது."*

*"சுகந்தி! நான் பயந்து போனேன், நீர் அழுகிறீராக்கும் என்று நினைச்சிட்டன்" பேசிக் கொண்டே தோழிகள் இருவரும் தங்கள் தங்குமிடங்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர்.*

*அன்று பகல் முழுவதும் ராகவனைச் சந்திக்க முடியவில்லை. அவசர ஆபரேசன் கேஸ்கள் நிறைய இருந்ததால், அவற்றை முடித்துக் கொண்டு வரச் சுணங்கிவிட்டது. அவனைக் கண்டதும் சுகந்தி,*

"அத்தான்! நீங்கள் பிளட் டொனேற் பண்ணினதாய்க் கேள்விப்பட்டனான். உண்மைதானே?"

"ஓம் சுகந்தி எங்கடை மண்ணுக்காகச் சிந்தப்படுகிற இரத்தத்தை ஈடு செய்ய வேண்டியது இந்த மண்ணில வாழுற எங்கடை கடமை தானே"

"அத்தான்! உங்களுக்கு உடம்பு "வீக்" காய்த் தெரியேல்லையே."

"இல்லை சுகந்தி. இண்டைக்குத்தான் நான் நல்ல உற்சாகமாய் நின்று கேஸ்களைக் கவனிச்சிருக்கிறன். என்ரை மனத்தில் ஒரு திருப்தி ஏற்பட்டிருக்கு நானும் என்னாலான பங்களிப்பைச் செய்து போட்டன் என்று."

"ஏன் நீங்கள் செய்யிற பணியே ஒரு பங்களிப்புத் தானே. அதை மறந்திட்டிங்களே ?"

தனக்கு ஏற்பட்டிருக்கும் மன நிறைவுக்கு மூல காரணமாய் விளங்கிய சுகந்தியை அவனது மனம் மானசீகமாக வாழ்த்தியது.

மறுநாள் நகரமே விழாக் கோலம் பூண்டது. தெருக்கள் எல்லாம் சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

ராகவனது சைக்கிள் அந்தத் தெருவினால் போய்க் கொண்டிருந்தது. அவனது நெஞ்சில் இணைந்தவாறு பாரில் சுகந்தி அமர்ந்திருந்தாள். லண்டன் மாநகர வீதிகளில் மிதந்து திரியும் கப்பல் போன்ற கார்களை ஒரு கணம் ராகவன் நினைவில் மீட்டுக் கொண்டான். அதைவிட எங்கள் தெருக்களில் பவனி வரும் சைக்கிள் களில் திரிவதில் ஒரு வித உற்சாகமும் மனநிறைவும் ஏற்படுவதை அவனால் நன்கு உணர முடிந்தது. வெற்றி விழாவில் பங்கேற்பதற் காகத் தம்மை மறந்த நிலையில் போய்க் கொண்டிருந்தனர் அந்தத் தம்பதிகள்.

– ஈழநாதம் – 10.6.1994

# பரிவும் பகிர்வும்

*அந்தத் தெருவின் முகப்பில் அமைந்திருந்த அழகான சிறிய வீட்டின் பின் புறத்தில் ஒரு வாழைத் தோட்டம். வாழைகள் மிக உயரமாக வளர்ந்து இலை பரப்பிப் பசுஞ்சோலையாகக் காட்சியளித்தன. பல மாதங்களின் முன் குலை போட்ட வாழையொன்று அடியோடு வெட்டப்பட்டு விட்டதால் அவ்விடத்தில் ஒரு பள்ளம் ஏற்பட்டிருந்தது. அந்தப் பள்ளத்துக்குள் தான் அவ்வீட்டு நாயான "ஜிம்மி"யின் பிரசவ விடுதி அமைந்திருந்தது.*

*முதலில் ஜிம்மி குட்டிபோட்டிருக்கும் சேதியைக்கண்டு பிடித்தவன் அவ்வீட்டுக்காரனின் செல்வமகன் முரளிதான். எத்தனை குட்டிகள் என்று எட்டிப் பார்த்து விடத் துடித்தவனை ஜிம்மி நெருங்க விடாமல் உறுமித் துரத்திற்று. வழமையாக வாலை ஆட்டிக் கொண்டு பின்னால் வரும் ஜிம்மியின் செயல் அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. "அம்மா!" என்று அழைத்த வண்ணம் தாயிடம் ஓடினான்.*

*"அம்மா! எங்கட ஜிம்மி வாழைக் கிடங்குக்கை குட்டி போட்டிருக்குது. எத்தினை குட்டி எண்டு பாப்பமெண்டால் கிட்டப் போகவிடுதில்லை."*

*"உன்னை ஆர் அங்கை போகச் சொன்னது? குட்டி போட்ட நாய்க்குக் கிட்டப் போனால் கடிச்சுப் போடும். கிட்டப் போயிடாதை." அறிவுறுத்தலோடு அம்மா சொன்னாள்.*

*முரளிக்கோ குட்டிகளை ஆராய்ந்து பார்த்து விடவேண்டும் என்ற தாபம். அம்மாவோ பின்பக்கம் போகவிடாமல் "சென்றி". இருக்கட்டும் பேந்து*

டியூசனாலை வரயுக்கை பாபுவையும் ராஜனையும் கூட்டிக் கொண்டு வந்து கிட்டப்போய் பார்ப்பம்" முரளி மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

ஜிம்மி அவர்களது வீட்டுக்கு வந்து ஒரு வருடம் தானிருக்கும். அளவெட்டியில் ஆமி முன்னேறிய போது அங்கிருந்து வெளியேறியவர்களுடன் எடு பட்டு வந்து விட்ட ஜிம்மி களைத்துப் போய் இவர்களது வீட்டின் முன்னால் படுத்திருந்தது. மூச்சிரைத்த படி கிடந்த நாயைக் சுண்ணுற்ற முரளி பச்சாத்தாபத்துடன் அதற்குத் தண்ணீரும் வைத்து உணவும் வைக்க, அது இவர்களுடைய வீட்டிலேயே தங்கி விட்டது. முரளி அதற்கு "ஜிம்மி" என்று பெயரும் சூடிவிட்டான். அம்மாவுக் கென்றால் ஜிம்மியைப் பிடிக்கவே பிடிக்காது. அப்பாவும் முரளியும் தான் அதற்கு ஆதரவளிப்பார்கள். ஜிம்மியும் அவர்களது குடும்பத்தில் ஒரு ஜீவனாய் ஒன்றிவிட்டது.

பொழுது சாயும் வேளை. சிறுதுமியாகத் தூறத் தொடங்கிய மழை சோ! வெனப் பொழிந்து தள்ளிவிட்டது. மழைக் குளிருக்குப் போர்வையை இழுத்துப் போர்த்த படி இதமாகத் தூங்கிக் கொண்டிருந்த அப்பாவை, அம்மாவின் குரல் எழுப்பிவிட்டது. "இஞ்சருங்கோப்பா! இஞ்சை ஒருக்கா வந்து பாருங்கோ. நீங்கள் அண்டின நாய் கண் முளிக்காத குட்டியளையும் கொண்டு வந்து குசினி விறாந்தையிலை வைச்சுக் கொண்டு கிடக்குதப்பா. எனக்குப் பாக்க என்னமோ செய்யுது. குட்டியள் நெளியிறதைப் பார்த்தால் புழு நெளியிற மாதிரி வயித்தைப் பிரட்டுது." அம்மாவின் கூக்குரலால் விழிப்புற்ற அப்பா மனமில்லாமல் போர்வையை விலக்கிச் சோம்பல் முறித்தபடி. "இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமை கொஞ்ச நேரம் நிம்மதி யாய்த் தூங்குவமெண்டு நினைக்க இதென்னடா கரைச்சலாக் கிடக்கு." சொல்லியவாறே எழும்பி வந்தவர், முதற்காரியமாய் ஆட்டுக் கொட்டிலுக்குள் இடம் ஒதுக்கிக் கிடுகளால் மறைப்பும் செய்து. சாக்கு ஒன்றையும் கொண்டு போய்ப் போட்டு நாயையும் குட்டிகளையும் அங்கு குடியேற்றினார்.

அம்மா, அடிக்கடி சொல்லிக்கொள்வாள்... "இந்த நாய்க் குட்டியள் கொஞ்சம் வளந்த உடன ஆரையும் பிடிச்சுக் கறிச்சந்தைக் குள்ள கொண்டு போய் விட்டிட்டு வரச் சொல்ல வேணும். எனக்கு உதுகள் தாய்க்குப் பின்னாலை குடுகுடுவெண்டு ஓடித் திரியிறதைப் பார்த்தால் அருவருப்பாய்க் கிடக்கு சிலநேரத்திலை வீட்டுக்கையும் கூட்டிக் கொண்டு வரப்பாக்குது." அம்மாவின் வார்த்தைகள் சில சமயங்களில் முரளியின் காதுகளிலும் விழுவதுண்டு. முரளி இதையிட்டுப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. "குட்டிகளைக்

கடத்த அம்மாவால முடியுமே?" என்று பேசமாலிருந்துவிட்டான்.

ஒரு நாள் மத்தியானம் முரளி இன்னும் பாடசாலையால் வரவில்லை. அப்பா சாப்பிட்டுவிட்டு நாய்க்குச் சோறு கொண்டு வந்து வைத்தவர் நாயைக் காணாது திகைத்துப் போனார். வழமையில் அவர் சாப்பிடுவதை ஊகித்து விடும் நாய், வெளியில் தனது சாப்பாடிற்காகக் காத்திருப்பது வழக்கம் இன்று?... "உஞ்சு! உஞ்சு! ஜிம்மி! ஜிம்மி!" என்று உரக்கக் கூப்பிட்டுப் பார்த்தார். நாயைக் காணவில்லை. அம்மாவிடம் கேட்டுப்பலனில்லை என்று உணர்ந்த அப்பா. கையைக் கழுவிவிட்டுத்தானே தேடுதல் வேட்டையில் இறங்கினார்.

நாய்க்கும் குட்டிகளுக்குமெனத் தான் ஆட்டுக்கொட்டிலில் அமைத்துக் கொடுத்திருந்த இடத்தில் போய்ப் பார்த்தார். அங்கே !... ஜிம்மி படுத்திருந்தது. அப்பாவைக் கண்டதும் படுத்திருந்தபடியே வாலைச் சிறிது ஆட்டிவிட்டுப் பேசாமல் கிடந்தது அப்பாதிடுக் கிட்டார் குட்டிகள் ஒன்றையும் காணவில்லை. கிட்டப் போய்க் குனிந்து நாயின் முகத்தை உற்றுப் பார்த்தார். அதன் இரு கண்களிலும் நீர் வடிந்தபடி இருந்தது. அப்பாவிற்கு ஓரளவு விஷயம் விளங்கி விட்டது.

"இஞ்சரும் மைதிலி நாய்க் குட்டியள் எல்லாம் எங்கே?"

"உவன் கந்தசாமி வந்தாப் போலை, நான் தான் பிடிச்சுக் கொண்டு போய்ச் சந்தையடியிலை விடச் சொன்ன நான்."

"உமக்குக் கொஞ்ச மெண்டாலும் ஈவிரக்கம் இருக்கே, அங்கை போய்ப்பாரும். நாய் சாப்பிடவும் எழும்பி வராமல் கிடக்கு. கிட்டப் போய்ப்பார்த்தால் இரண்டு கண்ணாலையும் கண்ணீர் வடியுதப்பா. எனக்குப் பாக்கப் பொறுக்கேல்லை."

"உங்கடை இரக்கமும் நீங்களும். நாலு குட்டியையும், தாயையும் வைச்சு எங்களாலை சாப்பாடு போட ஏலுமே? சந்தைக்கை எண்டால் குட்டியள் அங்கினை கிடக்கிற மச்சக் கழிவுகளைத் திண்டு பிழைச்சுக் கொள்ளுங்கள். விருப்பமெண்டால் ஆரும் பிடிச்சுக் கொண்டு போயும் வளர்க்குங்கள். நாங்கள் எல்லாத்தையும் வைச்சு அரியண்டப்படுகிறதே? நல்லாய் இருக்கு உங்கட கதை."

அதற்குமேல் மைதிலியோடு கதைப்பதில் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்தான் கேசவன். மகன் முரளியும் பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்தவன் குட்டிகளைத் தேடினான். அவற்றைக் காணாத தால் அம்மாவுடன் கோபித்துக் கொண்டு சாப்பாடு வேண்டாமென அடம் பிடித்து அழுதபடி நித்திரையாகி விட்டான். இவ்வளவிற்கும்

மைதிலி மட்டும் துளி கூட அசையவில்லை.

நேரம் மூன்றரை மணியாகி விட்டது. முரளிக்கு நாலு மணிக்கு டியூசன். மைதிலி மெல்ல முரளியை எழுப்பினாள். முரளி முரளி! எழும்பு ராசா. பாபு வரப்போறான். டியூசனுக்குப் போக நேரமாயிட்டுது."

பாபு என்று சொன்னதும் முரளி எழும்பி விட்டான். நண்பர்களுடன் விளையாடுவதில் அவனுக்கு அவ்வளவு ஆர்வம். சாப்பாட்டை நினைவுபடுத்தினால் முரளிக்கு நாய்க் குட்டிகளின் நினைவு வந்து விடுமென நினைத்த மைதிலி பிஸ்கட்டும், வாழைப் பழமும் சாப்பிடக் கொடுத்தாள். முரளியும் அவற்றைச் சாப்பிட்டு விட்டு அம்மாதந்த தேநீரையும் பருகிவிட்டு நண்பர்களுடன் டியூசனுக்குப் புறப்பட்டு விட்டான்.

"மகனை டியூசனுக்கு அனுப்பிய பின்னர் மைதிலி ஏதோ கதைப் புத்தகமொன்றில் மூழ் கிப் போய் விட்டாள். அவளுக்குத்தான் வேறு என்ன பொழுது போக்கு? கதை சுவாரஸ்யமாகப் போனதில் நேரம் போனதே தெரியவில்லை."

"டுமீல்!. .."

சத்தம் கேட்டுத் திடுக்கிட்டாள் மைதிலி. "எங்கைபோ கிட்டடியில செல் விழுந்திட்டுதோ. எங்கட முரளியும் டியூசனுக்குப் போனவன் காணயில்லை" என்று நினைத்தவள் நேரத்தைப் பார்த்தாள். மணி ஆறு பத்தாகி இருந்தது. "அஞ்சு மணிக்கு டியூசன் முடிந்திருக்க வேணும். இன்னும் முரளியைக் காணயில்லை. நல்லாய் விளையாடிப் போட்டு வரட்டும். இண்டைக்கு ஆளை வெருட்டி வைக்க வேணும். வர வர விளையாட்டுக் கூடிப் போச்சுது." மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

இருந்தாலும் முரளி இன்னும் வந்து சேராததால் அவளுக்கு மனதிற்குள் ஓர் உளைச்சல் ஏற்பட்டது. "கேற்" வரை வந்து நின்று தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்வழியே சைக்கிளில் போன ஒருவரை இடைமறித்த எதிர் வீட்டு ஆச்சி "தம்பி உங்கினை கிட்டவா ஏதோ சத் தம் கேட்டுதடா என்ன பிரச்சினையாம்?"

"அது... ஆரோ மூண்டு பிள்ளையள் வயலுக்கை பட்டம் ஏத்திக் கொண்டிருந்தவையாம். வயலுக்கை ஒரு வெடிக்காத செல் கிடந்திருக்கு. பெடியள் அதை எடுத்துத் தட்டிப் பாத்திருக்கினம் போல அது வெடிச்சிட்டுது அந்த இடத்திலையே இரண்டு பேர் சரியாம். மற்றப் பெடியனை இரத்தம் ஒழுக ஒழுக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகினம். ஆர் பெத்ததுகளோ! ம்! பெருமூச்சுடன்

சொல்லி விட்டுப் போனார்.

மைதிலிக்கு தூக்கிவாரிப் போட்டது. முரளியையும் இன்னும் காணவில்லை. நெஞ்சு பக்!பக்! என அடித்துக்கொண்டிருந்தது. கைகளிரண்டாலும் நெஞ்சைப் பொத்திப் பிடித்துக்கொண்டாள். யாரோ ஒருவரின் சைக்கிளில் வந்து இறங்கிய கேசவன் தலையில் கையை வைத்தபடி, "ஐயோ! மைதிலி ...! எங்கடை முரளி!" சொல்லி முடிப்பதற்குள் மைதிலி மூர்ச்சையாகி விழுந்து விட்டாள். வீட்டில் சனக்கூட்டம் பெருகி விட்டது. மைதிலி சுயநினைவுக்கு வருவதும் பின்னர் மயங்குவதுமாயிருந்தாள்.

ஒரு பெட்டியைக் கொண்டு வந்து நடுஹோலில் வைத்தார்கள். சிறிது நேரத்தில் கொண்டு போய் விட்டார்கள். அவ்வளவு தான் அவளது புலனுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் முரளியை மட்டும் காணவேயில்லை.

நாட்கள் சில நகர்ந்தன. கேசவனும், மைதிலியும் நடைப் பிண மாகி விட்டனர். அன்று இரவுதான் கேசவன் சற்றுக்கண்ணயர்ந்திருந் தான். மைதிலியால் எதுவுமே செய்ய முடியவில்லை. இப்பொழு தெல்லாம் அழுகைகூட வர மறுத்து விட்டது. நடு நிசியாதலால் ஊரே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. மைதிலி படுக்கையை விட்டு மெல்ல எழும்பினாள். நடந்து வந்து பின் கதவைத் திறந்தாள். அவளுக்குத் தலையைச்சுற்றியது. அப்படியே கதவைப் பிடித்தபடி வாசற்படியில் இருந்து விட்டாள். அவளது சிந்தனைகளோ!... முரளியை சுற்றிச் சுற்றி வந்தன. எத்தனை நேரம் தான் அப்படியே இருந்தாளோ!- அவளது பாதங்களில் ஈரமான ஸ்பரிசத்தை உணர்ந்தாள். குனிந்து பார்த்தாள் மைதிலி. அங்கே!... அவர்களது ஜிம்மி தான் அவளது காலடியில் கிடந்தபடி அவளது பாதங்களைத் தன் நாவினால் நக்கிக் கொண்டிருந்தது. மைதிலி என்ன நினைத் தாளோ! அவளையறியாமலே அவளது கை ஜிம்மியின் தலையை மெதுவாக வருடியது.

– ஈழநாதம் – 23.7.1993

# பருந்தின் பசி

*மாலைக் கதிரவன் வான்வெளியில் மங்கிக் கொண்டிருந்த வேளை, முகிற் கூட்டங்கள் பஞ்சுப் பொதிகளாக வானத்தில் பவனிவர, கதிரவனும் மெல்ல மெல்ல ஊர்ந்து போய்க்கொண்டிருந்தான்.*

*மாங்கூடலின் நடுவே. ஈஸிசேரில் சயனித் திருந்த வேலாயுதத்தார் வெற்றிக்களிப்போடு சிந்தனை களை அசைபோட்டுக் கொண்டிருந்தார்.*

*கீச்! கீச்! என்ற சத்தம் அவரது சிந்தனையைக் குலைத்தது. திரும்பிப் பார்த்தார். பக்கத்து வீட்டுக் கோழி, குஞ்சுகளுடன் குப்பையைக் கிளறிக் கொண்டி ருந்தது தாய்க்கோழி. குப்பையைக் கிளறி புழுக்களைப் பொறுக்கியது. பின்னர் கொக்! கொக்! என்று கரகரக் கக் குஞ்சுகள் ஓடி வந்தன. கோழி, இரையை வாயால் கொத்திப் பிய்த்துப்போட, குஞ்சுகளோ அவற்றைக் கொத்திக் கொத்தி உண்ண முயற்சித்தன. ஏதோ மேலே பறப்பது போல் நிழற்பட, கோழி கரகரத்தது. கொக்! கொக்! குஞ்சுகள்யாவும்தாயின்சிறகுக்குள்வந்து ஒதுங்கின.*

*மெய்மறந்து இதைப் பார்த்திருந்த வேலாயுதத் தாருக்குத் தானும் தனது ஒரே மகனைக் கோழி குஞ்சு களைப் பாதுகாப்பது போல் பாதுகாத்து வளர்ப்பது நினைவுக்கு வந்தது. ஆம்! அவரது ஒரே மகன் தான் நிமலன்.*

*நிமலனைப் பற்றிச் சுருங்கச் சொன்னால், படிப் பில் மிகுந்த கெட்டிக்காரன். போனால் பாடசாலை; வந்தால் வீடு. வேறு பொழுது போக்குகள் கிடையாது. கிடையாது என்று கூறுவது பிழை. வேலாயுதத்தார்*

அதற்கு இடம் வைக்கவில்லை. வெளியில் எங்கும் திரிய - விடுவ தில்லை. அவசியம் ஏற்பட்டால் தானும் கூடவே போய் வருவார். "டியூசன் அது இது என்று வெளியிலை விட்டால், பொடியள் கண்டபடி திரிஞ்சு கெட்டுப் போவான்கள்". இது வேலாயுதத்தாரின் வேதாந்தம், அதனால் அவரது மகன் தானே தான் படித்துப் பாஸ் பண்ணினான் என்றால் அதுவும் இல்லை. வீட்டிற்கே ஆசிரியர்களை அழைத்துப் பிரத்தியேகமாகப் பாடம் சொல்லிக் கொடுக்க வைத்தார். நிமலனுக்கோ. "தந்தை சொல்மிக்க மந்திர மில்லை" என்ற நிலைப்பாடு. எனவே, அப்பா செய்து கொடுத்த வசதிகளைப் பயன் படுத்தி. ஊக்கமாகப் படித்தான்.ஏஃஎல் பரீட்சையில் அதி விசேட சித்திகள் நான்கு பாடங்களிலும் எடுத்தான்.

சுயநலமே உருவான வேலாயுதத்தாருக்குப் பெருமை பிடிபட வில்லை. தனது அலுவலக நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்று எல்லோரையும் அழைத்து "பார்ட்டி" ஒன்றையே வைத்து விட்டார். வந்த விருந்தினர்கள் மகனைப் பாராட்டும் போது அது தனது முயற்சிக்கே கிடைத்த வெற்றியாக அகமகிழ்ந்தார்.

மகனது மருத்துவப் படிப்பிற்குக் கொழும்பிலுள்ள பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தார். நிமலனும் சிறப்புச் சித்தி பெற்றிருந்தமையால் அனுமதி கிடைத்தது. "இஞ்சை படிக்கிற தெண்டால் எத்தினை வருசம் செல்லுமோ தெரியயில்லை. அங்கை யெண்டால் அஞ்சு வருசத்திலை தம்பி டொக்டரா வெளிக் கிட்டிடுவன். மேல சோதினையளும் எடுக்கலாம். நாலு பாஷையளும் பேசப் பழகிவிடுவான். இஞ்சை எந்தக் காலம் பிரச்சினை தீரப் போகுது. எந்த நேரமும் மடியிலை நெருப்பைக் கட்டினபடி தானே திரியிறம், வேலாயுதத்தார் வெளியில் சொல்லிக் கொண்டார். அத்துடன் தானும் மாற்றமெடுத்துக் கொண்டு கொழும்போடை குடும்பத்தையும் கூட்டிக் கொண்டு போய் விட வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டார்.

நேற்றுத்தான் நிமலனைத் தனது நண்பர் ஒருவருடன் கொழும்பிற்கு அனுப்பி வைத்திருந்தார். நண்பர் அடிக்கடி கொழும்பிற்குப் போய் வருகிறவர். போற வாற பாதையிலை உள்ளவை எல்லாரும் பழக்கம். அதனாற் தான் பாதுகாப்பை முன்னிட்டு மகனையும் அவரோடு அனுப்பி வைத்தவர்.

கொ... க்! கொக....க்!...

தாய்க் கோழியின் அவலமான குரல் கேட்டு நினைவுகளி லிருந்து மீண்டார், வேலாயுதத்தார். பருந்தொன்று வேகமாக இறங்கி,

இலாவகமான இறாஞ்சல் பருந்தின் கால்களுக்குட் கோழிக்குஞ்சு. மீண்டும் வேகமான ஏற்றம். வானத்தில் பருந்து பறந்தது. கோழிக் குஞ்சு பருந்தின் கால்களுக்குள் இருந்து கொண்டு கீச்!கீச்!... எனக் கத்தும் ஒலி.

"டேய் பிராந்தடா" பக்கத்து வீட்டுக்காரரின் நேரம் பிந்திய கூச்சல், தாய்க்கோழியும் கோபத்துடன் செட்டையை அடித்துக் கூச்சலிட்டது. கரகரத்தபடி குஞ்சுகளைச் சிறகுக்குள்ளே காத்துக் கொண்டது. உடன் பிறப்பு ஒன்றை இழந்து ஏக்கத்துடன் குஞ்சுகள் சிறகுக்குள் அணைந்தன.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த வேலாயுதத்தாரின் மனதிலும் பதற்றம். ஏனோ இந்த நிகழ்ச்சியின் பின் அவருக்கு மன நிலை சரியில்லை. தனது ஒரே மகன் சுகமே கொழும்பிற்குப் போய்ச் சேர்ந்திருப்பான் என்ற நம்பிக்கையுடன் படுக்கைக்குப் போனார்.

"இஞ்சாருங்கோ! இஞ்சாருங்கோ!"

மனைவி கமலம் பேப்பரும் கையுமாய் நின்றாள். கண்ணைக் கசக்கியபடி திடுக்கிட்டு எழும்பியவர், "என்னப்பா?" என்று கேட்டார்.

"நேற்று இரவு கிளாலிக் கடலுக்குள்ளை போன வள்ளங்கள் மூன்றைக்காணவில்லையாம்; நேவிக்காரன்கள் கட்டி இழுத்துக் கொண்டு போனதாய்ப் போட்டிருக்கு. எனக்கு என்னமோ பயமாயிருக்கு."

"நீர் சும்மா பயப்பிடாதையும். நிமலனும் அந்தாளும் முந்த நாள் எல்லே போனவை. நான் வள்ளங்கள் வெளிக்கிட்டுப் போன பிறகு தானே வந்த நான். நாங்கள் கையெடுத்த முருகன் அப்பிடிக் கைவிட மாட்டான்."

மனைவியைத் தேற்றினாலும் வேலாயுதத்தாருக்கு நெஞ்சு பக் பக் என்று அடித்தது. எங்கு போய் விசாரிப்பது என்று புரியாமல் தவித்தார். அன்று நாள் முழுவதும் எங்கெல்லாமோ அலைந்தார். ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

மறுநாட் பத்திரிகையில் "புலோப்பளைக் கரையில் வெட்டுக் காயங்களுடன் மாணவரின் சடலம் கரை ஒதுங்கியது. அடையாளம் காணப்படவில்லை" என்ற செய்தி கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

வேலாயுதத்தார் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்து விட்டார். அவரது கண்கள் இருண்டன. யாரோ தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவித்தார்கள். அழுகுரல்களின் மத்தியிலும் அவருக்கு அடுத்த வீட்டுக் கோழியின் அவலக் குரல் கேட்டது.

– ஈழநாதம் – 30.4.1993

# பாதுகாப்பு

இருட் போர்வையால் மூடப்பட்டிருந்த அந்தப் பிரதேசத்தின் அமைதியை ஒரு குண்டுச் சத்தம் குலைத்ததைத் தொடர்ந்து பகலைப் பிரதிபலிப்பது போன்றதொரு வெளிச்சம் வான்பரப்பில் பரவுகிறது.

ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து போயிருந்த அன்னம்மாவைக் குண்டுச் சத்தம் துயிலெழுப்பி விடவே திடுக்கிட்டு எழும்பியவள், யன்னலினூடே தெரிந்த வெளிச்சத்தைக் கண்டு ஒரு கணம் பதறிப் போனாள்.

தொடர்ந்து வேட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. வாரிச்சுருட்டிக்கொண்டு படுக்கையை விட்டு எழும்பியவள், கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். வந்தவள் முற்றத்தில் இறங்கி நின்று கொண்டு சுற்றுமுற்றும் ஒருதரம் நோட்டம் விட்டாள்.

இடையிடையே குண்டுச் சத்தங்களும் தொடர்ந்து வேட்டுச் சத்தங்களும் கேட்டுக் கொண்டே இருந்தன. கடற்பீரங்கி வேறு கரையை நோக்கிக் குண்டுகளை ஏவிக் கொண்டிருந்தது. அதன் சத்தம் அவளது செவிப்பறையை அதிர வைத்துக் கொண்டிருந்தது.

“ஏதோ பிரச்சினை போல கிடக்குது. எக்கணம் கண்மூடித்தனமாய் ஷெல் அடிக்கப் போறாங்கள். எதுக்கும் ஆஸ்பத்திரியடிக்குப் போட்டால் நல்லது”

தனக்குள் சொல்லிக் கொண்டே வீட்டைப் பூட்டிக் கொண்டு யாழ் நகரை நோக்கிப் புறப்பட்டு விட்டாள் அன்னம்மா. அவளது கையில் ஒரு பாக்

இருந்தது. அதற்குள் சில முக்கியமான பொருள்களையும், இரண்டொரு துணிமணிகளையும் திணித்திருந்தாள் :

அன்னம்மாவுக்கு எப்போதுமே தன்னைப்பற்றி ஒரு பெருமிதமான அபிப்பிராயம் சாதுர்யமாகச் செயற்படுவதில் தன்னை மிஞ்சியவர்கள் கிடையாது எனக் கணக்குப் போட்டு வைத்திருந்தாள் அவள்.

கொட்டடியில் இருந்து நகருக்குப் போகும் வீதியால் அவள் எட்டி நடை போட்டுக் கொண்டிருந்தாள். இன்னும் அவளைப் போலவே பலதரப்பட்ட மக்களும் சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் நடையுமாகப் போய்க் கொண்டிருந்தனர். தூக்க கலக்கத்திலிருந்து மீளாத இளசுகளின் அழுகுரல்களினாலும், பீதியுற்ற மக்களின் அவலக் குரல்களினாலும் அந்த தெருவே அல்லோல கல்லோலப்பட்டது.

பாதுகாப்பு வலயமெனக் குறியீடிட்ட பிரதேசத்துக்குள் வந்தபின் தான் அன்னம்மா சற்று நடையைத் தளர்த்தினாள். மக்கள் எல்லோருமே யாழ் போதனா வைத்தியசாலையைச் சூழவுள்ள பிரதேசங்களுக்குள் தற்காலிக தங்குமிடத்தைத் தேடிக் கொள்ள முற்பட்டனர்.

பழைய பஸ் தரிப்புக்கு முன்னால் அமைந்திருந்த ஒரு மாடிக் கட்டடத்தின் முன் பக்கத்தை அன்னம்மா தெரிவு செய்து கொண்டாள். தனது பாக்கைத்திறந்து ஒரு துண்டை எடுத்தவள், அதனாலேயே அந்தச் சீமெந்துத் தரையில் கிடந்த மண்ணைத் தட்டி விட்டு, அதே துணியை நிலத்தில் விரித்தாள். பாக்கைத் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு அந்த இடத்தில் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டாள்.

"ம்!..."

நிம்மதிப் பெருமூச்சொன்றை வெளிப்படுத்தியவளுக்குத் தனது கணவன் கொழும்பில் கடை வைத்திருந்த காலம் நினைவுக்கு வந்தது. அதைத் தொடர்ந்து தானும் பிள்ளைகளுமாகப் புகை வண்டியில் கொழும்பிற்குப் பயணம் செய்த காலமும், தான் புகைவண்டியில் ஏறியவுடனேயே அவசரமாக இடம் பிடித்துப் பிள்ளைகளையும் படுக்க வைத்து விடும் சாதுர்யத்தையும் நினைவில் மீட்டுக் கொண்டாள்.

அருகில் ஆளரவம் கேட்டு அவளது சிந்தனை கலைந்தது.

"ஆச்சி!"

பெண் குரல் ஒன்று கேட்டது. தலையைச் சற்று உயர்த்தியவள் ஆரது?" என்றாள். இருளாக இருந்தாலும் உருவங்களை இனங்காணக் கூடிய ஒரு வெளிப்பு இருந்தது.

"ஆச்சி! என்னையும் இந்தப் பிள்ளையையும் உந்தச் சுவர்க்கரையில படுக்க விடுறியளே! பிள்ளைக்கு நல்ல தடிமல் காத்துப்பட்டாக் கூடாது. அதுதான்..."

மெதுவாக இழுத்தாள், அந்தப் பெண். அன்னம்மாவுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்துவிட்டது. நறுக்கெனப் பதில் சொன்னாள்.

"நானும் வருத்தக்காரி தான். நீ வேணுமெண்டால் வேறை இடம்பாத்துக்கொள்"

ஆண் குரலொன்று அவளை அழைத்தது.

"வாரும் தமயந்தி, நாங்கள் அங்காலை போய்ப் பாப்பம்" வசதியான இடம் ஏதும் இருக்கும்"

அவர்கள் தேடிய வசதியான இடம் என்ன கட்டில் மெத்தையா? வெறும் கட்டிடங்களின் முகப்புத் தரையைத்தான் அவர்கள் தேடிப் போய்க்கொண்டிருந்தனர், அந்தப் பெண் தமயந்தி யின் கையிலிருந்த இரண்டு மாதங் கூட நிரம்பாத குழந்தை இடைக் கிடை வீறிட்டு அழுது கொண்டிருந்தது.

அவர்கள் அப்பாற் போனதும் அன்னம்மா சரிந்து படுத்துக் கொண்டாள். அவளது அடி மனதில் இனம்புரியாத ஒரு நெருடல் தோன்றத்தான் செய்தது. அவளது எண்ணங்களோ அவளை முந்திக் கொண்டுவிட்டன.

என்ரை மகள் பிரேமாவையும் இஞ்சையே வைச்சிருந்தால், அவளும் இப்பிடித் தான் பிள்ளை குட்டியளையும் இழுத்துக் கொண்டு ஓடித் திரிய வேண்டி இருந்திருக்கும். நல்ல காலம் அவளை ஒரு மாதிரிக் கனடா மாப்பிள்ளைக்குக் கட்டிக் குடுத்ததால அவள் அங்கை போய் நிம்மதியாய்க் குடித்தனம் நடத்துகிறாள். நான் தான் கிடந்த தெல்லாத்தையும் வித்துக் குடுத்திட்டு ஓட்டையாண்டியாய்ப் போனன். ம்!... பிள்ளையள் நல்லாயிருந்தாக் காணும் எனக்கென்னத் துக்குப் பொருளும் பண்டமும். நான் ஒரு சீவன் தானே. எப்பிடியும் சீவிச்சுக் கொள்ளுவன். நான் தனி ஆளாய் இருந்தபடியாத்தானே ஓடிவந்து ஒரு ஒதுக்குப்புறமாய், நல்ல பாதுகாப்பான இடமாப் பாத்துப் பிடிச்சுக் கொண்டன். இனி இதிலை நிம்மதியாய்க் கிடந்திட்டு விடிய எழும்பிப் போகலாம்"

ஏதோ, தான் படுத்திருக்கும் இடத்தை தானே சொந்தமாக வாங்கி விட்டது போன்றதொரு நினைப்பில் அன்னம்மா மிதந்தாள். குண்டுச் சத்தங்களின் அதிர்வுகளும் வேட்டுக்களும் கேட்ட வண்ணமிருந்தன. அவள் தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

“மண்டை தீவால ஆமி வெளிக்கிட்டாலும் இஞ்சை வந்து கொள்ள மாட்டான். இது பாதுகாப்பு வலயமெல்லே. அதோடை பெடியளும் விடமாட்டாங்கள்”

பெடியளை நினைத்ததும் அவளுக்குத் தனது பிள்ளைகளின் நினைவு வந்துவிட்டது. மூத்தவன் சுதன், சுவிஸ் நாட்டில், அங்கேயே, தான் விரும்பிய ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்து குடியும் குடித்தனமுமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் தாயையோ, தாய்நாட்டையோ நினைப்பது மில்லை. திரும்பிப்பார்ப்பதுமில்லை. இளையவன் சுரேஸ் கனடாவில் அகதி அந்தஸ்த்துடன் அவனது காலம் போகிறது. அவன் தான் இடைக்கிடை அன்னம்மாவிற்கு ஏதும் பணம் அனுப்பிக் கொள்வதுண்டு. அத்துடன் தங்கை பிறேமாவையும் தன்னுடன் கூட அகதியாய்த் தங்கி இருக்கும் ஒரு பையனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதில் மும்முரமாய் இருந்து செயற்பட்டவன். அவன் மேல் எப்போதும் அன்னம்மாவுக்கு ஒரு தனிப்பாசம் நிலைத்திருக்கிறது என்பது அவளது பேச்சிலிருந்து தெளிவாகிய விடயம்.

“சுரேஸுக்கும் நல்ல ஒரு பெட்டையாய்ப் பார்த்துக் கலியாணஞ் செய்து வைச்சிட்டனென்டால் நிம்மதியாய்க் கண்ணை மூடலாம், அவனுக்குப் பொம்பிளை அனுப்புற சாட்டிலை நானும் ஒருக்கால் கொழும்புக்குப் போய் சுரேஸனோடை கதைச்சுப் போட்டு வரலாம். அல்லது அவனைக் கொழும்புக்கே கூப்பிட்டுக் கலி யாணத்தைச் செய்து அனுப்பிப்போட்டும் வரலாம்.

அன்னம்மாவின் கற்பனையில் சுரேஸுக்குப் பொருத்தமான பெண் பிள்ளையைத் தேடும் முயற்சி மும்முரமாய் நடந்து கொண்டிருந்தது. ஊருக்குள் இருக்கும் பெண்கள் ஒருவரும் அவளது மனதிற்குப் பிடித்தமானவர்களாய்த் தோன்றவில்லை. புரோக்கர்மாரிட்டைச் சொல்லித்தான் பார்க்க வேணும். அழகு, குணம், பணவசதி எல்லாம் பொருந்தி வரவேணுமே என்ற சிந்தனையுடன் தூக்கத்தின் பிடியில் சிக்கிக் கொண்டாள்.

கூய்ங்ஸ்...

கூவிய வாறு வந்த “ஷெல்” எழுப்பிய ஒலி தூக்கத்திலிருந்த

அன்னம்மாவின் காதுகளுக்கு எட்டியதோ! இல்லையோ! யார் கண்டது.?

பேரிடியைத் தொடர்ந்து எங்கும் புகை மண்டலம், கந்தக நெடியும், புகையும் பாதுகாப்புப் பிரதேசத்தில் பதுங்கியிருந்த மக்களின் நாசிகளையும், கண்களையும் ஊடறுத்துத் தாக்கிப் பெரும் எரிச்சலையும் நமைச்சலையும் உண்டு பண்ணின.

மக்களின் அவலக் குரல்கள் அந்த இரவின் நிசப்தத்தை கிழித்துக் கொண்டு வெளி வந்த போது...

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பதிகாரியின் கை "வயர்லெஸ்" ஐ இயக்கிக் கொண்டிருந்தது.

தலைமைச் செயலகத்துடன் தொடர்பு.

அங்கிருந்து கூட்டுப்படைத் தலைமையகத்துடன் தொடர்பு

மீண்டும் அங்கிருந்து பலாலி இராணுவ முகாமுடன் தொடர்பு.

இறுதியாகமண்டைதீவு இராணுவ முகாமுடன் தொடர்பு.

வருத்தம் தெரிவித்தலும் வாக்குறுதிகளும் பரிமாற்றம்.

இப்படியான தொடர்புகள் ஒரு புறம். மறு புறத்தில்...

யாழ். பழைய பஸ் தரிப்பு நிலையத்தில் விழுந்த ஷெல் வெடித்துச் சிதறியதால் அந்த இடத்தைச் சூழவுள்ள பகுதிகளில் தஞ்ச மடைந்த மக்களிற் சிலர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்தும் இரத்தக்களரியில் நீந்திக் கொண்டிருக்கின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலை உயிர்காக்கும் பணியில் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கு கடமையில் ஈடுபட்டிருக்கும் டாக்டர்கள், நர்ஸ்கள், ஊழியர்கள் என்று எல்லோரும் ஓடியாடிப் பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர்.

அந்த அவலமான இரவு விடிந்தபோது...

சைக்கிள் ஒன்று கொட்டடியை நோக்கிவிரைந்து கொண்டி ருக்கிறது. அதில் பயணித்தவர்கள் இன்னும் ஏக்கத்திலிருந்து முற்றாக விடுபடாத நிலையில் போய்க் கொண்டிருக்கிறார்கள். கைக் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு பாரில் அமர்ந்திருந்த தமயந்தி கூறினாள்.

"நல்ல காலம், அந்த மனுஷி எங்களுக்கு இடம் விட்டுத்தர மாட்டனெண்டபடியால் தானே நாங்கள் அங்கால போக வேண்டி வந்தது. இல்லையெண்டால் நாங்களும் அந்த இடத்திலையே

செத்தோ, காயப்பட்டோ கிடந்திருப்பம்"

"தமயந்தி! அந்த மனுஷி உடனயே செத்துப் போச்சுதாம். கணக்காய் ஷெல் துண்டு வந்து அந்த மேல்மாடி பிளேட்டில பட்டுத் தெறிச்சு மனுஷிக்குப்பட்டிருக்கு நீர் அதிலை பிள்ளையையும் வைச்சுக் கொண்டு கிடந்திருந்தால்... எனக்கு நினைச்சுப் பார்க்கவோ என்னவோ செய்யுதப்பா"

என்று அவன் கூறவும், அவளது கைகளுக்குள் சுருண்டு கிடந்த குழந்தை தனது கை, கால்களை ஒருதரம் உதறி அவளை நிலை தடுமாற வைத்தது.

"கொஞ்சம் சிலோ பண்ணுங்கோப்பா"

தமயந்தி சொல்லவும் கால்களை ஊன்றிச் சைக்கிளை நிறுத் தினான். அவளது கணவன். தமயந்தி குழந்தையைத் துவாயினால் போத்திக் கைகளுக்குள் அணைத்துக் கொள்ள முற்பட்ட போது குழந்தை தனது கண்களைத் திறந்து அவளைப்பார்த்துச் சிரித்தது.

"அவருக்குச் சிரிப்பாய்க் கிடக்குது நாங்கள் அவரைப் பாதுகாத்து வளர்த்தெடுக்கப் படுறபாடு அவருக்கென்ன தெரியுது. அவர் சிரிக்கிறார்"

சொல்லிக் கொண்டே குழந்தையின் உச்சியில் தன் உதடு களைப் பதிக்கிறாள். மீண்டும் சிரிக்கிறது குழந்தை.

– ஈழநாதம்– 12.8.1994

# சபதம்

தன்முன் பரந்து கிடந்த நீலக்கடலை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தார் செபமாலைக்கிழவர். கடலலைகள் பெரும் பூகம்பமாய்ப் பொங்கி எழுந்து வந்து கரையுடன் மோதிச் சங்கமமாயின. இதனைக் கண்ணுற்ற கிழவரின் உள்ளத்தில் ஓர் வேதனை தன் மகனது உயிரற்ற சடலத்தையும் இப்படியொரு அலை தான் கொண்டுவந்து கரையில் ஒதுக்கியிருக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டதன் பிரதிபலிப்பாய் அவரது கண்களை நீர் திரையிட்டுப் பார்வையை மறைத்தது.

அவரது நினைவுகளோ பின் நோக்கிப் பாயத்தொடங்கியது. அவரது ஒரேயொரு மகனான ஜோசேப்-அவனை அவர் வளர்த்த விதம் - அவனது பிரிவு - எல்லாம் வரிசைக் கிரமத்தில் அவரது மனத் திரையில் வந்து போனதன் விளைவு - அவரது நெஞ்சம் ஒருமுறை விம்மித்தணிந்தது. அடிவயிற்றில் ஏதோ பிசைவது போன்ற உணர்வு. இதற்குப் பெயர்தான் பெற்ற பாசமோ?

செபமாலை காலங்காலமாய் கடற்றொழில் செய்து சீவியம் நடத்தி வந்தவர். ஏதோ வருவாய் என்று பெரிதாக இல்லாவிட்டாலுங் கூட, சீராகவே அவரது வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது. திருமணஞ் செய்து எட்டு ஆண்டுகளின் பின்னர் தான் ஜோசேப் அவர்களுக்கு மகனாகப் பிறந்தான். மகன் மீது கொள்ளை அன்பைக் கொட்டி வளர்த்த அவர், அவனையும் தன்னைப்போல கடற்றொழில் செய்து கஷ்டத்தை அனுபவிக்கவிடாமல் ஒரு சிறு

உத்தியோகத்திற்காவது படிக்க வைத்து விட வேண்டுமெனப் பெரும் பிரயத்தனப்பட்டார். ஆனால் ஜோசேப்பிற்குப் படிப்பில் நாட்டம் செல்லவில்லை தவிர பள்ளிக்குப் போய் வீண் வம்புகளை விலைக்கு வாங்கி வந்தான்.

எட்டாம் வகுப்புடன் அவனது படிப்பு நின்று விட்டது. தகப்பனுடன் கடலுக்குப் போய் வரத்தொடங்கினான். அவனுக்குத் தனது தங்கையின் மகள் மெற்றில்டாவைத் திருமணஞ் செய்து வைத்தார் செபமாலை மருமகளின் வரவால் வீடு களை கட்டியது. ஜோசேப் நண்டும் சிண்டுமாக நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டான். மூத்தவன் றொபின் மற்றைய மூவரும் பெண்கள். செபமா லைக்குப் பேரப்பிள்ளைகளைச் சீராட்டுவதில் பொழுது போவதே தெரியாமல் காலம் போய்க் கொண்டிருந்தது.

சென்ற வருடம் தான் அவரது மனைவி கண்ணை மூடிக் கொண்டுவிட்டாள், மனைவியின் இழப்பினால் சிறிது ஆடித்தான் போய்விட்டார். செபமாலை. இருந்தாலும் பேரக் குஞ்சுகளின் மழலையில் தன் துயர் மறந்திருந்தார். மெற்றில்டாதான் மாமியாரின் பிரிவினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டாள். செபமாலைக்கும் வயது போய்விட்டதனால், கடற்றொழிலுக்குப் போவதை எப்போதோ நிறுத்தி விட்டிருந்தார். மருமகளுக்கு ஒத்தாசையாக ஏதும் செய்து கொடுப்பார். தேவை ஏற்பட்டால், வலைகளைப் பொத்திக் கொடுப் பார். இப்படியே அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது அவரது வாழ்க்கை.

அந்த அமைதிக்கும் ஒரு நாள் பங்கம் வந்துவிட்டது. ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கப் போன ஜோசேப் திரும்பி வரவில்லை.

“கடலுக்கை மீன் பிடிக்கப் போனவையை நேவிக்காறன்கள் சுட்டுப் போட்டாங்களாம்.”

காட்டுத்தீ போலப் பரவியது இச்செய்தி. செபமாலைக் கிழவர் அவலத்துடன் அந்தோனியாரிடம் ஓடினார். ஆலயத்தில், புனித அந்தோனியாரின் முன் முழந்தாளிட்டுச் சிலுவையிட்டுக் கொண்டவர், ஜெபிக்கத் தொடங்கினார்.

“புனித அந்தோனியாரே திருச்சபையின் தூணே, அருளின் போதகரே, உலகத்தை அடக்குகிறவரே, புண்ணியங்களை விதைக் கிறவரே, வேதனைப் படுகிறவர்களுக்கு ஆறுதல் கொடுப் பவரே... அவரது வாய் இந்த வரிகளையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தது.

அந்தோனியாரிடம் இவரது வேண்டுதல் பலிக்கவில்லை ஜோசேப் வீடு திரும்பவே இல்லை. தவிர அவனது வெற்றுடல் கூடக் கரை ஒதுங்கவில்லை. கிழவர், கடற்கரையிலேயே இருந்து கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். மகனது சடலம் வராமல் தான் வீட்டிற்குப் போவதில்லை எனத் தன் மனத்தில் சபதம் ஏற்றுக்கொண்டார். எவ்வளவோ பேர் வந்து அழைத்தும், அவர் அவ்விடத்தை விட்டு அசையவில்லை.

அன்று ஆறாவது நாள். பேப்பரும் கையுமாக பிரான்ஸிஸ் மாஸ்டர் அவரிடம் வந்தார்.

பருத்தித்துறைக் கடலில் கடற்படை-புலிகள் மோதல். ஒன்பது கடற்புலிகளையும், அவர்களது படகுகளையும் கடற்படை தாக்கி அழித்து விட்டதாகச் சிறிலங்கா வானொலி அறிவித்தது.

மாஸ்டர், கிழவருக்குச் செய்தியை வாசித்துக்காட்டினார். கிழவர், மனந்தளர்ந்துபோய், நடக்கவும் தென்பில்லாமல் கிடந்தார். இருந்தாலும் அவர் வாய் வல்லமையை இழக்கவில்லை.

“பாழ்பட்டுப் போவாங்கள், வயித்துப் பிழைப்புக்கு மீன் பிடிக்க வெண்டு போனவங்களைச் சுட்டுக்கொண்டு போட்டுக் கதை விடுறாங்கள். உவங்கள் கூண்டோடை அழிஞ்சு போகப் போறாங்கள். என்ரை சாபம் பலிக்காமல் போகாது.”

திட்டித் தீர்த்தார் கிழவர் சிறிது நேரத்தில் யார், யாரோ வந்து அவரை வலுக் கட்டாயமாக வீட்டிற்கு அழைத்துப் போனார்கள். ஜோசேப்பின் சடலம் எங்கோ தொலைவில் கரை ஒதுங்கி, அடை யாளங் காணப்பட்டிருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். செபமாலை மகனது உடலையாவது பார்த்துவிடவேண்டுமெனத் துடியாய்த் துடித்தார் மெற்றில்டாவும், பிள்ளைகளும் பெட்டியின் மேல் விழுந்துகதறினர். ஆனால்... மூடிய பெட்டியைத் திறக்காமலே ஜோசேப்பின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

கிழவர் நடைப்பிணமாகி விட்டார். ஒரேயொரு மகனை எத்தனைபாசத்தைக் கொட்டி வளர்த்தார் அவர். அவனுக்கு ஏற்படும் ஒரு சிறு துன்பத்தையும் தாங்க முடியாமல் இருந்தவர், எப்படி அவனை இழந்த பின் இன் னும் உயிருடன் இருக்கிறார்? தன்னையே கேட்டுக் கொண்டார்.

“டேய் ஜோசேப்! உன்னை நான் வளத்த வளப்பென்ன? உனக்கு மேல் நான் வைச்சிருந்த பாசம் என்ன? இப்ப நீ என்னை விட்டிட்டுப் போயிட்டாய், ஆனால்... உன்னைக் கொண்டவனை

நான் பழிவாங்கேலாமல் இருக்கிறனே! அது தான்றா என்னை வதைக்கிது. எப்பிடியடா அவங்களைப் பழிவாங்கப் போறன்?"

குலுங்கிக்குலுங்கி அழுதார் கிழவர். அழுது ஓய்ந்தவரின் மனதில் சிறிது தெளிவு ஏற்பட்டது. தோளில் போட்டிருந்த துவாய்த் துண்டினால் கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டார். தூரத்தில் யாரோ ஒரு பையன் வருவதாகத் தோன்றியது. உற்றுப் பார்த்தார். ஒரு வேளை தனது பேரன், றொபின் தான் தன்னைத் தேடி வருகிறானோ! என்று நினைத்தார் அந்தப் பையன்வாயில் ஏதோ பாட்டை முணு முணுத்தவாறு அவரை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"எங்களின் கடலிலே எவன் எம்மைப் பிடிப்பது

எங்களின் படகினை எவன் இங்கு தடுப்பது"

கிழவருக்குப் பாடலின் வரிகளைக் கேட்டதும் புதுத்தென்பு பிறந்தது. இது எங்கடை கடல். நாங்கள் பரம்பரை பரம்பரையாய்த் தொழில் செய்த கடல், இந்தக் கடல் மாதாவின் கருணையால தான் நாங்கள் வயிற்றைக்கழுவிக் கொண்டிருக்கிறம். இனிமேல். இந்தக் குடும்பம் எப்பிடிச்சீவிக்கப் போகுது?... அவரது மனதில் பெரிய தொரு கேள்விக்குறி?...

ஆண்டவர் கைவிடமாட்டார்.

நம்பிக்கையும் கூடவே தோன்றியது.

இதற்குள் கிழவரை நெருங்கி வந்த பையன், "அப்பு! றொபினைக் காணயில்லை எண்டு அவையின்ரை அம்மா அழுது கொண்டிருக்கிறா. உங்களைக் கையோட கூட்டிக் கொண்டு வரட்டாம்"

"என்னடா மேனை! றொபினைக் காணேல்லையோ?"

அவரது மூளையில் ஏதோ உறைத்தது. நேற்று இரவுநடந்த சம்பவத்தை இரை மீட்டுக் கொண்டார் அவர் :

பிள்ளைகள் எல்லோரும் நித்திரைக்குப் போய்விட்டனர். மெற்றில்டா மட்டும் முற்றத்தில் குந்தியிருந்தாள். இடையிடையே அவளது விம்மல் ஒலி கிழவரை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. படுத்திருந்த அவர் எழும்பித்திண்ணைக் குந்தில் இருந்து கொண்டார். அவருக்கு எல்லாமே சூனியமாகத் தோன்றியது. மடிக்குள் கையை விட்டுத் துழாவியவர் சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டார். புகையை உள்ளே இழுத்து ஊதி வெளியில் விடும் பொழுது, தனது துயரத்தையும் சேர்த்து ஊதி விடலாமென

எண்ணினாரோ? என்னவோ!

திடீரென தாயினருகில் வந்து றொபின் - "அம்மா" என்று அழைத்தான். அவள் நிமிர்ந்து மகனைப் பார்த்தாள். விழிகளிலிருந்து நீர் அருவியெனப் பாய்ந்தது. அவளருகில் அமர்ந்து கொண்ட றொபின், தாயின் கண்ணீரைத் தனது கையால் துடைத்துவிட்டு அழாதைங்கம்மா உங்களைப்போல இன்னும் எத்தனை பேர் எங்கடை ஊரில இப்பிடி அழுது கொண்டிருப்பினம் இந்தக் கண்ணீருக்கொரு முடிவு வரவேணும்"

சொல்லிக் கொண்டே பற்களை நறநறவென்று கடித்தான்.

"எங்கடை அப்பாவைச் சுட்டவன்களை நான் பழி வாங்காமல் விடமாட்டன். எங்கடை கடலில வைச்சு, எங்கட அப்பாவைச் சுட்டு எந்தக் கடலோடை அப்பாவின்ரை இரத்தம் கலந்ததோ எப்பிடி நாங்கள் எங்கடை அப்பாவின்ரை "பொடி"யைக்கூட பாக்கேலாமல் போச்சுதோ அப்பிடியே அவங்களையும் நான் சக்கையாக்குவன் அவங்கட இரத்தமும் சதையும் எங்கடை கடலில கலந்துபோகும் அப்ப நீங்க அழக் கூடாது சந்தோஷப்படனும்"

மகனின் வார்த்தைகளைக் கேட்டதாய் அப்படியே அவனைக் கட்டி அணைத்துக் கொண்டு விம்மினாள். அவளது கண்கள் கண்ணீரைச் சொரிந்தாலும் முகத்தில் ஓர் புன் முறுவல் தோன்றி மறைந்தது.

–ஈழநாதம் – 28.1.1994

# சரியான பாதை

ஆடி மாதத்து வெயிலின் அகோர புழுக்கத் தால் ஆக்கிரமிக்கப்பட்ட அருணாசலத்தார் தலையில் போட்டிருந்த சால்வையைக் கையில் எடுத்து உதறிய வாறே "அப்பப்பா! என்ன வெய்யில்! என்ன புழுக்கம்!" என்று அலுத்துக் கொண்டே வீட்டினுள் நுழைகிறார்.

நுழைந்தவர் அடுப்படிப் பக்கமாகத் திரும்பி, "இஞ்சாரும்! செல்லம்!" என்று கூப்பிடுகிறார். அங்கிருந்து பதிலொன்றும் வராததால் அறைக்குள் எட்டிப் பார்க்கிறார். அங்கே அவரது மனைவி செல்லம் வெறும் நிலத்தில் ஒருக்களித்தவாறு படுத் திருக்கிறாள். கிட்டப் போனவர், "இஞ்சாரும், நான் வெத்திலைச் சாத்திரியிட்டை எல்லே போட்டு வாறன்" என்று சொன்னதுதான் தாமதம், மின் பாய்ச்சி யது போல் செல்லம்மா எழுந்து உட்கார்ந்தாள்.

"என்னப்பா சொன்னது சாத்திரி? கண்ணன் எங்கை இருக்கிறானாம்?"

சாத்திரி என்ன தேடிப் போய்க் கண்டு கொண்டு வாறதே? உயிருக்குப் பிழையில்லையாம். ஆள் எங் கையோ தலைமறைவாய் இருக்குதாம்."

"அப்பிடியெண்டால் கண்ணன் ஆமி யிட்டைத் தான் அம்பிட்டிட்டானாக்கும். அவங்கள் பிள்ளையை அடிச்சாங்களோ! நொருக்கினாங்களோ? என்ரை பிள்ளை என்ன பாடுபடுகிதோ?" சொல்லிய வளின் கண்கள் நீரைச் சொரிந்தன.

"நானெல்லே உமக்குச் சொன்னனான். சும்மா அழுது கொண்டிராதையும் எண்டு. சும்மா அழுகிறதை

விட்டிட்டு கடவுளைக் கும்பிடும். அதுக்கு மேல நாங்கள் என்னத்தைத்தான் செய்யிறது. அது சரி இப்ப பிள்ளையள் பள்ளியால வரப்போகுதுகள். சமைச்சுப் போட்டீரே?”

“இல்லையப்பா! எனக்கெண்டால் சமைக்க மனம் ஏவுதில்லை” என்று செல்லம்மா கூறவே, அருணாசலத்தாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

“நீர் சும்மா அவனை நினைச்சு அழுது கொண்டிருந்தால், மற்றப் பிள்ளையளை என்ன செய்யிறது? அதுகள் இப்ப பள்ளியாலை வந்து என்னத்தைச் சாப்பிடுறது? அப்பிடியெண்டால் ஒண்டு செய்வமே? பிள்ளையளையும் தூக்கிக் கிணத்துக்கை போட்டிட்டு நாங்களும் குதிப்பம்”

அருணாசலத்தாருக்குக் கோபம் எல்லை கடந்து விட்டதை உணர்ந்த செல்லம்மா, அடுப்படியை நோக்கிப் போனாள். சமை யலைத் தொடங்கினாள். சிந்தனை அலைகள் அவளை முந்திக் கொண்டு விட்டன.

மாவிட்டபுரத்தில் அமைதியாக வாழ்ந்த குடும்பம் அது. அவர்கள் வெற்றிலைத்தோட்டம், பெரிய வீடு, வளவு என்று வசதி யாக வாழ்ந்து வந்தனர். இருந்தாற் போல் இராணுவம் முன்னேற, அப்படி அப்படியே வீடு வாசல், பொருட்கள், கால்நடை எல்லா வற்றையுமே விட்டு விட்டு, உயிரை மட்டும் காப்பாற்றியவாறு அகதி களாக ஓடி வந்து விட்டனர். அவர்களின் பின்னால் அவர்கள் வளர்த்த நாய் மட்டும் ஓடி வந்து விட்டது. சில பெறுமதியான பொருட்கள், துணிமணிகள், நகைகள் என்று கொஞ்சத்தைக் கொண்டு வந்து மானிப்பாயில் உள்ள அவர்களது உறவினர் ஒருவரின் வீட்டில் முன்னரே வைத்திருந்தனர். அதுதான் அவர்களுக்கு அந்த நேரத்தில் கைகொடுத்தது. அவர்களுடன் சில நாட்கள் தங்கியிருந்தனர்.

அவர்களது ஐந்து பிள்ளைகளில் மூத்தவன் கண்ணன் ஏ. எல். வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பரீட்சை வேறு நெருங்கி விட்டது. அவனுக்குப் படிக்கப் புத்தகங்களோ, கொப்பி களோ ஒன்றுமே இல்லை. எல்லாவற்றையுமே தான் மாவிட்ட புரத்திலேயே விட்டுவிட்டு வந்து விட்டார்களே. பாவம்! அவன் செய்வதறியாது யோசித்தான்.

அவனது நண்பனொருவனது வீடு, அளவெட்டியில் இருந்தது. அவனுடனாவது சேர்ந்து படிக்கலாமென்றால் மானிப்பா யில் இருந்து அளவெட்டிக்குப் போய் வருவது மிகவும் சிரமமாக

இருந்தது. அருணாசலத்தார் யோசித்தார். ஐந்து பிள்ளைகளுடன் இன்னொருவர் வீட்டில் தங்குவதும் அவருக்கு நல்லதாகப்பட வில்லை. எனவே அளவெட்டியில் ஒரு சிறிய வீடு வாடகைக்கு எடுத்து அங்கு குடி போனார்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங் கும் அருணாசலத்தாருக்குத் தொழில் எதுவுமின்றிச் சும்மாயிருப்பதும் பிடிக்கவில்லை. அவர்கள் கடியிருந்த வீட்டிற்கு அண்மையில் ஒரு தோட்டக்காணியைக் குத்தகைக்கு எடுத்தார். அதில் மரக்கறிப் பயிர்வகை செய்ய ஆரம்பித்தார். கண்ணனுக்கும் தனது நண்பனிடம் புத்தகங்கள் கொப்பிகள் மாறிப் படிப்பதற்கு வசதியாக அமைந்தது.

மாதங்கள் சில உருண்டன. ஏ.எல். பரீட்சையும் துவங்கி விட்டது. கண்ணனுக்கு இரண்டு பாடங்களுக்கான பரீட்சை நடந்து முடிந்திருந்தது. கண்ணன் இரண்டு பாடங்களுக்கான பரீட்சை களையும் நன்றாக எழுதியிருந்தான். மற்றைய பாடங்களைத் தயார் செய்வதில் மூழ்கியிருந்தான்.

திடீரென்று ஒருநாள் ஊரில் கதை பரவலாயிற்று. ஆமி தகரவேலியைக் கழற்றி விட்டானாம். வெளிக்கிடப் போகிறான் என்று பல மாதிரியும் கதைத்தார்கள். கண்ணன் படிப்போடு ஒன்றிப் போயிருந்ததால் அவனுக்கு வெளி நடப்புத்தெரியவில்லை. அருணா சலத்தார் தோட்டத்தோடு பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தார். அவருக்கும் இந்தச் செய்திகள் ஒன்றும் காதில் விழவில்லை.

அன்று கண்ணனுக்குப் பரீட்சை இருந்தது. அதிகாலை மூன்று மணிக்கே எழும்பிப் படித்துக் கொண்டிருந்தான். இருந்தாற் போல் குண்டுச் சத்தங்கள் கேட்கத் துவங்கின. ஷெல்கள் தலைக்கு மேலாக கூவியவண்ணம் அண்மையில் வந்து விழத் தொடங்கின. பொம்மர் ஒன்று வானில் வட்டமடித்துக் குண்டுகளை வீசித் தள்ளியது. போதாதற்கு ஹெலி ஒன்று வட்டமிட்டபடி “றொக்கட்” தாக்குதலை மேற்கொண்டது. அருணாசலம் குடும்பத்தினருக்கு அப்போது தான் நிலைமை விளங்கியது. பீதியடைந்து எல்லோரும் அவசரமாக வெளியேறத் தொடங்கினார்கள். வெடிச் சத்தங்களுக்கு மத்தியில் அவர்கள் போய்க்கொண்டிருந்தனர். எங்கும் சனவெள்ளம். அதற்குள் துப்பாக்கிச் சன்னங்களும் காற்றை ஊடறுத்து வந்தபடி இருந்தன. அருணாசலத்தாரும், மற்றவர்களும் முன்னே போய்க் கொண்டிருக்க, கண்ணனும் அவர்களது நாயும் பின்னால் வந்து கொண்டிருந்தனர்.

எல்லோரும் வந்து சண்டிலிப்பாயில் ஒரு பள்ளிக்கூடத்தில் தரித்தனர். மிகவும் களைத்துச் சோர்ந்து போயிருந்த அவர்கள்

அப்போதுதான் கவனித்தார்கள். கண்ணனைக் காணவில்லை. சனக்கூட்டத்தில், வேறு எங்கெல்லாமோ அவனைத் தேடினர். இன்று வரை தேடுகின்றனர்.

பலரும் பலமாதிரியும் கதைத்தனர். சிலரை ஆமிபிடித்து விட்டதாக ஒரு கதை. "சிலரைச் சுட்டுப்போட்டாங்களாம்" என்றும் இன்னொரு கதை சிலர் பொம்மர் அடித்தும், சிலர் ஷெல் பட்டும் இறந்துவிட்டதாகக் கதைத்தார்கள். எதிலுமே கண்ணனைப் பற்றிய தகவல்கிடைக்கவில்லை அருணாசலத்தாரும் அலையாத இட மில்லை. எதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

***

ஒருநாள் அருணாசலத்தார் அவசரமாக ஓடி வந்தார். "இஞ்சாரும் செல்லம்! உங்க ஆமியிட்டைப் பிடிபட்ட ஆக்களில கொஞ்சப் பேரை விட்டிருக்கிறாங்களாம். எங்கடை வீரசிங்கமும் பிடி பட்டு இருந்து விடுபட்டிருக்கிறானாம். அவன் இப்ப இணுவிலிலை இருக்கிறானாம். நான் ஒருக்கால் போய் விசாரிச்சுக் கொண்டு வரப்போறன்" சொல்லியவர் உடனே புறப்பட்டும் விட்டார்.

இப்போதுதான் ஓரளவு சுய நிலைக்கு வந்திருந்த செல்லம்மா விற்கு, மீண்டும் பழைய நினைவுகளும், கவலையும் தலைகாட்டத் துவங்கியது. இடையிடையே மூத்தமகனின் நினைவு வந்து அலைக் கழித்தாலும், சிறிது தென்பாய் இருந்து மற்றப்பிள்ளைகளைக் கவனித்து வந்தவளுக்கு இந்தச் சேதியைக் கேட்டதும் மகன் சுகமே இருப்பதாகச் செய்தி கிட்டாதோ என்ற நப்பாசையும் மனதில் துளிர் விட்டது. அருணாசலத்தாரின் வரவை ஆவலுடன் பார்த்திருந்தாள்.

***

இணுவில் கந்தசுவாமி கோயிலடியில் சிறுவர் கூட்டமாக நின்று பட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அருணா சலத்தார் அவர்களிடம் விசாரித்தார். "தம்பியவை இங்கினைக்க வீரசிங்கம் எண்ட மாவிட்டபுரத்துப் பெடியன் இருகிறானாம். ஆமி பிடிச்சு வச்சிருந்து கிட்டடியிலதான் விடுபட்டு வந்தவன். உங்களுக் குத் தெரியுமே அவன் இருக்கிற வீடு?"

சிறிது உயரமாய் வளர்ந்திருந்த ஒரு பையன் மற்றொரு வனிடம் "டேய்! மயில்வாகனத்தாரின்ரை வீட்டை ஒருக்கா இந்த ஐயாவுக்குக் காட்டிவிடடா" என்று உத்தரவிட்டவன் இவரைப் பார்த்து ஐயா! இவனோட போங்கோ வீட்டைக்காட்டி விடுவான். அந்த வீட்டிலதான் நீங்கள் தேடின வீரசிங்கம் எண்டவரும் இருக்

கிறார்." என்று கூறினான். "நல்லகுணமான பெடியனாக்கிடக்கு" என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டே அந்தச் சிறுவனுடன் போனார் அருணாசலத்தார்.

இவ்வளவு சுலபமாக வீரசிங்கம் இருக்கும் வீட்டைக்கண்டு பிடித்துவிடலாம் என்று அவர் எள்ளவும் எண்ணியிருக்கவில்லை. படலையைத் திறந்தவர் அதிசயித்துப்போனார். ஏதோ கதாப் பிரசங்கம் நடக்கும் இடம்போல் சனக் கூட்டம் அங்கு நிரம்பி யிருந்தது. எல்லோரும் புதினங்களை அறிந்து கொள்ள வந்திருந்தார் கள் அத்தனை பேரின் மத்தியிலும் இவரைக் கண்டவுடன் வீரசிங்கம் எழுந்து வந்து "பெரியப்பு வாங்கோ" என்று உபசரித்தான். கண்ணனைப் பற்றி அவனே விசாரிக்கத் தொடங்கி விட்டான். அருணாசலத்தாரும் அவனை விடவில்லை. துருவித் துருவி விசாரித்தார். கண்ணனைக் கண்டதாகத் தகவலே இல்லை . இறுதியில் வீரசிங்கம் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தான்.

"பெரியப்பு ஆமி முன்னேறி வந்த அண்டைக்கு மூண்டு பேரைச் சுட்டுப்போட்டுக் கொளுத்திப்போட்டாங்கள் எண்டு கேள்வி. ஒருவேளை அதிலை ஒண்டாய் இருக்குமோ?"

அருணாசலத்தாருக்கு மண்டைக்குள் எரியுமாப்போல் ஓர் உணர்வு. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் அப்படியே இருந்து விட்டார். அவர்கள் தந்த கோப்பியைக் குடித்தபின் சிறிது தென்பு வரவே வீட்டிற்குப் புறப்பட்டார்.

பொழுது சாயும் நேரத்தில் களைத்து விழுந்து வந்த அரு ணாசலத்தார் ஒன்றுமே பேசவில்லை. "தொப்"பென்று நிலத்தில் இருந்து விட்டார். செல்லம்மா பயத்துடன் நெஞ்சு படபடக்க அவர் என்ன சொல்லப் போகிறாரோ? என்ற அச்சமேலீட்டால் ஓர் ஓரமாக ஒதுங்கி நின்று அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தால் "எல்லாம் வீண் அவன் தம்பியையே அங்கை காண இல்லை எண்டு சொல்லுறானப்பா! ம்!" என்று ஒரு நீண்ட பெரு மூஞ்சை விட்டார். "எல்லாம் நாங்கள் செய்த பலன்" அவரது வாய் முணுமுணுத்தது.

***

செல்லம்மா இப்போது முற்றாக மாறி விட்டாள். தனது பிள்ளைகளின் நலன்களைக் கவனிப்பதில் அக்கறை செலுத்தினாள். அவளது வாழ்க்கையில் வறுமை வேறு தலை காட்டத் துவங்கி இருந்தது. கிடைக்கும் நிவாரணப் பொருள்களோடு மட்டும் குடும்பத்

*தேவைகளைச் சமாளிக்க முடியவில்லை. இடையிடையே, அவளது நகைகள் கடைக்குப் போய் பணமாகி வந்தது. ஒரு மாதிரி காலம் போய்க் கொண்டிருந்தது.*

*ஒருநாள் காலை அவர்களது வீட்டு வாசலில் வான் ஒன்று உறுமியபடி வந்து நின்றது. வானைக் கண்டதும், அவர்களது நாய் குரைக்கத் தொடங்கியது. குரைத்தபடி வானை நோக்கி ஓடிய நாய், சட்டென்று அடங்கிப் போயிற்று. வாலை ஆட்டிக் கொண்டே அனுங்கி ஆரவாரித்தது. எட்டிப் பார்த்த செல்லம்மா புலிகளின் சீருடையில் சிலர் வானிலிருந்து இறங்குவதைக் கண்டாள். அதற்குள் அவளது இளைய மகள் "அம்மா ! எங்கடை பெரியண்ணைப் புள்ளை எல்லே வந்திருக்கிறார்!" என்று மகிழ்ச்சியுடன் துள்ளவே, செல்லம்மா தன் மகன் கண்ணனை அடையாளங் கண்டு கொண்டாள்.*

*"கண்ணா !" என்று கூவியவள், ஓடோடிப் போய் மகனைக் கட்டிப்பிடித்து கொஞ்சியவாறு "ஓ" வென அழத் துவங்கி விட்டாள். இந்த ஒரு வருடத்தில் அவர்கள் கண்ணனை இப்படி ஒருநிலையில் காண்போமெனக் கனவு கூடக் காணவில்லை. ஏதேதோ கற்பனை களைப் பண்ணிக் கலங்கினார்களே தவிர, தங்கள் மகன் இப்படி யொரு பாதையைத் தேர்ந்திருப்பான் என்று ஏன் எண்ண முடியாமற் போயிற்று?*

- ஈழநாதம் -01.10.1993

# தளிரின் தாகம்

கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கி யிருந்தது. மாசி மாதத்துப் பனியில் மரஞ்செடி கொடிகள் அனைத்தும் வியர்த்து நிற்பன போலப் பனித் துளிகளைத் தாங்கி நிற்கின்றன. வாசலில் சுருண்டு கிடந்த நாய் அரவங்கேட்டு உறுமியவாறு எழும்பிப் பார்த்து விட்டு மீண்டும் சுருண்டு படுத்து விடுகிறது இரவுநேரக் கடமை முடிந்து வீடு திரும்பிய சாந்தி அந்தச் சின்னஞ் சிறு வீட்டின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைகிறாள்.

போர்வையை இறுகப் போர்த்திருந்தாலும், கதவு திறபட்டதால் வெளியே வீசிக் கொண்டிருந்த குளிர் காற்று அப்புவின் உடலைச் சில்லிடவைக்கிறது மருமகள் வீடு திரும்பி விட்டதை உணர்ந்த அவர்,

“மேனே சாந்தி, சரியான குளிராயும் கிடக்கு கொஞ்ச நேரம் படுத்துக் கண்ணயரன் பிள்ளை. இண்டைக்கு லீவு நாள் தானே பள்ளிக்கூடமும் இல்லை. ஆறுதலாய் எழும்பித் தேத்தண்ணி வைக்கலாம்”

சாந்திக்குத் தகப்பனுக்குத் தகப்பனாக, உறவிற்கு ஒரு பற்றுக்கோடாக இருப்பவர் இந்த அப்பு ஒருவர்தான். ஆக்கிரமிப்புப்படை ஏவிய ஷெல்லுக்கு இரையாகிய சாந்தியின் அருமைக் கணவனை ஈன் றெடுத்தவர். மருமகளிலும், பேரன்மார் இருவரிலும் உயிரையே வைத்திருந்தார்.

“மாமா வெளியிலை இருந்து இந்தப் பனியுக் கால வந்ததோ, என்னவோ எனக் கெண்டால் குளிரவே யில்லை. மளமளவெண்டு சமைச்சுப் போட்ட

னெண்டால் ஆறுதலாய்க் கொஞ்ச நேரம் நித்திரை கொள்ளலாம் அப்பிடி எண்டால் இரவைக்கும் வேலை செய்யச் சுகமாயிருக்கும் எண்டு நினைக்கிறன். இப்ப படுத்தாலும் வேலை கிடக்கு எண்ட நினைப்பில நித்திரையும் வராது"

மாமனாரின் சொல்லை மீறும் தயக்கத்துடன் மெதுவாகச் சொன்னாள்.

"பின்னைச் சரி பிள்ளை" அப்பு ஒப்புக் கொண்டு விட்டதும், சீருடையை மாற்றிவிட்டு அடுப்பை மூட்ட எத்தனிக்கிறாள். அப்புவும் எழும்பிப் படுக்கையைச் சுருட்டி ஒரு பக்கம் வைத்துவிட்டு வந்தார். மடியிலிருந்த சுருட்டொன்றை எடுத்து வாயில் வைத்துக் கொண்டு அடுப்படிக்குப் போனார். அங்கே, சாந்தி மூட்டிய அடுப்பு அப்போது தான் தீப்பிடித்து எரியத் துவங்கியிருந்தது. ஒரு கொள்ளியை எடுத்து வாயில் வைத்திருந்த சுருட்டைப்பற்றவைத்துக் கொண்டு புக்! ... புக்!... என்று புகையை வெளியே விட்டவாறு காலைக் கடன் கழிக்கச் சென்றார்.

பிள்ளைகள் இருவரையும் துயிலெழுப்பிவிட்ட சாந்தி, தேநீர் தயாரிப்பதில் ஈடுபட்டாள். முதலில் மாமனாருக்குக் கொண்டு போய்க்கொடுத்தாள். அவர் சிவசிவ என்று வாய்க்குள் முணு முணுத்த வாறு தேநீரை வாங்கிச் சுவைக்கத் தொடங்கினார். சாந்தியின் மூத்த மகன் சிவதர்சன் முகம் கழுவி விட்டு வந்து, தாய் கலந்து வைத்திருந்த தேநீரை அருந்திவிட்டு பை ஒன்றுடன் கடைக்குப் புறப்பட்டான். தாய் சொல்லி விட்ட பொருட்களைத் தாங்கள் வழமையாக வாங்கும் கடையில் வாங்கி வந்து கொடுத்தான். சாந்தி, மாமனாருக்கும் மக்களுக்கும் காலை உணவைப் பரிமாறினாள் அவர்கள் சாப்பிட்டு முடிந்தவுடன் தானும் அவசரமாக ஏனோ தானோ என்று சாப்பாட்டை முடித்துக் கொண்டாள்.

சாப்பிட்டு முடிந்ததும் சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டாள். அவளையறியாமலே அவளது சிந்தனை கடந்தகால வாழ்க்கையை அசை போட்டது. சாந்தியின் கணவன் சங்கர், நல்ல வாட்ட சாட்டமானவன். மனைவி, மக்களில் பாசத்தை அள்ளிச் சொரிந்தவன். கூட்டுறவுச்சங்கத்தில் மனேஜராக இருந்தான். சாந்தி மருத்துவத் தாதியாக தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றினாள். ஆஸ்பத்திரிக்குக் கூப்பிடு தூரத்தில் அவர்களது சொந்த வீடுவளவு இருந்தது ஒருவித பிச்சல் பிடுங்கல் என்றில்லாமல் அமைதியாய்க் கழிந்த வாழ்க்கையில் இடிவிழுந்தாற்போல் வேலைக் கென்று சென்ற கணவன் பலாலி இராணுவத்தினர் ஏவிய ஷெல்லுக்கு இரையாகிப் பிணமாக வீடு வந்ததும், ஆமி தெல்லிப்பளைக்கு

முன்னேறியதும், தானும் அப்புவும் பிள்ளைகளும் அல்லோல கல்லோலப்பட்டு உடுத்த துணியுடன் ஓடிவந்து அகதிமுகாமில் தங்கியதும், பின்னர் மானிப்பாயில் ஆஸ்பத்திரிக்குக் கிட்டதாக இந்தச் சிறிய அனெக்ஸை வாடகைக்கு எடுத்ததும், எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக நினைவில் வந்தன.

ம்...! என்ற நீண்ட பெரு மூச்சொன்று அவளையறியாமலே அடிவயிற்றிலிருந்து கிளம்பியது.

"எல்லாம் முடிந்த கதை. இனி யோசித்து என்ன வரப் போகிறது இனி எனக்கென்று என்ன இருக்கு எப்படியும் பிள்ளை களை வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்கிவிட வேண்டும்"

சிந்தனையில் ஆழ்ந்திருந்தவளை இளைய மகனின் குரல் இவ்வுலகிற்குக் கொண்டு வந்தது.

"அம்மா! அம்மோய்!" என்று அழுதபடி இளையவன் ஜெயதர்சன் ஓடிவந்து தாயின் மடியில் விழுந்தான்.

பின்னால் வந்த மூத்தவன், "அம்மா, முரளியும் சபேசனும் விளையாட்டுத் துவக்கு வைச்சுச் சுடுபடுகினம். தம்பி அதை ஒருக்காச் சுட்டுப் பாக்கத் தரச் சொல்லிக் கேக்க, அவை தரமாட்டெண்டிட்டி னம். அதுக்குத்தான் அழுகிறான்"

முரளி என்பவன் அவர்கள் இருக்கும் வீட்டின் சொந்தக் காரரின் பையன். பண வசதிக்கேற்ப கர்வமும் அவனிடம் குடி கொண்டிருந்தது. சாந்தி ஜெயாவின் கன்னத்தைத் தடவியபடி,

"ஜெயாக்குட்டி, இஞ்சை பார் அம்மா சொல்லுறதைக் கேட்க வேணும். நான் இந்த முறை மருதடிப் பிள்ளையார் கோயில் திருவிழாவுக்கை பிள்ளைக்கும், அண்ணாவுக்கும் ஆளுக்கொரு துவக்கு வாங்கித் தருவன். நீங்கள் ஆசை தீர வைச்சு விளையாடலாம். பாத்தியே, அண்ணா நல்ல பிள்ளை, அழஇல்லை அவையின்ரை துவக்கைத் தரச் சொல்லி நீ கேட்டது பிழை அவை உனக்குத் தருவினமோ?"

விம்மல் சற்றுக் குறைய "எனக்கும் அண்ணாக்கும் கட்டாயம் வேண்டித் தர வேணும் பேந்து ஏமாத்தக் கூடாது"

"நான் கட்டாயம் வேண்டித் தருவன். இப்ப அச்சாப் பிள்ளையள் ஓடிப்போய் அப்பு விட்டைக் கேளுங்கோ. எப்ப கோயில் கொடி ஏறுதெண்டு அப்புவுக்குத்தான் தெரியும்"

இருவரும் அப்புவிடம் ஓடினார்கள் இளையவன் தமையனிடம் கேட்டான். "அண்ணா நாங்கள் அப்புவிட் டைக்

கேப்பமே எங்களை எங்கடை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகச்சொல்லி”

“தம்பி, உனக்கென்ன விசரோ, அங்கை ஆமிக்காரன் எல்லே இருப்பான். நாங்கள் போனாச் சுட்டுப்போடுவான்”

“அப்ப நாங்கள் எப்ப போகலாம் எங்கடை வீட்டை, எனக்கெண்டால் எங்கடை வீட்டிலை இருக்கத்தான் விருப்பம்? அண்ணா, நாங்கள் என்ன மாதிரி வளவுக்கை ஓடிப்பிடிச்சு விளையாடுற நாங்கள் இஞ்சை ஒண்டும் செய்யேலாது, எங்கடை மா மரத்தில கட்டி இருந்த ஊஞ்சல் இப்பவும் இருக்குமே?”

அப்புவின் காதில் இவர்களது உரையாடல் விழுந்து விட்டது.

“சின்னவன் என்னவாம்? வீட்டை போகப்போறானோ? ஆமிக்காரன் விட்டு வைப்பனே? என்னெண்டு போறது எங்கடை வீட்டையும் இடிச்சுப் போட்டாங்களோ, விட்டு வச்சிருக்கிறாங் களோ? ஆர் கண்டது- கடவுளுக்குத்தான் வெளிச்சம்” ம்! ...

டொக்! என்ற சத்தம் கேட்டது- பெரியவன் வெளியில் எட்டிப்பார்த்து விட்டு, “அணில் கொந்தி மாங்காய் ஒண்டு விழுந்திட்டுது” சொல்லிக் கொண்டே எடுப்பதற்கு ஓடினான். வீட்டுக்காரரின் மகன் முரளியின் குரல் கேட்டது.

“அம்மா, இஞ்சை மரத்திலிருந்து விழுந்த மாங்காயை இந்த அகதிப்பெடியன் எடுக்க வாறான்”

பெரியவனுக்கு சுரீர் என்றது அப்புவிடம் ஓடிவந்து விம்மியபடி “அப்பு என்னை ஏன் அகதிப்பெடியன் எண்டு சொன்னவன். என்ரை பேர் தெரியும் தானே முரளிக்கு. எனக்குப் பட்டம் வச்சிட்டானே அகதிப் பெடியன் எண்டு, சொல்லுங் கோவன்”

“மேனே உதுக்கு நான் என்னத்தைச் சொல்லுறதெண்டு தெரியயில்லை. நாங்கள் வீடு வாசல், சாமான்கள் எல்லாத்தையும் தெல்லிப்பளையில விட்டிட்டு, ஒண்டுமில்லாமல் வந்திருக்கிற மெல்லே அதுக்குத்தான் அகதி எண்டு சொல்லுகினம் போல”

“அப்பு, அப்பிடியெண்டா ஆமி இஞ்சையும் வந்து இவையும் வேறை இடத்துக்குப் போனா இவையளும் அகதியளோ?”

“ஓம் மேனே, அகதியள் தான். வெளி நாட்டுக்குப் போனாலும் அகதியள் தான். முரளியின்ரை அப்பாவும் ஒரு வேளை கனடாவிலை அகதியாய்த்தானிருப்பார் ஆனால், அது இஞ்சை இவைக்கு விளங்காது கண்டியோ”

இவர்களது சம்பாஷனை சாந்தியின் காதுகளிலும் விழுந்துகொண்டு தானிருந்தது சின்னவனுக்கு இப்போது தான் அம்மாசொன்னது ஞாபகம் வர,

"அப்பு, மருதடிப் பிள்ளையார் கோயில் எப்ப கொடியேறும்?"

"இந்த மாதம் இருபத்தியெட்டாம் தேதியாக்கும் இன்னும் பதினைஞ்சு நாளிருக்கு பிள்ளையளை நான் திருவிழாக்குக் கூட்டிக் கொண்டு போவன் தானே"

"இல்லை அப்பு அம்மா சொன்னவ எங்களுக்குத் திருவிழா விலை துவக்கு வாங்கித் தாறனெண்டு. தம்பியும் நானும் ஆமி - புலி விளையாட்டு விளையாடுவம்" பெரியவன் கூற, இடைமறித்த இளையவன்,

"அண்ணா நாங்கள் இரண்டு பேரும் தெல்லிப்பளைக்குப் போய் ஆமிக்காரங்களைச் சுடுவமோ"

ஜெயாவின் கதையைக் கேட்ட அப்பு பெரிதாக வாய் விட்டுச் சிரித்தார் இதைக் கவனித்துக் கொண்டிருந்த சாந்தி உணர்ச்சி வசப்பட்டவளாய் ஓடிவந்து இளைய மகனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

***

நாட்கள் நகர்ந்தன. பாடசாலைகள் விடுமுறைக்காக மூடப்பட்டு முதலாந் தவணைக்காக ஆரம்பமாகிய நாள் ஆண்டு மூன்றுக்கு வகுப்பேற்றப்பட்ட மாணவர்கள் அனைவரும் வகுப்பறை யில் அமர்ந்திருந்தனர். அவர்களது வகுப்பிற்கு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியை ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டிருந்தார். ஆசிரியை புதிய வராகையால் மாணவர்களை அறிமுகம் செய்யும் பொருட்டுச் சுமுகமாக உரையாடினார்.

"மாணவர்களே! நீங்களெல்லோரும் சின்னப் பிள்ளைகள். நீங்கள் வளர்ந்து பெரிய ஆளாய் வருவீர்கள் தானே"

ஓம் மிஸ்! ஓம் மிஸ்!! என்று எல்லோரும் கோஷமிட, ஆசிரியை அவர்களை "ஸ்! சத்தம் போடாதையுங்கோ" என்று சொல்லி மேசையைத் தட்டி அவர்களை அடக்கினார். சில விநாடிகள் மௌனம் சாதித்து விட்டுக் கேட்டார்.

"நீங்கள் வளர்ந்து பெரியவர்களாகியதும் என்ன வேலை பார்க்க வேணுமென்று விரும்புகிறீர்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு விருப்பம் இருக்குமென்று நினைக்கிறன். ஒவ்வொருத்தராய்ச் சொல்லுங்கோ"

*முதலில், முன் வரிசையில் இருந்த முரளி என்ற மாணவன் எழுந்தான்.*

*"மிஸ் நாங்கள் கனடாவுக்குப் போகப் போறம் அங்கை தான் எங்கடை அப்பா இருக்கிறார் இஞ்சை கறண்ட் இல்லை. ஒரு வசதிகளும் இல்லையாம். அம்மா சொன்னவ. என்னை அங்கை கூட்டிக் கொண்டு போய் எஞ்சினியருக்குப் படிக்க வைக்கிற தெண்டு. அதுதான் எனக்கும் விருப்பம். மிஸ் எஞ்சினியர் எண்டால் பெரிய வேலையாம் உண்மையா" சொல்லி விட்டுப் பெருமையுடன் எல்லா மாணவர்களையும் ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு இருக்கையில் அமர்ந்தான்.*

*ஜெயதர்சனின் முறை வந்தது. எழும்பினான். "டீச்சர், நான் படிச்சுப் பெரிய ஆளாகினதும், எங்கடை வீட்டுக்குக் கிட்ட காம்ப் பிலை இருக்கிற அண்ணன்மாரோட சேர வேணும் - அவை ஆமி யோடை சண்டை பிடிக்கிறவையாம். நானும் அவையைப் போல சண்டைக்குப் போய் ஆமிக்காரன்களைச் சுடவேணும் எங்கடை வீட்டிற்குப் போக வேணும்- அங்க என்னுடைய ஊஞ்சல் இருக்கு. அதில அண்ணாவுடன் நான் விளையாட வேணும். அதுதான் எனக்கு ஆசை டீச்சர்! நான் பெரிய ஆளாய் வரக்கன நாள் செல்லுமே ?"*

*சிறுவனின் கண்களில் தெரிந்த தாகத்தைக் கண்ணுற்ற ஆசிரியை விக்கித்துப் போய்ச் செயலற்று நின்றுவிட்டார்.*

- ஈழநாதம் - 05.11.1993

# ஈரம்

தங்கச்சி சுதா நல்ல நித்திரை. நித்திரையிலும் அடிக்கடி விசும்பிற சத்தம் கேட்குது. அம்மாவுக்குப் பக்கத்தில் படுத்திருக்கிற தங்கச்சியை ஒருக்காத் திரும்பிப் பார்க்கிறான்.

“பாவம் தங்கச்சி”

என்ரை மனம் சொல்லுது. அம்மா, நல்லாய்த் தான் அடிச்சுப்போட்டா, இந்த அம்மா இப்படித் தான். இப்ப கொஞ்சநாளாய் அம்மாவுக்குக் கோபம் வாறது கூடத்தான். எல்லாம் அப்பாவுக்குச் சுகமில்லா மல் வந்தபிறகுதான் அம்மாவும் இப்படி மாறிவிட்டா. முந்தி நாங்கள் எங்கடை சொந்த ஊரிலை இருக்கைக்க நாங்கள் எவ்வளவு சந்தோஷசமாய் இருந்தம். எவ் வளவு வசதியாய் வாழ்ந்த நாங்கள் வசாவிளானிலை எங்கடை வீடு பெரிசு, வளவும் தோட்டமும் பென்னாம் பெரிசு.

அப்ப நான் அஞ்சாம் ஆண்டில் தான் படிச்ச நான். தங்கச்சி பள்ளிக்குப் போறதில்லை. அம்மா எந்த நேரம் பார்த்தாலும் சந்தோஷமாய்த்தான் இருப்பா. நாங்கள் என்ன குளப்படி செய்தாலும் ஏச மாட்டா. பிள்ளையள் அப்படிச் செய்யக் கூடாது எண்டுதான் சொல்லுவா. அம்மா எங்களுக்கு அடிச்சதாய் எனக்கு ஞாபகமே இல்லை.

அப்பா, வெள்ளென எழும்பின உடன் தோட்டத்துக்குப் போயிடுவர். நானும் தங்கச்சியும் அப்பா தோட்டத்துக்கு “வாட்டர் பம்ப்” பால இறைக்கிற தண்ணியிலதான் குளிக்கிற நாங்கள்.

வருசப்பிறப் பெண்டால் எங்களுக்குப் பெரிய புளுகம். அப்பா யாழ்பாணத்துக்குச் சயிக்கிளிலை போறவர் சில நேரத்திலை என்னையும் கூட்டிக் கொண்டு போறவர். அங்கைதான் எங்கள் எல்லாருக்கும் புது உடுப்பு வாங்கி வருவார். அதுமட்டுமில்லை. சீனவெடி, வாணம் எல்லாம் வாங்கியாறவர். அப்பா எனக்கு வட்டப் பெட்டி. தங்கச்சிப் பிள்ளைக்கு சக்கர வாணம், பூ மத்தாப்பு எண்டு எல்லாம் வாங்கிக்கொண்டு வருவார். சிலநேரத்திலை அப்பாவும் எங்களோட சேர்ந்து வாணம் விடுவார். வெடியும் கொழுத்துவார். அம்மாவுக்கு பலகாரம் சுடுகிறவேலை மட்டும் தான். தங்கச்சிக்கு விருப்பமெண்டு இனிப்புப் பலகாரமும். எனக்கெண்டு உறைப்புப் பல காரமும் சுடுவா. எங்கடை கொண்டாட்டத்தைச் சொல்லத்தேவை யில்லை. வருசம் பிறக்கேக்க நாங்கள் எல்லாரும் புது உடுப்புப் போட்டுக் கொண்டு கோயிலிலை நிப்பம். இப்ப... இந்தக் கொட்டிலுக்கை இருந்து கொண்டு உதுகளை யோசிச்சுப் பார்க்க. உண் மையாத்தான் எனக்கும் அழுகை வருகுது.

இப்ப நாங்கள் ஊரை விட்டு வெளிக்கிட்டு மூண்டு வருசத்துக்கு மேல இருக்குமெண்டு நினைக்கிறன். நானும் தங்கச்சியும் இப்ப ஒரே பள்ளிக்கூடத்திலைதான் படிக்கிறம். ஏதோ ஒருமாதிரி இவ்வளவு காலமும் நாங்கள் சீவிச்சிட்டம் அப்படியே இருந்திருப்பம். அதுக்கிடையிலை அப்பாவுக்கு வருத்தம் வந்திட்டுது அப்பா போய் ஆருக்கும் கூலி வேலைசெய்து குடுத்துச் சம்பளம் வாங்கி வாறவர். நிவாரணமும் தாறவை. அதனாலை ஒரு பிரச்சனையுமில்லாமல் சமாளிச்சம். அப்பாவுக்கு இருந்தாப்போல நெஞ்சுவலி வந்திட்டது. அம்மா வாய்வாலைதான் வலிக்குதாக்கும் எண்டு கை மருந்துகள் செய்து பார்த்தவ. அதுக்கும் சுகம் வரயில்லை. பிறகு வீட்டுக்குக் கிட்ட இருக்கிற ஆஸ்பத்திரியிலும் மருந்து வேண்டிக் குடுத்தது. அதுக்கும் சுகம் வரவில்லை. பிறகு தான் அம்மா யாழ்ப்பாணம் கூட்டிக் கொண்டுபோய் பெரியாஸ்பத்திரியிலை காட்டினவ அங்கைதான் பெரிய டொக்டர் இருக்கிறாராம் அங்கை வடிவாய்ச் சோதிச்சுப் பாக்க வேணுமெண்டு நாலு நாளாய் நிப்பாட்டிப் போட்டினம். அப்படிச் சோதிச்சுத்தான் வருத்தத்தையும் கண்டு பிடிச்சவை. அப்பாவும் இருதயம் பலவீனமாயிட்டுதாம். அதனால கஷ்டமான வேலை ஒண்டும் செய்யக்கூடா தெண்டு சொல்லிப் போட்டினம். இப்ப அப்பா எந்தநேரமும் படுத்துத்தான் இருப்பார் எழும்பி கொஞ்ச தூரம் நடந்தாலும் இளைக்கும் எனக்கொண்டால் பாக்கப் பாவமாயிருக்கும். அப்பா சுகமாயிருக்கைக்கை எவ்வளவு

வேலைகளைச் செய்யிறவர். இப்ப வர வர அப்பாவுக்கு நல்ல சாப்பாடுகள் குடுக்கவும் வசதியில்லை. அம்மாவுக்கு இது களை நினைச்சுத்தானாக்கும் கோபம் வாறது கூட.

தங்கச்சி. சுதா சின்னப்பிள்ளை தானே. அவளுக்கு இதுகள் விளங்குமோ அவள், தன்னோடை படிக்கிற பிள்ளைகளெல்லாம் வருசப்பிறப்புக்கு புதுச்சட்டை வாங்கி இருக்கினமாம். தனக்கும் வாங்கித் தரச்சொல்லிக் கேட்டா அதுக்கு அம்மா சொன்னா.

“சுகா இஞ்சை பார் மேனே. அப்பாவுக்கு இப்ப சுகமில்லை. உழைக்க ஏழாது. பின்னை அம்மாவுக்கு எங்கால காசு. பிரச்சினைகள் தீர்ந்து நாங்கள் எங்கடை ஊருக்குப் போயிட்டமெண்டால், வளவுக்கை வாற பிரயோசனமே வடிவாய்ச் சீவிக்கக் காணும். இப்ப இந்தக் கஷ்டத்துக்கை என்னெண்டு வாங்கிறது. நீ சாமியை கும்பிடு. அப்பாவுக்கு நல்ல சுகம் வரவேணுமென்டு. அப்பாவுக்குச் சுகம் வந்ததும், அப்பா வேலைக்குப்போய் காசு கொண்டு வருவர். நான் உடன சுதாக் குட்டிக்குப் புதுச்சட்டை வாங்கித்தருவன், ”

சுதா சரியெண்டு கேட்டுக் கொண்டிருந்தவள். அதுக்கிடை யிலை பக்கத்து வீட்டிலை இருக்கம் சிறுபிள்ளை வெளி நாட்டிலை இருந்து தனக்கு வந்த புதுக்கட்டையைக் கொண்டுவந்து இரவுக்குக் காட்டிப்புளுக, இவவுக்கும் ஆசை வந்திட்டுது, சின்னவள்தானே. ஆசையை அடக்கத்தெரியேல்லை அழுது அம்மாவைக் கரைச்சல் படுத்தின. அம்மா சொல்லி சொல்லிப் பாத்தா. சுதா கேக்காமல் அடம் பிடிச்சா. அம்மாவுக்கு நல்லாய்க் கோபம் வந்திட்டுது. ஒரு தடியை எடுத்து நல்லாய் அடிச்சுப்போட்டா.

சுதா அழுது கொண்டே இருந்திட்டுச் சாப்பிடாமலே படுத்திட்டாள் பாவம்! எண்டு நினைச்சுக் கொண்டு திரும்பி அவளைப்பாத்தன். உதென்ன! அம்மா சுதாவுக்குப் பக்கத்திலை இருந்து கொண்டு அவளை தடவிக்கொண்டிருக்கிறா. அம்மா வின்றை முகத்தைப் பாத்தன் அழுகிறாபோலக் கிடக்கு. தங்கச்சிக்கு அடிச்சுப் போட்டன் எண்ட கவலையில அழுகிறாவோ, எனக் கெண்டால் அம்மாவையும் தங்கச்சியையும் பாக்க என்னமோ செய்தது.

எனக்கு ஒரு வைராக்கியம் வந்திட்டது. எப்படியும் தங்கச்சிக்குப் புதுச்சட்டை வாங்கிக் குடுக்க வேணும். படுத்திருந்து யோசிச்சுப்பாத்தன் அம்மாவிட்டை கேட்டு நிவாரணத்துக்குத் தாற அரிசியிலை இல்லாட்டில் மாவிலை கொஞ்சத்தை வித்துச் சட்டை வாங்குவமோ சீ ! அது சரியில்லை பிறகு எங்களுக்குச் சாப்பாடும்

இல்லாமல் போயிடும். நானும் அம்மாவும் சாப்பிடாமல் விடலாம் தான். எண்டாலும் அப்பா நாங்கள் சாப்பிடாட்டித்தானும் சாப்பிட மாட்டார். அப்பாவும் ஏலாதெண்டாலும் நாங்களும் அம்மாவும் வடி வாய்ச் சாப்பிடுறமோ எண்டு பாத்துக் கொள்ளுவார். அவருக்கும் சரியான கவலை. நல்லாய் மெலிஞ்சு போறார். நான் தான் ஏதும் சின்ன வேலை செய்து உழைக்கப் பாக்கவேணும். அதுக்காகப் படிப்பை விடவும் மனமில்லை கடவுளே ; முருகா ! நீதான் எனக்கொரு வழி காட்டவேணும் எண்டு யோசித்தபடியே நித்திரையாய்ப் போனன்.

***

"விடைத்தாளில் பென்சிலால் விடை எழுதியது யார்?"

வகுப்பிற்கு வந்த தமிழ் சேர் பலமாய்ச் சத்தம் போட்டார். எனக்கு கை, கால் எல்லாம் நடுங்கத் துவங்கிவிட்டது. என்றை போல்பொயின்ற் பேனையிலை மை முடிஞ்சிட்டுது. அம்மாவிட்டை என்னெண்டு காசு கேக்கிறது. அவவிட்டை இல்லை எண்டு தெரியும். வகுப்பிலை எல்லாப் பெடியளிட்டையும் கேட்டன் "ஆரன் ரெண்டு பேனை வைச்சிருந்தால் ஒண்டைத் தாங்கோடா" எண்டு ஒருத்தரும் இல்லை எண்டு போட்டான்கள். பின்னை நான் வாறது வரட்டும் எண்டு பென்சிலாலையே விடை எழுதினன். இப்ப சேர் கேக்கிறார். நான் என்ன செய்யிறது?

நான் மெல்ல எழும்பித் தலையைக் குனிந்து கொண்டு மெதுவாக "நான் தான் சேர்" எண்டு சொன்னன். இதென்ன! எனக்குக் கண்ணீர் வருகுது. மற்றவை நான் அழுகிறன் எண்டெல்லே நினைக்கப்போகினம்,

மற்றப் பெடியன்கள் எல்லாரும் கொல் ; எண்டு சிரிச்சிச்சினம் சேர் எனக்குக் கிட்ட வந்தார். அடிதான் விழப்போகுது எண்டு நினைச்சுக்கொண்டு பேசாமல் நிண்டன் சேர் முதுகிலை தட்டிப் போட்டுக் கேட்டார்.

"ஏன் மேனை பேனையைத் துலைச்சுப் போட்டியோ?"

"இல்லை சேர் என்ரை பேனையிலை மை முடிஞ்சு போச்சுது. வேற பேனை வாங்கித்தர அம்மா விட்டைக் காசில்லை.. சொல்லி முடிய முந்தி அடக்க ஏலாமல் கண்ணீர் பொத்துக் கொண்டு வந் திட்டுது. நல்ல காலம் சேர் எனக்கு அடிக்க இல்லை." பள்ளிக்கூடம் விட்ட பிறகு என்னை வந்து சந்தி எண்டு சொன்னார். விடைத் தாள்களை எல்லாருக்கும் தந்தார்... எனக்குத்தான் மாக்ஸ் கூட. அது தான் அடிக்கேல்லையோ இருக்கும் ஒரு வேளை.

***

பள்ளிக்கூடம் விட்ட பிறகு நான் பின்னேரத்திலை சேர் வீட்டை போயிடுவன். சேரின்ரை அம்மா வயசு போனவ. நான் தண்ணி அள்ளிக் குடுத்து, விறகு வெட்டிக் குடுத்து வளவு கூட்டிச்சின்ன வேலையள் செய்து குடுப்பன் சேரைப் போலத்தான் அவரின்ரை அம்மாவும் நல்லவ, சேர் எனக்குத் தெரியாத பாடங்களை கேட்டால் சொல்லித்தருவார் படிப்புக்குத் தேவையானதுகளை வாங்கித்தருவார்.

இண்டைக்கு வருசப் பிறப்பு நேற்று வந்த நான் சேர் வீட்டுக்கு வீடு தூசு தட்டிக்கழுவ, வளவு துப்பரவாக்க எண்டு சேரோடு சேர்ந்து வேலையள் செய்த நான் இருட்டோடையே எழும்பி மருத்து நீர் வைச்சு முழுகி, சேர் வேண்டித்தந்த புது உடுப்புகளைப் போட்டுக் கொண்டு முற்றத்தில் பொங்கிறதுக்கு உதவி செய்தன். பொங்கிப் படைச்சபிறகு சாப்பிட்டு விட்டு, வீட்டுக்குப் போக வெளிக்கிட்டன். சேரின்ரை அம்மா தங்கச்சிக்கு வாங்கின சட்டையையும், பொங்கல், பலகாரங்கள், வாழைப்பழம் எண்டு எல்லாத்தையும் பாக்கில போட்டுத் தந்து விட்டா. எனக்கெண்டால் காத்திலை பறக்குமாப் போல இருந்துது அவ்வளவு புளுகம். என்னெண்டு வீட்டை வந்த னெண்டு தெரியேல்லை,

அங்கை வரேக்கையே சுதா! சுதா! எண்டு கூப்பிட்டுக் கொண்டு வந்தன், தங்கச்சி ஓடிவந்து, “அம்மா இஞ்சை ஓடிவாங்கோ. அண்ணைப்பிள்ளை புதுச்சட்டை போட்டுக் கொண்டு வந்திருக் கிறார்” எண்டு கத்தினா.

“என்ரை தங்கச்சியை விட்டிட்டு அண்ணை மட்டும் புதுச் சட்டை போடுவேனே ; எண்டு சொல்லிக் கொண்டே சட்டையை எடுத்துக் குடுத்தன்.

அம்மா கையை நீட்டி வாங்கிக் கொண்டே, “இப்பிடி நெஞ்சில ஈரமுள்ள மனிசரும் இருக்கிறபடியால தான் உலகத்தில இன்னும் மழை பெய்யுது” எண்டு சொல்லித் தங்கச்சிக்குப் புதுச் சட்டையைப் போட்டு விட்டா.

எனக்கு அடக்கேலாமல் கண்ணீர் வரப்பாக்குது. நான் ஒடிப் போய்த் தங்கச்சியைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினன். கொஞ்சிப் போட்டு நிமிர்ந்து பாக்கிறன் அப்பாவும், அம்மாவும் எங்களைப் பார்த்தபடியே நிக்கினம். அவையின்ரை கண்களிலும் கண்ணீர்.

– மாற்றம் – 1993 ஆடி புரட்டாதி

# அலைகள் ஓய்வதில்லை

கார்த்திகை மாதத்துக் காலைப்பொழுது. மப்பும், மந்தாரமுமாக இருக்கிறது. காலையில் இதமாக வீசும் இளந்தென்றல் எங்கோ தொலைந்து விட்டதால், மரம் செடிகள் எல்லாம் துக்கம் அனுஷ்டிப்பவை போல் ஆட்டம் அசைவின்றி மௌனம் சாதிக்கின்றன. எதிலும் ஈரம். நிலம் நெகிழ்ந்து போயுள்ளது.

என் மனத்திலும் ஏதோ இருள் படர்ந்திருப்பது போன்ற பிரக்ஞை பெருகிப் பெருகிக் கசிகிறது. உள் நெஞ்சில் ஈரம். அந்தக் காலை வேளையில் முகத்தைக் கழுவிய நான், பூந்தோட்டத்திற்குள் நுழைகிறேன். அங்கு பூக்களைக் கொய்து கைகளிரண்டிலும் ஏந்திய வாறு வீட்டினுள் நுழைகிறேன். நேராக ஹாலுக்குள் போகிறேன்.

மாலையிடப்பட்டிருக்கும் என் மூத்த மகளின் படம், என்னை வாவென்று வரவேற்பதைப் போன்ற ஒரு பிரமை. பூக்களைப் படத்தின் முன்னால் வைக்கிறேன். வைத்து விட்டுச் சிறிது நேரம் என் மகளது உருவத்தைப் பார்க்கிறேன். விழிகள் நடுங்குகின்றன. வரிப்புலிச் சீருடையில் தோற்றமளித்த அவளது பார்வையில் தெரிவது உறுதியா? வெறுமையா? என்னால் எதையுமே ஊகிக்க முடியவில்லை. என் கண்களை நீர்த்திரை மறைக்கிறது.

என் மனக் குரல் பேசுகிறது. சரியாய் இண்டைக்கு ஒரு மாசம் ஆகிட்டுது. என்ரை பிள்ளை இனி என்னைத் தேடி வரமாட்டாள். அம்மா என்று

கூப்பிடமாட்டாள். என்னால் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒரு மாத காலம் கடந்து விட்டது. என் மனதுக்கு இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரவில்லையே. சீ...! வீர மகளைப் பெற்றெடுத்த நான் ஒரு கோழை. என்னையே நான் நொந்து கொள்ளுகிறேன்.

என் நினைவலைகள் அவளையே சுற்றி வட்டமிடத் தொடங்குகின்றன. அவளது பிடிவாதப் போக்கும், செயல்களும் என் கண்முன்னே நிழலாடுகின்றன. சிறுவயதிலிருந்தே அவளது நினைத்ததைச் சாதித்து முடிக்கும் செயல்கள், சில சமயங்களில் எனக்கு எரிச்சலை ஏற்படுத்துவதுமுண்டு. படிப்பில் எப்பொழுதும் ஆர்வம். தன்னம்பிக்கையின் துளிப்பு அவளை எதிலும் முனைப் பாக்கியது, பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் அதி திறமைச்சித்தி பெற்றாள். அவள் மேல் வகுப்பில், விஞ்ஞானப் பிரிவில் ஆர்வ மிகுதியுடன் சேர்ந்தாள். வெற்றியின் பூரிப்பு அவளில்.

"அம்மா! உங்கடை ஆஸ்மா நோய்க்கு நான் டொக்டராய் வந்துதான் வைத்தியம் செய்யவேணும். அது வரைக்கும் பொறுத் திருங்கோ. அது மட்டும் இருப்பியளோ ...! அல்லது..." என்று விளையாட்டாகக் கூறுவாள்.

இப்போது நான் இங்கே கல்லாய்ச் சமைந்திருக்கிறேன். அவள் போய்விட்டாள்; மாவீரர் வரிசையில் இடம் பிடித்து விட்டாள். நினைவுகளின் மையத்தில் அவள்! காணும் எதிலும், எப்பொழுதும் அவள். கல்லறையில் துயில்கின்ற போதும் நினைவுகள் ஒரு காவியமாகப் பெருகிப் பெருகி...

அந்நாட்களில் அவள் வித விதமான உடைகள், நகைகள் என்பனவற்றில் அதிக நாட்டம் காட்டினாள்.

"அம்மா! என்ரை பிரண்ட்காயத்திரிக்கு அவையின்ரை அப்பா, சவூதியிலை இருந்து ஒரு செயின் அனுப்பி இருக்கிறார். நல்ல வடிவாயிருக்கம்மா. அது மாதிரி எனக்கும் ஒண்டு வேண்டித் தாங்கோ"

அவள் விருப்பத்துக்கு நான் என்றுமே மறுப்புத் தெரிவித்தது கிடையாது. மூன்று பெண்களைப் பெற்றுவிட்டோமே, அவர்களின் ஆசைகளை நிறைவேற்றப் போதிய பணம் உழைக்க, வேண்டுமென்ற எண்ணத்துடன், என் கணவர் வெளிநாட்டிலிருந்து உழைத்துக் கொண்டிருக்கிறார்.

உடனே நான் அவளையும் கூட்டிக்கொண்டு போய் அவள்

விருப்பம் போலவே ஒரு கழுத்துச்சங்கிலியை வாங்கிக் கொடுக்கிறேன்.

"அம்மா என்ரை நம்பருக்கு நீலக்கல் பதிச்ச பென்ரன் தான் பொருத்தமாம்" என்று சொல்லி ஒரு பென்ரனையும் தேர்ந்தெடுக்கிறாள். அவள் அதனைச் சங்கிலியில் கோர்த்து அணிந்தபோது அவள் அடைந்த மகிழ்ச்சி... தன் சினேகிதிகளிடம் அதைக் காட்டியவள்;

"என்ரை அம்மா நல்லவ. எனக்கு, நான் கேட்டதெல்லாம் இல்லை எண்டு சொல்லாமல் வாங்கித்தாறவ. அம்மாவில எனக்குக் கொள்ளை விருப்பம். ஆனால் அம்மாவுக்கு அடிக்கடி ஆஸ்மா வாறது. அவவுக்கு ஏதும் நடந்தால் நான் என்ன செய்வனோ? எனக்கு நினைச்சுப் பாக்கேலாமல் கிடக்குதப்பா" என்று சொல்லிக் கொண்டது, எனக்கு இப்போது நடந்த நிகழ்ச்சி போன்று பசுமையாக நினைவில் நிற்கி றது.

மூன்று வருடங்களின் முன், எம் தாயகத்தைப் போர் மேகங்கள் சூழ்ந்த வேளை, அவள் தன் கூண்டைத் துறந்து புறப்பட்ட போது கடிதமொன்றை எழுதி மேசையில் வைத்து, அதன் மேல் அந்தச் சங்கிலியையும் வைத்துவிட்டுப் போனது எனக்கு ஞாபகத் தில் வருகிறது.

மீண்டும் அவளது படத்தில் என் புலன் செல்கிறது. அவளது கழுத்தை இப்போதும் ஒரு மாலை அலங்கரித்திருக்கிறது. ஆனால் "பென்ரன்" சட்டைப் பைக்குள் மறைவிடம் தேடியிருக்கிறது.

***

பயிற்சி முடிந்தபின் ஒருநாள் தேவகி வீட்டிற்கு வருகிறாள். என்னையறியாமல் நான் உணர்ச்சி வசப்பட்டுப் போகிறேன். அவளைக் கண்டதும் கட்டி அணைத்து முத்தமிட்டுக் கண்ணீரைக் சொரிந்து விட்டேன்.

"அம்மா! இதென்ன நீங்கள் இப்பிடி அழுகிறியள். நான் என்ன பிழையான செயலையே செய்திட்டு வந்து நிக்கிறன். இந்த மண்ணைக் காக்கிற தைரியத்தோட என்ரை மகள் வந்து நிக்கிறாள் அவளை ஆசீர்வதிப்பம் எண்டில்லாமல்... என்னம்மா கோழை மாதிரி அழுகிறியள். சீ! இப்பிடி யெண்டால் நான் வராமல் விட்டிருக்கலாம்"

அலுத்துக் கொள்ளுகிறாள். அவள் இதயத்தில் மறைத்து வைத்திருக்கும் பாச உணர்வுகளை அவளது கண்களே எனக்குக் காட்டித் தந்துவிட்டன. அந்த நிகழ்வின் பின் நான் அவளைக் காணும் போதெல்லாம் என் மன உணர்வுகளை மிகச் சிரமப்பட்டு மறைத்து

வந்திருக்கிறேன்.

அவளை நான் பாண்ட் சேட்டுடன் காணும் போது எனக்கொரு மகன் பிறக்கவில்லையே என்றிருந்த ஏக்கமும் எனக்கு அற்றுப் போய்விட்டது. தேவகி, ஓய்வு கிடைக்கும் நேரங்களில் வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்தாள்.

என் இனத்தவர் சிலர் எனக்கு அடிக்கடி உபதேசம் பண்ணத்தொடங்கினார்கள்.

"ஏன் கமலா, தேவகியை இப்பிடியே விட்டிட்டு இருக்கிறாய். வீட்டை வந்து போகைக்க, விட்டிட்டு வரச் சொல்லலாம் தானே"

அவர்களின் கதையைக் கேட்டு என் மனம் ஊமையாய்ச் சிரிக்கும். நல்ல வேளை. நான் தேவகியிடம் என்றுமே என் மனச் சாட்சியை அடகுவைக்க முயற்சிக்கவில்லை. அப்படி நான் முயன்றிருப்பின் அவளது கணிப்பில் நான் எவ்வளவு சிறுத்துக் கூனிக் குறுகிப் போயிருப்பேன்? இந்த நினைவு எனக்குச் சிறிது நிம்மதியை ஏற்படுத்துகிறது.

தேவகி வீட்டிற்கு வந்தாலே வீடு கலகலக்கும். தங்கைகள் இருவரும் அக்காவுக்குப் பிடித்தமான உணவு வகைகளைச் சேகரித்து வைத்திருப்பார்கள். அவர்கள் மூவருமாகச் சேர்ந்து சாப்பிடுவதைப் பார்த்து என் மனம் நிறைந்து போகும். தேவகி, வாய் ஓயாமல் தன் போராட்டச் சாதனைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பாள். தங்கைமார் இருவரும் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஒரு நாள், என் இளைய மகள் ரேவதி "அம்மா ! அம்மா!!" என்று அழைத்த வாறு வந்தாள்.

"அம்மா! எங்கடை அக்கா "பிக் அப்" ஓடிக் கொண்டு போறா. அவ என்னைக் காணேல்ல. நான் அவவைக் கண்டிட்டன். நல்ல வேகமாய் ஓடிக் கொண்டு போறா அம்மா"

என்னையறியாமல் என் மனம் புளகாங்கிதமடைகிறது. அதே சமயம் ரேவதியின் ஆர்வமான கதைகள், செயல்களில் உள்ள மாற்றம் என்னைத் திகிலடையச் செய்கிறது. என்னால் எதையுமே சொல்லவோ, செய்யவோ முடியாத ஒரு நிலையில் நானிருக்கிறேன். எனக்கு மனக்குழப்பங்கள் ஏற்படும் வேளைகளில் எத்தனையோ மைல்களுக்கப்பால் இருக்கும் என் கணவரை நினைத்துக் கொள்வேன். அவர் அருகில் இருந்திருந்தால் என் உள்ள உணர்வுகளை அவரிடம் சொல்லிப் பகிர்ந்து சிறிது ஆறுதலடையலாம். என்ன செய்வேன் நான்? என் உணர்வுகளை எழுத்தில் வடித்து அவருக்கு

அனுப்பி வைப்பேன். அவ்வளவு தான்.

சென்ற மாதம் எட்டாம் திகதி, தேவகியின் பிறந்த நாள். அதற்குச் சில நாட்களின் முன் தேவகி வீட்டிற்கு வந்திருந்தாள்.

"அம்மா! என்ரை பேத்டே எட்டாந் திகதி வருகுதெல்லே. அதுக்கு என்ன ஸ்பெஷலாய்ச் செய்து தரப்போறியள்? என்ரை "பேஸ்"ஸிலை இருக்கிற பிள்ளையளுக்குக் குடுக்க வேணும்"

அக்காவின் பிறந்த நாளுக்குத் தங்கைமார் இருவரும் "கேக்" செய்கிறார்கள். மிக அவதானமாகத் தமிழீழ உருவ அமைப்பை ஐசிங் செய்து கொள்கிறார்கள். வேறு சிற்றுண்டி வகைகளையும் தயாரித்து வைத்துக் கொண்டு, தேவகியின் வரவுக்காகக் காத்திருக்கிறார்கள்.

இரவு ஏழு மணி போல் தேவகி வந்தாள். தங்கைமார் இருவரும் அக்காவிற்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள். நான் அவளை ஆரத்தழுவி முத்தமிட்டு விட்டு, அன்று அவளுக்காக அர்ச்சனை செய்து கொண்டுவந்த திருநீற்றை, அவளது நெற்றியில் பூசி விடுகிறேன்.

அவளோ அவசரமாகத் தனது கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த குப்பியை எடுத்துத் திருப்பித் திருப்பி நன்றாகப் பார்த்து விட்டு,

"அம்மா, இறுக்கிக் கட்டிப் பிடிச்சா, குப்பி உடைஞ் சிருக்குமோ எண்டு பயந்திட்டன்" சிரித்தவாறே கூறினாள்.

"அம்மா எனக்கு வீரத் திலகமிடுகிறா, மகளே! வெற்றியோடு திரும்பி வா என்று. என்னம்மா!" என்கிறாள்.

"அக்கா! இஞ்சை வந்து பாருங்கோ. நாங்கள் செய்து வைச்சிருக்கிற பேத்டே கேக்கை"

ரேவதியின் அழைப்பைத் தொடர்ந்து போய்ப் பார்த்தவள், மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தாள். "ரேவதி, கேக்கை இப்பிடியே கொண்டுபோய் எங்கடை பிள்ளைகளுக்குக் காட்ட வேணும். எல்லாம் வடிவாய் "பாக்" பண்ணித் தாங்கோ" என்கிறாள்.

கடைசியாக நானும் பிள்ளைகளும் தேவகியை வழியனுப்பு வதற்காக கேற்றருகில் நிற்கிறோம்.

"அம்மா போட்டு வாறன். ரேவா, சாரு போட்டு வாறன்"

"தஸ்! த்ஸ்! த்ஸ்!"

சடாரிட்டது பல்லி. பீதியுற்ற ரேவதியும் சாருவும் கேட்டார்கள்;

“அம்மா ! ஏன் பல்லி சொல்லுது?”

என் மனதிலும் சலனம். அதை வெளிக்காட்டாமல், “அது மாலைப்பல்லி. சொன்னாலும் அர்த்தமில்லை” என்று கூறி மழுப்புகிறேன்.

அதுவே கடைசிச் சந்திப்பாக அமைந்து விட்டது. தமிழீழக் கேக்குடன் போனவள், தமிழீழக் கனவுடன் போய்விட்டாள். தேவகியின் வீரமரணத்தால் துவண்டு போகிறேன் நான். அவளது அருமைத் தங்கையரைத் தேற்ற வழியற்றுத் தவிக்கிறேன்.

என் மனதில் ஓர் உறுதி பிறக்கிறது. என் துயரை மனதில் மறைத்துக் கொண்டு அவர்களைத் தேற்ற முனைகிறேன்.

“பிறந்த நாங்கள் எல்லாரும் ஒரு நாளைக்குச் சாகிறது தானே. எத்தினை பேர் எத்தினை விதமாய்ச் சாகினம். போன மாதம் “சுப்பர் சொனிக்” அடிச்சு ரேவதியின்ரை வகுப்புப் பிள்ளை ஒன்று உடல் சிதறிச் சாகேல்லையே. அப்பிடி ஒண்டு எங்களுக்கை நடந்திருந்தால் என்ன செய்யிறது? கொக்காவின்ரை சாவு அர்த்தமுள்ளது. அதுக்காக நாங்கள் கவலைப் படக்கூடாது.”

“ஓம் அம்மா ! நீங்கள் சொல்லுறது சரிதான்” ரேவதி என் கூற்றை ஏற்றுக் கொள்ளுகிறாள்.

“அம்மா!” என்ற குரல் என்னை நினைவலைகளிலிருந்து மீட்கிறது.

“என்னம்மா பேசாமல் அக்காவின்ரை படத்தையே பாத்துக் கொண்டு நிக்கிறியள். அக்காவிட்டப் போக வெளிக்கிடுங்கோவன்”

மூவரும் போகிறோம். “மாவீரர் துயிலும் இல்லம்” என்று பொறிக்கப்பட்டிருக்கும் பகுதிக்குள் நுழைகிறோம். அது ஒரு புனிதமான இடம். புனித ஆத்மாக்களின் புகழுடல்களின் புகலிட மென்பது அதற்குள் பிரவேசித்ததும் எம் உணர்வுகளுக்குப் புரிகி றது.

தேவகியின் புதைகுழி மண்ணால் நிரப்பப்பட்டுக் கிடந்தது. அவளது பூவுடலைப் போர்த்திருக்கும் மண்ணைக் குனிந்து நான் முத்தமிடுகிறேன். கண்கள் அந்த மண்ணின் மேல் கோலமிடுகின்றன. நாங்கள் கொண்டு சென்றமாலையை அதன் மேல் வைத்து அஞ்சலி செய்கிறோம்.

கண்ணீர் சொரிந்ததால் என் மனப்பழு குறைகிறது. மனதிலும் ஒரு தெளிவு பிறக்கிறது. நாங்கள் பூக்களை ஒவ்வொரு கல்லறைக்கும் வைத்து அஞ்சலி செலுத்த நெடு நேரம் பிறக்கிறது. வீடு திரும்பும்

போது மூவருமே சிறிது தென்புடன் காணப்படுகிறோம்.

பொழுது சாயும் வேளை, தேவகியின் படத்தின் முன் குத்துவிளக்கை ஏற்றி வைக்கிறேன். என்ன! படத்தின் முன் ரேவதியின் சங்கிலி தெரிகிறது. அதன் கீழ் ஓர் கடிதம்.

முன்னர்.... தேவகி கூண்டை உடைத்துப் புறப்பட்ட நாள் நினைவில் வருகிறது. அதே போல...

நடுங்கும் கரங்களால் கடிதத்தைப் பிரிக்கிறேன்.

"அக்காவின் பணியைத் தொடர நான் புறப்படுகிறேன்" - ரேவதி.

நான் நினைத்தது நடந்து விட்டது. என் மன அலைகள் ஒருபோதும் ஓயப்போவதில்லை.

– வெளிச்சம்

# நீ நடந்த பாதையிலே...

*புள்ளிமானைப்போல் துள்ளித்திரிந்தாள், சுமித்தா. அள்ளிப்போட்ட தாவணியை அவளது தோழியான ராதா சீர்செய்து கிளிப் பண்ணிவிட்ட போது, நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்து, மகிழ்வும், நிறைவும் அவளுக்கு ஏற்பட்டது. தோழிகள் இருவரும் கோயிலுக்குப் புறப்பட்டனர்.*

*சுமியின் தலையிலிருந்த கனகாம்பர மாலையைச் சீர்செய்தவாறே ராதா கேட்டாள்.*

*"சுமி! நீர் சுவிஸ்சுக்குப் போனபிறகு சாறி உடுக்க சான்ஸ்ஸே இல்லாமப்போயிடும் என்ன!"*

*"நான் அங்கைபோனாலும் சாறிதான் உடுப்பன். எங்கட பரம்பரைப் பண்பாட்டை நான் மீற விரும்பேல்ல"*

*வெடுக்கெனப் பதிலளித்தாள் சுமித்தா.*

*"நீர் விரும்பாட்டியும் அவற்றை விருப்பத்தைப் பேணி நடக்கத்தானே வேணும்"*

*ராதாவின் வார்த்தைகள் சுமித்தாவின் முகத்தில் குங்குமமாகச் சிவப்பை ஏற்படுத்தின. அவள் சுவிஸ்சை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்க இன்னும் நான்கு நாட்கள் இருந்தன.*

*சுமி, முருகப்பெருமானிடம் மனதார வேண்டிக் கொண்டாள் "முருகா! என்னுடைய வாழ்க்கைப் பயணம் சீராக அமைய நீயே எனக்கு வழிகாட்ட வேண்டும். தந்தைக்கு உபதேசம் செய்தவனே! நின் அருள் சுரந்து என்னைக் காத்திடுவாய்"*

அன்றைய இரவு ஏனோ அவளது உள்ளத்தின் அமைதி குலைந்து, தூக்கம் அவளை அணுக மறுத்தது. தாய் மண்ணை விட்டுப் பிரியப்போகிறோம் என்ற ஏக்கமோ அல்லது பெற்றார், உற்றாரைப் பிரிய வேண்டியதால் ஏற்பட்ட தவிப்போ எதுவென்று அவளுக்குப் புரியவில்லை. இனந்தெரியாத குமைச்சல் ஒன்று அவளது மனதைக்குடைந்து கொண்டிருந்தது. அவளது நினை வலைகள் கடந்துவந்த பாதையை நோக்கிப் பாயத்தொடங்கின.

பள்ளிப்பருவத்தில், சிட்டுக் குருவியாய் அவள் சிறகடித்த நாட்கள் பசுமையானவை. அந்தப் பசுமைக்கு நீர்வார்த்து மெரு கேற்றியவன், பார்த்தீபன். அவன் பரம ஏழையானாலும் படிப்பிலும் சரி, பண்பிலும்சரி முதன்மையானவனாய் விளங்கினான். அவனது எடுப்பான தோற்றமும், துடுக்கான போக்கும் சுமியின் கவனத்தை ஈர்த்துக் காந்தமெனக் கவர்ந்தது. மலைக்கும் மடுவுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை எண்ணிப் பார்த்தீபன் தயங்கினான்.

"சுமி! நான் படிச்சு ஒரு நல்ல நிலைக்கு வந்தால்... எங்கட வாழ்க்கையை இணைத்துக் கொள்ளலாம் என்று நம்புறன்"

"தீபன்! நிச்சயமாய் நீங்கள் ஒரு டொக்டராய் வருவீங்கள். அந்தத்திறமை உங்களுக்கு இருக்கு. ஆனபடியால... நான் எத்தனை வருசம் போனாலும் உங்களுக்காகக் காத்திருப்பன்."

ஏனோ இந்த வார்த்தைகள் மாறி மாறி அவளது சிந்தையில் தோன்றி, அவளைச் சிதறடித்துக் கொண்டிருந்தது.

"ம்!..." புரண்டு படுத்தாள், சுமி.

"நானாக தீபனை ஏமாற்றவில்லை. அவர்தானே என்னை மறந்து இயக்கத்துக்குப்போனவர். அதற்கு நான் என்ன செய்ய முடியும்?"

சுமி, தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டாள். தீபனைக் கடைசியாகச் சந்தித்த நாள் நினைவுகள் அவளது மனத்திரையில் தோன்றி அவளை அலைக்கழித்தது.

டியூசன் வகுப்பு முடித்து வந்தவேளையில் சுமி அவனைச் சந்தித்தாள்.

"தீபன்! என்ன மாதிரி, எல்லாம் படிச்சிட்டீங்களே! பரீட்சைக்கு இன்னும் ஒரு மாதம்தானே இருக்கு"

"சுமி! மற்றவைக்கெல்லாம் இந்தப் பரீட்சையை எதிர் நோக்கிற ஒரு பிரச்சனைதான் இருக்கு. ஆனால் எனக்கு.... அதோட

மற்றுமொரு பிரச்சனையும் இருக்குது."

கலகலவெனச் சிரித்தாள், சுமி.

"அது என்ன பிரச்சனை என்று நான் அறியலாமோ?" கண்ணைச் சிமிட்டியவாறு தீபன் கூறினான்.

"அதுதான் என்னுடைய வருங்கால வாழ்க்கைப் பிரச்சனை." சுமியின் இதயம் ஒரு கணம் புளகாங்கிதத்தால் பூரித்துப்போனது. தான் வானத்தில் எழுந்து பறந்துதிரிவது போன்றதொரு பிரமை அவளை ஆட்கொண்டது.

இதே நினைவுகளை எத்தனையோ தடவைகள் இரைமீட்டு இறுமாந்திருந்தவள், அவள். ஆனால் ஒருநாள்.... அந்த நினைவுக்குப் பங்கம் வந்துவிட்டது.

எமது மண்ணை ஆக்கிரமிக்கவென சிறீலங்கா இராணு வத்தினர் ஆனையிறவிலிருந்து புறப்பட்டுவிட்டனர். ஆக்கிரமிப் பாளனது அகோர ஷெல் வீச்சினால் பரந்தன், கிளிநொச்சியை அண்டிய பகுதியிலுள்ள கிராமத்து மக்கள் தம் இல்லிடங்களைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. சுமியின் குடும்பத்தினரும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. அவர்கள் இடம்பெயர்ந்து, ஸ்கந்தபுரத்திலுள்ள மாமாவின் வீட்டில் குடியேறினர்.

தீபன் குடும்பத்தினர் சில காலம் பாடசாலையில் தங்கி யிருந்தனர். பின்னர், வன்னேரிக்குளத்தில் காடுவெட்டி சிறு குடிசை யொன்றை அமைத்து அங்கு குடியேறிவிட்டனர். கல்வியே கருந்தன மென்றிருந்த தீபன், இடையில் ஏற்பட்ட குழப்பத்தினால் மனம் தளர்ந்து போனான். அத்துடன் உழுதுண்டு வாழ்ந்து வந்த அவனது குடும்பம், ஊதியம் ஏதுமற்ற நிலையில் வறுமையில் உழலத் தொடங்கியது.

இந்தச் சமயத்தில், அவர்களுடைய கிராமத்தவர் சிலர் தமது வீடுகளுக்குச் சென்று வருவதை அவதானித்த அவனது அப்பா தானும் ஒருதரம் போய் வந்தாலென்ன என்று எண்ணமிட்டார். மனைவியை அழைத்து, தன் எண்ணத்தைக் கூறினார்.

"இஞ்சாரும் கமலம்! எல்லோரும் வீடுபாக்க எண்டு போய்வாறாங்கள். நானும் ஒருக்காப்போய் கொஞ்சத் தேங்காயும் உரிச்சுக்கொண்டு ஒரு அரைமூட்டை நெல்லையும் கட்டிக்கொண்டு வருவமென்டு பாக்கிறன். ஆனசாப்பாடில்லாமல் பிள்ளையள் வாடிப்போயிருக்கிறதை என்னால பாக்கேலாமக் கிடக்கு"

*சிறிது நேரம் மௌனத்தைத் தழுவியிருந்த கமலம் அவரது விருப்பத்தை ஆமோதித்தாள்.*

*“எதுக்கும் வலு அவதானமாய்ப் போகவேணும் நீங்கள் போய்வாற வரைக்கும் எனக்கு நெஞ்சில தண்ணி இருக்காது”*

*மனைவியின் சம்மதம் கிடைத்த மறுகணமே அவர் புறப்பட்டுவிட்டார். அன்றைய இரவுவரை வீடு திரும்பாத அவரை விடிய விடிய விழித்திருந்து காத்திருந்தனர் அந்தக் குடும்பத்தினர்.*

*அவர் வரவில்லை. செய்திதான் வந்தது. வீடு பார்க்கப் போனவர்கள் சிலரை இராணுவத்தினர் வெட்டிக்கொலை செய்து விட்டனராம். அந்தப் பட்டியலில் தீபனது அப்பாவும் ஒருவரானார்.*

*தீபன் ஒரேயடியாக மனமுடைந்து போனான். தனது தந்தையைக் கொலை செய்தவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற வேகம் அவனுள்ளத்தில் புகுந்து கொண்டது.*

*விளைவு...*

*ஒரு நாள் சுமியின் கையில் கடிதமொன்று கிடைத்தது. கடித உறையில் தீபனது கையெழுத்தைக் கண்டு உற்சாகத்துடன் அதைப் பிரித்தாள், பிரித்தவளுக்கு அங்கு பலத்த ஏமாற்றம் காத்திருந்தது.*

அன்புள்ள சுமி,

எனது நிலைப்பாட்டை விளக்குவதற்காகவே இக்கடிதத்தை உமக்கு எழுதுகிறேன். “சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும். படிப்படியாக அழிந்து போக வேண்டும் ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை.” இந்தப் பொன்மொழிகளைப் பின் பற்ற வேண்டிய அவசியம் எனக்கு வந்துவிட்டது. இத்தனை காலமும் எதுவிதப் பாதிப்புமின்றி, கல்வியில் மட்டும் என் முழுக் கவனத்தையும் செலுத்திவந்த எனக்கு, அப்பாவின் கொலைக் குப் பின்னர்தான் இங்கு நடைபெறும் அனர்த்தங்களும், ஆக்கிரமிப்பாளனின் அடாவடித்தனங்களும் கண்ணுக்குத் தெரிந்தது. எனவே, உமது எதிர்கால நல்வாழ்வுக்கு எனது வாழ்த்துக்களைக் கூறிவிடை பெறுகிறேன்.

அன்புடன்,

தீபன்.

கடிதத்தைப் படித்த சுமி, பித்துப் பிடித்தவளானாள். தீபன் தன்னை ஏமாற்றிவிட்டதாக கூட அவன்மீது ஆத்திரமடைந்தாள்.

பெற்றோரின் ஏற்பாட்டில், இன்னும் சில மாதங்களில் அவள் சுவிஸ்ஸில் வாழும் சுதர்சனது மனைவியாகப் போகிறாள்.

ஆனால்...ஏனோ இன்று தீபன் அவளது மனதில் தோன்றி, அவளைக் குழப்ப நிலைக்கு ஆளாக்கிக் கொண்டிருந்தான்.

தீபன்! நான் உங்களை மனமார நேசித்தேன். சலனமற்றிருந்த உங்கள் மனதில் அன்பெனும் ஊற்றைக் கசியவைத்ததும் நானேதான். ஆனால்... நீங்கள் ஏன் இப்படிச் செய்தீர்கள்? உங்களது நிலையில் இருந்து பார்க்கும் போது, உங்களது முடிவு சரியானதுதான். ஆனால், அதற்காக நான் என்ன செய்யமுடியும்?

நினைவுகளில் மூழ்கிப்போன சுமியை, நித்திராதேவி அரவணைத்துக்கொண்டாள். சொற்பநேரம் கண்ணயர்ந்திருந்த வளை குண்டுச்சத்தங்களின் அதிர்வும், வேட்டொலிகளும் விழித் தெழவைத்தன.

ஏற்கனவே அம்மா எழுந்துவிட்டாள் போலும், அப்பாவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

“கிளிநொச்சிப் பக்கமாத்தான் ஏதோ சண்டை நடக்குதுபோல கிடக்கு. அப்படி ஏதும் பிரச்சனை எண்டால் என்னெண்டு நீங்கள் நாளண்டைக்கு சுமியைக் கூட்டிக்கொண்டு போறது. ஆமிக்காறர் அங்கால ஆக்களை எடுக்கிறாங்களோ தெரியேல்ல...”

“எல்லாம் நல்லபடி நடக்கும். நீர் ஏன் இப்ப வீணாய் அங்கலாய்க்கிறீர்?”

ஒரே வார்த்தையில் அப்பா அம்மாவின் வாய்க்குப் பூட்டுப் போட்டுவிட்டார். சுமிக்கு ஏனோ அப்பா மீதும், அம்மாவின் மீதும் சினம் தோன்றியது. அவளது உள்ளத்தில் ஆழப்புதைந்து கிடந்த உணர்வலைகள் விழிப்படைய முயன்றன.

“இந்தளவு குண்டுச் சத்தத்துக்கையும் நிண்டு அடிபடுறது என்னுடைய தீபன் மட்டுமல்ல. என்னை ஒத்த வயதுடைய பிள்ளை களும் தான். நானும் எனது குடும்பமும் எங்களுடைய சொந்த நலன் களிலேயே அக்கறைகொண்டிருக்கிறோம். யாருக்காக அவர்கள் போராடி மாள்கிறார்கள். எங்களைப்போல ஒத்த மக்களுக்காகத் தான்.”

இந்த உண்மையை அவள் உணர்ந்து கொண்டபோது

*இதயத்தின் ஓர் மூலையில் குற்றவுணர்வு தலைதூக்கியது. மாறி மாறி அதிர்வுகளை ஏற்படுத்திய குண்டுச் சத்தங்கள் அவளது இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்தன.*

*மறுநாட்பொழுது விடிந்தது. விடுதலைப் புலிகள் கிளி நொச்சி நகரைக் கைப்பற்றி விட்டதாகச் செய்தி பரவியது. சுமியின் இதயம் இனம் புரியாத மகிழ்ச்சியினால் நிறைந்திருந்தது. அந்த மகிழ்ச்சிக்குக் காரணம் தான் பிறந்து வளர்ந்த மண் மீட்கப்பட்ட தாலா? அன்றி அந்த வெற்றி எம் இனத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்ற எண்ணம் அவளுள்ளத்தில் வேரூன்றியதாலா?*

*சுமியின் உள்ளம் ஒரு விவாத மேடையாமாறி, தன் உள்ளத்து உணர்வுகளை எடைபோட முயன்று கொண்டிருந்தது. அவளுடைய தோழி ராதா, பரபரப்புடன் அவளிடம் ஒடி வந்தாள்.*

*“சுமி! நியூஸ் கேள்விப்பட்டநீரே?”*

*“ஓ…! எனக்குத் தெரியும். கிளிநொச்சியில் இருந்து ஆமியை விரட்டியாச்சு”*

*கலகலவெனச் சிரித்தவாறு சொன்னாள் சுமி. ராதா முகத்தில் சோகம் ததும்ப செய்தியைச் சொன்னாள்.*

*“கிளிநொச்சியை கைப்பற்றின சமரில எங்கட கிளாஸ்மேற் பார்த்தீபன் வீரச்சாவாம்”*

*ஐயோ தீபன்! கத்தியவாறே மயங்கி விழுந்தாள் சுமி, அம்மாவுக்கு ராதாவின்மேல் கோபமாக வந்தது.*

*ஏன் பிள்ளை அப்பிடியான செய்தியை வந்து சுமியிட்டைச் சொன்னனீர் தனக்குத் தெரிஞ்ச ஆக்களெண்டால் அவள் தாங்க மாட்டாள்”*

*மயக்கம் தெளிந்த சுமி, அம்மா எவ்வளவோ தடுத்தும் கேளாதவளாய் ராதாவுடன் தீபனுடைய வீட்டிற்குப் புறப்பட்டு விட்டாள்.*

*அங்கே… நடுமுற்றத்தில் கொட்டகை அமைத்து, தீபனது புகழுடலைக் கிடத்தியிருந்தார்கள். அவனுடைய அம்மாவும், சகோதரர்களும் அவன் மீது விழுந்து கதறிக் கொண்டிருந்தார்கள்.*

*சுமி மனதில் ஒருவித துணிவை வரவழைத்துக் கொண்டாள். நேராக நடந்து போய் தீபனது புகழுடலுக்கு அருகில் நின்று, அவனது முகத்தையே வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தாள். நிறைவான புன்னகையுடன் அவன் மீளாத்துயிலில் ஆழ்ந்திருந்தான்.*

தன்னைக் கவர்ந்த அந்தமுகம் இன்று தாய்மண்ணைக் காதலித்து, அந்தக் காதலுக்குத் தன்னையே அர்ப்பணித்து பெரு வெற்றியை ஈட்டித்தந்துவிட்டு மாவீரன் என்ற புகழாரத்தை ஏற்று அமைதி பெற்றுக் கிடக்கிறது.

தீபனது புகழுடலுக்கு யார் யாரோ வந்து பூமாலை சாத்தி, அஞ்சலி செலுத்தியவாறிருந்தனர். ஆம் இன்று அவன் ஈன்றெடுத்த தாய்க்கு மட்டும் சேய் அல்லவே.

இந்த மண்ணின் மைந்தனல்லவா. அவனுக்கு அஞ்சலி செலுத்தவேண்டியது எம் மண்ணில் வாழும் மக்கள் அனைவரினதும் கடமையல்லவா? அதனால்தான் நிறையப்பேர் வந்து போகிறார் களோ...

சுமியின் பார்வை அவனது முகத்திலிருந்து விலகியபோது அவனுடைய புகழுடலைப் போர்த்தியிருந்த புலிச்சின்னத்தை அவதானிக்க முடிந்தது. அவளையறியாமலே அவளது மேனி யெங்கும் சிலிர்த்து, மயிர்க்கால்கள் குத்திட அவள் உணர்ச்சி வசப் பட்டாள். மானசீகமாக தீபனுடன் உரையாடினாள்.

"தீபன்" உங்கள் கரங்கள் அணைத்த ஆயுதம் இனி எனதாகும். நீங்கள் நடந்த பாதையிலே என் கால் பதியும்"

சுமி, அருகிலிருந்த தட்டத்திலிருந்து பூக்களை அள்ளி அவனது புகழுடலின்மீது வைத்து அஞ்சலித்தாள்.

- களத்தில் - 30.04.2000

# ஒத்தடம்

*ஊரே அடங்கிப் போயிருந்தவேளை. காரிருளின் அமைதியைக் குலைத்தது. அந்த அபலையின் கூச்சல்.*

*“ஐயோ! என்னால தாங்க முடியேல்லையே! ரெண்டு பேரையும் ஒண்டாக் குடுத்திட்டுத் தவிக் கிறனே! கர்த்தரே! என்ரை மனத்துக்கு அமைதியைத் தந்து காத்தருளும், என்னால தாங்க முடியாது. யேசுவே! யேசுவே!”*

*பெருங்குரலெடுத்து அழத் துவங்கிவிட்டாள் பிலோமினா.*

*நித்திராதேவியினால் நிராகரிக்கப்பட்ட நிலையில் படுக்கையில் உழன்று கொண்டிருந்த றீட்டா, எழுந்து போய் அம்மாவின் கைகளைப் பிடித் துக் கொண்டாள். உடல் சோர்ந்த நிலையில், அவளுக்கு மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. அப்படியே தாயை அணைத்துத் தனது மடியில் படுக்கவைத்துக் கொண்டாள்.*

*“கொஞ்சம் படுத்திருங்கம்மா. நான் விசுக்கி விடுறன்” சொல்லிக்கொண்டே அருகில் கிடந்த காகித மட்டை ஒன்றை எடுத்து விசிறிவிட்டாள்.*

*“மகள், என்னால தாங்க முடியேல்ல, நானும் அழிஞ்சு போனாத்தான் என்ரை கவலையும் தீர்ந்து போகும்”*

*சொன்னவளின் கண்களிலிருந்து, கண்ணீர் அருவியெனப் பாயத்தொடங்கியது. கண்ணீரைச்*

சொரிந்தாலாவது தாயின் மனப்பளு சற்றுக்குறையும் என நம்பிய றீட்டா, மௌனத்துடன் அவளது தலையைத் தடவி விட்டுக் கொண்டிருந்தாள். அவளது எண்ணங்கள் நான்கு நாட்களின் முன் நடந்த நிகழ்வுகளை நோக்கி அலையெனத் தாவின.

றீட்டாவின் அப்பா, திண்ணைக்குந்தில் இருந்தவாறு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார். படலையைத் திறந்து கொண்டு சின்னப்பு மாஸ்டர் வேகமாய் வந்தார்.

"ஆசீர்வாதம், என்னடாப்பா யோசினை பலமாக்கிடக்கு?"

"என்னத்தை மாஸ்டர் யோசிக்கிறது. இப்பிடியே எங்கடை காலமும் வெட்டியாக் கழியுதே எண்டுதான் யோசிக்கிறன்"

சலிப்புடன் ஆசீர்வாதம் சொன்னார்.

"அதுக்குத்தான் நான் உனக்கு ஒரு நல்ல சேதியோட வந்திருக்கிறன்"

"மெய்தானே மாஸ்டர் என்ன செய்தியெண்டு சொல்லுங்களன்"

"நேற்று இரவு, வெரித்தாஸ் செய்தியிலை சொன்னவங்கள், சிறீலங்கா அரசாங்கம், எங்கடை கடலிலை மீன்பிடிக்கக்கூடா தெண்டு போட்டிருந்த தடையை நீக்கி இருக்காம்"

மாஸ்டர் சொல்லி வாய் மூடமுன் ஆசீர்வாதம் மகிழ்ச்சியுடன்,

"அப்ப பின்னை நாங்க பயமில்லாமக் கடலுக்கை இறங்கலா மெண்டு சொல்லுங்க"

மாஸ்டர் இடை மறித்தார்.

"ஆசீர்வாதம், இதிலை இன்னொரு விசயமும் இருக்குது. இனிமேல், கடற்றொழிலாளருக்கெண்டு குடுத்து வந்த நிவாரணத்தை வெட்டிப் போடுவாங்கள், தொழில் செய்யுறியள தானே. உங்களுக் கென்ன நிவாரணமெண்டு."

"மாஸ்டர்"…. என்று இழுத்தவர், "அவங்கட நிவாரண எங்களுக்கு என்னத்துக்குக் காணும். நாங்க தொழிலுக்கெண்டு போனா எவ்வளத்தை உழைச்சு, எப்பிடியெல்லாம் சீவிக்கலாம். சும்மா விட்டுத் தள்ளுங்க, அவங்கட கதை"

"நீ சொல்லுறதும் சரிதான் ஆசீர்வாதம். நம்மட சனங்கள் தொழிலுக்குப் போகாம படுற கஷ்டம் ஆருக்கு விளங்கப் போகுது. அவனவன் உயிரைப் பணயம் வைச்சுத் தொழில் செய்யுறான். நம்மைப் போல பயந்த சீவன்கள் இப்பிடியே கஷ்டத்தை

அனுபவிச்சுக் கொண்டு சீவிக்கிறம்."

சொல்லி முடித்தவர் எதையோ நினைத்துக் கொண்டவராய்,

"ஆசீர்வாதம்! நான் ஒருக்காப் போய் மத்தவங்களிட்டையும் சொல்லிப் போட்டு வருவம் எண்டு பாக்கிறன்"

சொல்லிக் கொண்டே புறப்பட்டு விட்டார் சின்னப்பு மாஸ்டர், அவர் போன கையோடு ஆசீர்வாதம், மூலையில் கிடந்த வலைகளை எடுத்து, அவற்றிலிருந்த ஓட்டைகளைப் பொத்தத் துவங்கிவிட்டார்.

இவ்வளவு காலமும் அவரைக் கடலுக்குப் போக விடாமல் ஒரேயடியாகத் தடுத்து வைத்திருந்த அவரது மனைவி பிலோமினா, இந்த நற்செய்தியைக் கேட்டதும் நீண்டதொரு நிம்மதிப் பெரு மூச்சை விட்டாள்.

நீண்ட நாட்களின் பின் ஆசீர்வாதம் உற்சாகத்துடன் செயற் பட்டார். அவரது மூத்த மைந்தன் டேவிட், தானும் கடலுக்கு அவருடன் வரப்போவதாகப் பிடிவாதமாக நின்றான். ஆசீர்வாதத் துக்கு அவனை அழைத்துப் போவதில் துளியும் இஷ்டமில்லை. மறுத்துப்பார்த்தார். பிலோமினா குறுக்கிட்டாள்.

"கடலுக்கை போக அனுமதி குடுத்திட்டாங்க எண்டுதானே நம்மட சின்னப்பு மாஸ்டர் சொன்னவரு. புள்ளையும் ஆசைப் படுறான். கூட்டித்தான் போங்களேன்"

ஆசீர்வாதம் வாய் திறக்கவில்லை. அவரது மௌனம் தனக்குச் சாதகமாகி விடவே, டேவிட் மகிழ்ச்சியினால் துள்ளிக்குதித்தான். அவனது வாய் பாடலொன்றை இசைக்கத் தொடங்கியது. அவனது மகிழ்ச்சிப் பிரவாகத்தை அவதானித்துக் கொண்டிருந்த றீட்டாவுக்கு, அவன் பாடிய சில வரிகள் அச்சத்தைக் கொடுத்தன.

"மச்சத்தைத் தேடி வலை வீசவெனச் சென்றவர்கள் மிச்ச மெதும் இல்லாத வேதனைகள் தாங்கி வரும்"

சட்டென அவனை இடை மறித்தவள்,

"அண்ணன் ஏனிப்பிடி அபசகுனம் மாதிரிப் படிக்கிறாய்?" அதட்டலோடு அவனிடம் கேட்டு விட்டாள், றீட்டா.

"அட இதென்ன இவள் பாட்டும் பாட விடமாட்டாளாம். இவளுக்கு இப்ப, வாய் நீண்டுதான் போச்சுது. இரு வாறன்"

அவளை அடிப்பதற்கு நெருங்கி வந்தவனை, அம்மா, அதட்டி அடக்கி விட்டாள். வள்ளங்கள் எல்லாம் பழுது பார்க்கப்பட்டன.

மறு நாள், பல வள்ளங்கள் ஒன்றாகக் கடலில் இறங்கின. அவற்றுள் ஒன்றில், ஆசீர்வாதமும், டேவிட்டும் மிகுந்த நம்பிக்கையோடு பயணத்தைத் தொடங்கினர். நீண்ட இடைவெளிக்குப் பின், அவர்களது மேனியைக் கடற்காற்று தழுவியபோது, அவர்களுக்குப் புதுத் தென்பு பிறந்தது.

பிலோமினாவும், அவளது இரு பெண்களும் கடலுக்குப் போனவர்களது வரவை ஆவலுடன் காத்திருந்தனர். இருளின் அமைதி யைக் கலைத்தது. சிறீலங்கா கடற்படையினரின் பீரங்கிகளிலிருந்து புறப்பட்ட வெடிச் சத்தங்கள். தாயும், மக்களும் தவித்துப்போயினர். படபடக்கும் நெஞ்சங்களுடன், பதறித் துடித்த அவர்களுக்கு, காற்றோடு கலந்து வந்த செய்தி நாராசமாய் அவர்கள் காதில் விழுந்தது.

சிறீலங்கா அரசின் வஞ்சக வலைவிரிப்பில், ஆசீர்வாதமும், டேவிட்டும் ஏன் அவர்கள் பயணம் செய்த படகும் கூட மிச்சமேதும் இல்லாமற் போய் விட்டது. றீட்டா, குனிந்து தனது மடியில் தலை வைத்துப் படுத்திருக்கும் தாயை ஒருமுறை பார்த்தாள். அவள் சிறிது கண்ணயர்ந்திருந்தாள்.

மீண்டும் றீட்டாவின் நினைவுகள், சில நாட்களின் முன்னர் நடந்த சம்பவம் ஒன்றை நோக்கித் தாவியது.

அண்ணன் டேவிட் வளர்த்த முயல் ஒன்று நான்கு குட்டிகளை ஈன்றிருந்தது. காலையில் முயல்களுக்கு உணவளிக்கப் போன டேவிட், அங்கிருந்தவாறே குரல் கொடுத்தான்.

“அம்மா! அம்மா!! இங்க வந்து பாருங்க, முயல் குட்டியளைக் காணேல்ல, ஒண்டுதான் இருக்கு மத்தது மூணையும் காணேல்ல”

“சின்னக் குட்டியள் தானே, அங்கினைக்க எங்கையும் ஒளிச்சுக் கிடக்கும். வடிவாய்த் தேடிப் பாக்கிறதைவிட்டிட்டுக் காலங் காத்தாலை அவலமாய்ச் சத்தம் போடுறாய்!”

அம்மா, அண்ணனைப் பேசிக் கொண்டே முயற்கூடு அமைக்கப்பட்டிருந்த இடத்திற்குப் போனாள். அம்மாவின் பின் னால் றீட்டாவும், தங்கையும் போயினர். எல்லாருமாகச் சேர்ந்து தேடுதல் வேட்டையில் இறங்கினர். கூட்டின் உட்புற மெங்கும், அலசி ஆராய்ந்தும் அவற்றைக் காணவேயில்லை. தாய்முயல் மட்டும் சோகமே உருவாகப் படுத்திருந்தது.

“நான் நினைக்கிறன். பாம்பு தான் வந்து புடிச்சிருக்கும். சிக்காராய் அடைச்சிருக்கிற கூட்டுக்கை வேறை என்ன வரப் போகுது?

எனக்கெண்டால், தாய் முயலைப் பாக்க வயித்தைப் பத்தி எரியுது. குட்டியளைப் பறி குடுத்துப் போட்டுக் கிடக்கிது.”

அம்மா அன்று சொன்ன வார்த்தைகளை நினைவு கூர்ந்தவள், அம்மா இன்று கிடக்கும் நிலையை ஒரு கணம் ஒப்பிட்டுப் பார்த்தாள். மீண்டும் அவளது நினைவலைகள் தொடர்ந்தன.

அண்ணன் அழத் தொடங்கி விட்டான். அம்மாவுக்குத்தாய் முயலின் சோகத்தைப் பார்க்க வேதனை ஒருபுறம். மறுபுறம் மகன் அழுவதைப் பார்த்துச் சகிக்க முடியாதவளாய்,

“மூண்டு குட்டியளை முழுங்கினது தூர எங்கையும் போயிராது. உங்கினைக்கதான் எங்கையும் அரக்கேலாமல் கிடக்கும்”

சொல்லிய அம்மா, சேலையை இழுத்துச் செருகிக் கொண்டாள், மறுகணம், ஒரு பெரிய தடியை எடுத்துக் கொண்டு வளவின் மூலை முடுக்குகளில் தேடத் துவங்கிவிட்டாள்.

மகன்! இங்க பாரன் அரைஞ்ச அடையாளங் கிடக்குது. நான் சொன்னது சரிதான் போலகிடக்கு.

“ஓம் அம்மா! சரியாத்தான் கண்டு பிடிச்சிட்டீங்க நீங்க”

சொல்லிக் கொண்டே டேவிட், மணல் மேல், சிறு கோடாக இழுபட்டிருந்த அடையாளத்தைப் பின்பற்றிப் போனான். றீட்டாவும், தங்கையும் அண்ணனின் பின்னால் போய்க் கொண்டிருந்தார்கள்.

இதற்குள், அடுக்கி வைத்திருந்த கிடுகுகளின் கீழ் சுருண்டு கிடந்த சாரைப்பாம்பை அம்மா கண்டு பிடித்து விட்டாள். பாம்பைப் பழிவாங்கும் நோக்கத்துடன் அம்மா கையில் வைத்திருந்த தடியினால் ஓங்கி அடிக்கத்தொடங்கினாள். அம்மா அன்று நின்ற கோலத்தை இப்போது நினைக்கையிலும் றீட்டாவின் மேனி உணர்ச்சி வசப்பட்டு, மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. புல்லரித்த தனது மேனியை ஒருகணம் சிலிர்த்துக் கொண்டாள், றீட்டா, நினைவுகள் மீண்டும் தாவின.

குற்றுயிராய், புரண்டுகிடந்த பாம்பை, அண்ணன் டேவிட் அடித்துச் சாகடித்தான். அம்மாவின் முகத்திலிருந்த கவலை மறைந்து, இப்போது புன்னகை தோன்றியிருந்தது. வெற்றிக் களிப்புடன் அம்மா கையிலிருந்த தடியைத் தூர எறிந்துவிட்டு,

“டேவிட்! இந்தப் பாம்பை தூக்கியந்து அந்த முயலுக்கு முன்னால போட்டு விடு மகன். அப்பத்தான் அதுக்குக் கவலை கொஞ்சமெண்டாலும் குறையும்”

அம்மாவின் அந்த வார்த்தைகள் இப்போது அவளது; செவிப்பறையில் மாறி மாறி வந்து மோதிக் கொண்டேயிருக்கின்றன. விளைவு... அவளது உணர்வுகள் விழிப்படையத் தொடங்கின.

அம்மா , ஒரு விசும்பலுடன் திடீரென்று எழுந்து உட்கார்ந்து கொண்டாள். இதமாக அவளது முதுகைத் தடவிக் கொடுத்த றீட்டா, மெதுவாகப் பேசத் தொடங்கினாள்.

"அம்மா! எங்களுக்கு மட்டுந் தானே இந்தப் பிரிவுகளும், கவலைகளும், என்று நினைச்சுக் கொண்டிருக்கிறியள். எங்களைப் போல எத்தினை பேர் இப்பிடிக் கண்ணீரோடையும், கவலையோ டையும் வாழ்ந்து கொண்டிருக்கினம். இதுகளுக்கெல்லாம் ஒரு முடிவு வரவேணுமெண்டால் எனக்குத் தெரிஞ்சது ஒரு வழி தான்"

சொல்லிக்கொண்டே போனவள், ஒரு கணம் தனது பேச்சை இடைநிறுத்தி, நீண்ட ஒரு பெரு மூச்சை வெளிப்படுத்தினாள். தன்னை ஒரு கணம் ஆசுவாசப்படுத்திக் கொண்ட அவள், தனது ஆணித்தரமான முடிவை அம்மாவிடம் எடுத்துக் கூறினாள்.

அதனைக் கேட்டதும் பிலோமினாவின் கண்களில் ஒரு பிரகாசம் தோன்றி, மறைந்தது. அப்படியே மகளை இறுக அணைத் துக் கொண்டாள். அவளது இதயத்தின் வலிக்கு மகளது வார்த்தைகள் ஒத்தடமாக அமைந்தன.

அவள் கண்களை இறுக மூடிக் கொண்டாள். அங்கே.. அவள் முன் பரந்த கடல் விரிந்து கிடக்கிறது. நீலக்கடலில் புரளும் அலை களை ஊடறுத்து கொண்டு ஒரு படகு வேகமாக மிகவேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதில்... கை ஏந்திய ஆயுதத்துடன், கடா புலிச்சீருடையில் அவளது அருமை மகள் றீட்டா , எதிரியைத் தேடி வலை வீசிக் கொண்டிருக்கிறாள்.

- வெளிச்சம்

# புதுச்சட்டை

*அந்தச் சின்னச்சிறு குடிசையில் அவலக்குரல் கேட்கத் துவங்கி அரைநாள் ஆகிவிட்டது. அழுதழுது வீங்கிப் போன கண்களோடு தனது குடிசையை ஒரு முறை கவனித்தாள் சவுந்தரம். துக்கம் விசாரிக்க வெனத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று பெண்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. குடிசையின் முன்றலில் பந்தல் ஒன்று போடப்பட்டிருந்தது. அங்கு ஆண்கள் கூட்டம் வெற்றிலையைக் குதப்பியபடியும், சுருட்டுக்களைப் புகைத்தபடியும் கதை அளந்து கொண்டிருந்தனர். யார் இந்த ஏற்பாடுகளைச் செய் திருப்பார்கள்? என்று ஒரு கணம் யோசித்தாள். மறுபடி யும் அவளது பார்வை தன் மகளை நோக்கித் திரும்பியது.*

*“ஐயோ! என்ரை ராசாத்தி. என்னை ஏமாத்திப் போட்டுப் போட்டியே!” என்று சொல்லிக் கதறிய வாறு தலையிலடித்துக் கொண்டாள். யாரோ பக்கத் தில் இருந்தவர்கள் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டனர். தமக்கையின் உடலின் இருமருங்கிலும் குந்தியிருந்த சவுந்தரத்தின் மற்றப் பிள்ளைகள் இருவரும் தாயின் செயலைக் கண்ணுற்றதும், ஓ! -வெனக் குரலெடுத்து அழுதனர்.*

*“அக்கா! எழும்பக்கா! எழும்பி உன்ரை புதுச் சட்டையைப் பார் அக்கா” என்று கூறி, சவுந்தரத்தின் இளைய மகள் கோகிலா கேவிக் கேவி அழுதாள்.*

*“ஏனக்கா பேசாமக்கிடக்கிறாய்! எழும்ப னக்கா!” என்று அவளது பத்து வயதுத் தம்பி குகன் கதறினான்.*

இந்தக் காட்சியைக் கண்ணுற்ற சில பெண்கள் தங்கள் கண்களைத் துடைத்துக் கொண்டனர். சிலர் துக்கம் தாளாமல் விம்மினார்கள் இத்தனைக்கும் மல்லிகா, அவள் தான் சவுந்தரத்தின் மூத்த மகள் ஆட்டமின்றி, அசைவின்றி வாங்கில் நிம்மதியா சயனித் திருந்தாள். அவளது பூமேனியைப் புதுச்சட்டை அலங்கரித்திருந்தது. அவளது உடலை மார்புவரை வெள்ளைத் துணியால் போர்த்தி யிருந்தார்கள்.

அன்று காலை வரை துள்ளித் திரிந்தவள் தான் மல்லிகா. மின்னாமல் முழங்காமல் வந்த மழையைப் போல திடீரென வந்த சிங்கள அரசின் "புக்காரா" விமானம் வீசிய குண்டிற்குப் பலியாகிவிட்டாள் அந்தப் பேதை. அவளுக்கென்ன போய்விட்டாள். போயே விட்டாள். ஆனால் சவுந்தரம் ... எப்படி மறப்பாள் தன் மூத்த மகளை. எந்த நேரமும் அக்கா! அக்கா! என வளையவரும் தம்பியும் தங்கையும் எப்படித்தான் ஆறப்போகிறார்கள்?

தென்னமரவாடி தான் அவர்களது சொந்தக் கிராமம். சவுந்தரம் பிறந்தது, வளர்ந்தது, கணவனுடன் வாழ்ந்தது எல்லாமே அங்கு தான். ஆறு ஆண்டுகளின் முன்னர் சிங்கள வெறியர்களின் அட்டூழியத்தால் கணவனை இழந்த அவள், உயிருக்கு அஞ்சித் தன் பிள்ளைகள் மூவருடன் மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து வந்து தண்ணீரூற்று சீ. சீ. பாடசாலையில் அகதியாகச் சிலகாலம் தங்கி யிருந்தாள். பின்னர் அவ்வூரில் உள்ள ஒரு பெரியவரின் அனுசரணை யால் இச்சிறு குடிசையில் குடியேறினாள்.

கணவன் உயிருடன் இருக்கும் போது ஓஹோ! என்று இல்லா விட்டாலும் ஓரளவு வசதியாகச் சவுந்தரத்தின் வாழ்க்கையெனும் வண்டி ஓடிக்கொண்டிருந்தது. கணவனையிழந்து அகதியாக வெளிக்கிட்ட பின்னர், அவள்பாடு பெரும் கஷ்டமாகிவிட்டது. சுகா தார வசதியின்றி அகதிமுகாமில் இருந்த போது கைக்குழந்தை யாயிருந்த மகன் குகனை அவள் நோய்களிலிருந்து மீட்கப்பட்டபாடு சொல்லில் அடங்காது. இப்போதும் நாட்டின் பொருளாதார நெருக் கத்தால் அன்றாடம் வயிற்றைக் கழுவுவதே பெரும்பாடாகிவிட்டது. கிடைக்கும் நிவாரணத்துடன் தன்னால் இயன்ற கூலி வேலைகளைச் செய்து வெகுசிரமப்பட்டுக் காலத்தை ஓட்டி வந்தாள்.

சென்றவருடம் வைகாசிப்பொங்கல் நாள். ஊரே விழாக் கோலம் பூண்டது. இளையோர் முதல் முதியோர் வரை புத்தாடை பூண்டு புதுப்பொலிவுடன் பொங்கலுக்குப் புறப்பட்டனர், சவுந்தரத்தின் பிள்ளைகள் மூவரும் வற்றாப்பளை அம்மனிடம்

போவோர் வருவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். மல்லிகாவுக்குத் திடீரென ஒரு ஆசை முளை விட்டது. தானும் புதுச் சட்டை போட்டுக் கோயிலுக்குப் போக வேண்டுமென விரும்பினாள்.

"அம்மா, எல்லாரும் என்ன வடிவாய் வெளிக்கிட்டுக் கொண்டு கோயிலுக்குப் போகினம் எனக்கும் புதுச்சட்டை போட்டுக் கொண்டு கோயிலுக்குப் போக வேணும் எண்டு ஆசையாயிருக்கு தம்மா"

அன்றாடச்சாப்பாட்டிற்கே திண்டாடும் சவுந்தரம் என்ன செய்வாள். பாவம்! அவளால் பெருமூச்சு ஒன்றைத்தான் விட முடிந்தது. சிறிது நேர யோசனையின் பின் மெல்லச் சொன்னாள்.

"பிள்ளை மல்லிகா, நான் என்னடி செய்யிறது. எங்கடை நிலைமை உனக்குத் தெரிஞ்சது தானே. எண்டாலும் உவர் புடவைக் கடைக்காரக் கந்தையா அண்ணையிற்றை ஒருக்காக் கேட்டுப் பாப்ப மெண்டு நினைக்கிறன். கடனாய் உனக்கு அளவான ஒரு சட்டை தரச்சொல்லி. ரெண்டு மூண்டு தவணையில் கொஞ்சம் கொஞ்சமாய்க் காசைக் குடுத்திடலாம்"

சொல்லியவள் புடவைக்கடைக்குப் புறப்பட்டுவிட்டாள். மல்லிகாவுக்கும் மனதில் சிறிது நம்பிக்கை துளிர்விட்டது. ஒரு கணப் பொழுதில் புதுச்சட்டையுடன் கோயிலுக்குப் போய் வந்துவிட்டாள், கற்பனையில். கடைக்குப் போன அம்மாவின் வரவை ஆவலுடன் பார்த்து நின்றாள். தூரத்தில் சவுந்தரம் வரும்போதே அவளது சோர்ந்த முகத்தையும், நடையையும் கண்டு விஷயத்தை விளங்கிக் கொண்டாள் மல்லிகா.

"பிள்ளை, நானும் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுப்பார்த்தனடி மனுசன் ஒரேபிடியாய்த் தரமாட்டனெண்டிட்டுது. கடன் குடுக்கிற தில்லை எண்டு வைராக்கியம் வச்சிருக்குதாம். அந்த வைராக்கி யத்தைக் குழப்பேலாதாம்" சொல்லியவாறே தனது ஆற்றாமையைப் பார்வை மூலம் வெளிப்படுத்தினாள்.

தாயின் பரிதாப நிலையை உணர்ந்து கொண்ட மல்லிகா, "அம்மா உதுக்கேன் கவலைப்படுறியள். விட்டுத் தள்ளுங்கோ. நான் அடுத்த வருசப்பொங்கலுக்கு என்ரை கையாலேயே உழைச்சுப் புதுச்சட்டை வாங்கிப் போட்டுக் கொண்டுதான் போவன்" ஏதோ சபதம் செய்வது போலக்கூறினாள்.

இப்பொழுதெல்லாம் மல்லிகா, லீவு நாட்களிலும், ஓய்வு நேரங்களிலும் அயல் வீடுகளில் போய் கச்சான் உருவுதல், கச்சான்

உடைத்தல் போன்ற வேலைகள் செய்து, அதில் கிடைக்கும் சிறு ஊதியத்தை ஒரு பேணிக்குள் போட்டுச் சேமிக்கிறாள். சில சமயங் களில் தோட்டங்களிலும் போய் வெங்காய நடுகை, மிளகாய்ப்பழம் பிடுங்குதல் போன்ற வேலைகளும் செய்து உழைப்பைப் பெருக்கினாள்.

இந்த வருடமும் பொங்கல் நெருங்குகிறது. மல்லிகா தான் பணம் சேமித்து வைத்திருந்த பேணியை எடுத்து திறக்கிறாள். தாள்களாகவும், சில்லறைகளாகவும் கிடந்த பணத்தை எண்ணிப் பார்க்கிறாள் "முன்னூற்றிச் சொச்சம்தான் இருக்கு, சட்டை வேண்டக் காணுமோ தெரியேல்லை" அவளது வாய் முணுமுணுக்கிறது. பக்கத்து வீட்டுக் கல்யாணி அக்காவிடம் ஓடுகிறாள். அக்கா, எனக்கு "றெடிமேட்" சட்டை வாங்கிறதெண்டா எவ்வளவு காசு வேணும்?" கல்யாணி அக்கா சொல்லுகிறாள் "மல்லிகா! சட்டையள் எண்டாப் பல விலையிலும் இருக்கு. நீ எவ்வளவு காசு வைத்திருக்கிறாய்?"

"அக்கா, என்னட்டை முன்னூற்றிப் பதினைஞ்சு ரூபாய்தானிருக்கு. காணுமே அக்கா?"

"அப்பிடியெண்டால் ஒண்டு செய்யன். துணியை வேண்டித் தைக்கக் குடுத்தால் மலிவாயிருக்கும்".

"அக்கா நான் உங்களிட்டைக் காசைத்தாறன் நீங்களே வேண்டித் தைப்பிச்சு தாறியளே? எனக்கு எவ்வளவு துணி வேண்டுற தெண்டும் தெரியாது."

மல்லிகா காசைக் கல்யாணியிடம் கொடுத்தாள். துணி வாங்கித் தைப்பிக்கும் பொறுப்பை அவளிடமே விட்டுவிட்டாள். இப்போது மல்லிகாவுக்கு எந்நேரமும் புதுச்சட்டை நினைவுதான். அடிக்கடி தாயிடமும், தம்பி, தங்கையிடமும் அதைப்பற்றித்தான் கதைப்பாள் இரவில் படுத்துறங்கினாலும் புதுச்சட்டை பற்றிய கனவுதான் வந்து கொண்டிருந்தது. சவுந்தரத்துக்கும் தனது மகளின் ஆசை நிறைவேறுவதில் ஓரளவு மனதிருப்தி. பொங்கலுக்கு இன்னும் மூன்று நாட்களே இருந்தன. தனது சட்டை தைத்து வந்து விட்டதா? என்று பார்க்கும் ஆவலில் மல்லிகா அடிக்கடி கல்யாணி வீட்டிற்குப் போய் வந்தாள்.

எப்போதும் போலத்தான் அன்றும் பொழுது விடிந்தது, சவுந்தரம் நித்திரையால் எழும்ப முன்னரே மல்லிகா நேரத்தோடு எழும்பி விட்டாள். மல்லிகாவுக்கு இருப்புக்கொள்ள வில்லை. அவளது சட்டை தைத்து முடிந்து விட்ட தாம். இன்று கல்யாணி

அக்கா அதைப்போய் எடுத்துவருவதாகக் கூறியிருந்தாள். தனது சட்டை எப்படி இருக்கும்? வடிவாய் இருக்குமோ? தனக்கு அளவா யிருக்குமோ? என்றெல்லாம் பேதையின் உள்ளம் பேதலித்துக் கொண்டிருந்தது.

அவளது காதுகளுக்குள் ஒரு இரைச்சல்... அது வர வர மிக நெருக்கமாகக்கேட்டது. அண்ணாந்து பார்த்தாள். பிளேன் ஒன்று வட்ட மடித்துக்கொண்டு வந்தது. இன்னொரு விமானம் எதிர்த்திசை யிலிருந்து வந்து வட்டமிட்டது. அவளுக்கு விளங்கிவிட்டது. பொம்மர் தான்!

"இங்கினேக்கதான் எங்கையோ போடப்போறாங்கள் போல கிடக்கு என எண்ணியவளின் உடல் ஒரு முறை நடுங்கியது. சுற்று முற்றும் பார்த்தாள். ஒருதலைக்கறுப்பையும் காணவில்லை. அவள் ஓடத் தொடங்கினாள் கடை வரிசையில் உள்ள மேல்மாடிக்கட்டிடத் துக்குக் கீழே போய்க் குப்புறப்படுத்துக் கொண்டாள். அவளது நெஞ்சு பக்! பக்! என அடித்துக் கொண்டது. அவளது நினைவில் அம்மா, தம்பி, தங்கை எல்லோரும் வந்து போயினர் அவளது புதுச்சட்டையின் நினைவு வந்தபோது... பிளேன் பதிவதுபோல் இரைச்சல் கேட்டது.

டும்! .. டுடும்!

சத்தம் காதைப் பிளந்தது. ஆனால் மல்லிகாவுக்கோ எதுவும் தெரியவில்லை. தெரியாமலே போய்விட்டது. நிரந்தரமாய்.

மாடிக் கட்டிடத்திற்கென்றே குறிவைத்துப் போடப்பட்ட குண்டு சற்றுத்தள்ளி வீழ்ந்து வெடித்ததால், குண்டுச் சிதறல்கள் பரவிப் பறந்ததில் ஒன்று அவளின் மூளையைத் துளைத்து விட்டது. புதுச் சட்டைக் கனவுடன் பேதை பேசா மடந்தையாகி விட்டாள்.

அங்கே... பொம்மர் குண்டு போட்ட சத்தம் கேட்டுச் சவுந்தரம், கடைக்குப்போன மகளைக் "காப்பாற்று" என்று எல்லாத் தெய்வங்களிடமும் வேண்டிக் கொண்டிருந்தாள் இங்கே மகளோ!... தெய்வத்திடமே போய் விட்டிருந்தாள்.

தெய்வத்திடம் போகப் புதுச் சட்டை கேட்டவள் .. இங்கு புதுச்சட்டையுடன் புறப்பட்டுவிட்டாள்... சுடலையை நோக்கி...

- சாளரம் - செப்டெம்பர் -1993

# சங்கமம்

அந்தச் செய்தி எம் காதுகளுக்குக் கிட்டி இன்றுடன் நான்கு நாட்களாகி விட்டன. என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை. என் அருமை மைந்தன் சாந்தனின் மாலையிட்ட படத்தை உறுத்துப் பார்த்தவண்ணம் அமர்ந்திருக்கிறேன். படத்தில், சாந்தன் கறுப்பு உடையும் தொப்பியும் அணிந்திருந் தான். என் மனம் நிர் மூலமாய்க் கிடந்தது.

மாமியின் குரல் என் காதில் விழுகிறது. "அவள் பாவி ஒரே இரையாய் இருந்து வெறிச்சுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள், எனக்கெண்டால் யோசினை யாய்க் கிடக்கு, மூளையில கீளையில தட்டிப் போட்டுதோ எண்டு "

"அக்காவை அவவின் பாட்டிலேயே விடுறது தான் நல்லதெண்டு டொக்டரும் சொன்னவராம். அவ, தானாகவே கவலையில் இருந்து மீளட்டும். அவவைத் தொந்தரவு பண்ணக்கூடாது"

"எடி பிள்ளை, நாளைக்கு அஞ்செல்லே. அவல மாய்ச் செத்த ஆவிக்கு காச்சிப் படைச்சுக் கழிப்புக் கழிக்க வேண்டாமே, அதுதான் ஒருக்கா கொக்கா வைக் கேள் பிள்ளை"

"மாமி எதுக்கும் கொஞ்சம் பொறுங்கோ. அக்காவிட்ட இப்ப உதுகளைக் கேக்கிற நிலமையில் அவ இல்லை".

என்னையறியாமல் எனக்கு ஆத்திரம் மேலிட்டது. வெடுக்கென்று. "மாமி என்ரை பிள்ளை உந்தச் சாப்பாட்டு வகைகளில் ஆசை வைச்சுக்

*கொண்டு சாகேல்ல. அவன் ஆறடி நிலங்கட்டத் தேவையில்லை எண்டு நினைச்சுக் காத்தோடு காத்தாய்க் கலந்தவன். அவனுக்கு உந்தப் படைப்புகள் ஒண்டும் தேவைப்படாது நான் ஒண்டும் செய்யவும் மாட்டன்...”*

*அங்கு மௌனம் நிலவியது. எதுவித கருத்துக்களும் இல்லை. அன்று மாலையே மாமி தன் வீட்டிற்குக் கிளம்பிவிட்டார். போகும் போது எனக்குக் கேட்கும்படியாக என் தங்கையிடம் சொல்லிக் கொண்டர்.*

*“சரியான பஞ்சமியாமெடி புள்ள கந்தரத்தார் பஞ்சாங்கத்தில் பாத்துச் சொன்னவர். செலவு செய்து, கழிப்புக் கழிக்காட்டி வீட்டுக் காரருக்குத் தான் கூடாது. பஞ்சமி பலியெடுத்துப் போடும் நீயெண்டாலும் ஒருக்கால் கொக்காவுக்குப் புத்தியைச் சொல்லு. அவள் கவலையில் மாறாட்டம் பிடிச்சுப் போய்க் கிடக்கிறாள்”*

*என் மகன் தானாக விரும்பி அணைத்த சாவினால் பஞ்சம் வந்துவிட்தாம் இவர்களுக்கு. இவர்களின் மூடநம்பிக்கையை நினைத்து அலுத்துக் கொண்டேன். எதுவும் பேசவில்லை.*

*திடீரென எனக்கு என் இளைய மைந்தன் காந்தனின் நினைவு வந்தது. ஆ!... எப்படி மறந்தேன் என் காந்தனை. இந்த இரண்டு நாட்களாக அவனை நான் கண்டதாக நினைவில்லையே! தங்கையைக் கூப்பிட்டு விசாரித்தேன் காந்தன் அறையில் படுத்திருப்பதாகச் சொன்னாள். ஓடோடிப் போகிறேன் அவனிடம். காந்தன் சுவரைப் பார்த்தபடி படுத்திருக்கிறான். என் கவலைக்குத் திரை போட ஒத்திகை பார்க்கத் தொடங்கினேன்.*

*“காந்தன்! எழும்பு ராசா. எழும்பி வந்து சாப்பிடு”*

*அழுதவாறு கிடந்த காந்தன், “எனக்கு வேண்டாம்” என்கிறான். நான் அவனை விடவில்லை. இப்பொழுது எனது பொறுப்புணர்ச்சி தலை தூக்குகின்றது. : காந்தன் கொண்ணா தன்ரை உயிரைப் புனிதமாக எங்கட இனத்தின்ர விடியலுக்காக அர்ப் பணித்தவன். அவனுக்காக நாங்கள் அழுவது அவனது விருத்திற்கு மாசு கற்பிப்ப தாகவே போய்விடும். அவன் இப்பவும் எங்களோடு தான் இருக்கிறான் என்று நினைத்துக்கொள். எழும்பிப்போய் முகத்தைக் கழுவிப் போட்டு கொஞ்சப் பூ பிடுங்கிக் கொண்டு வந்து அண்ணாவின்ர படத்திற்கு வை எல்லாக் கவலையும் பறந்திடும்.”*

*ஒருவாறு காந்தனைப் படுக்கையிலின்றும் எழுப்பிவிட்டேன். பத்து வருடங்களின் முன்னர் என் கணவரை இராணுவம் சுட்டுக்*

கொன்றபோது எனக்கு ஏற்பட்ட தவிப்பும் சோகமும் இப்போது இல்லை. சாந்தனின் மரணத்தினால் பிரிவுத்துயரும் பெற்ற பாசமும் என்னை அலைக்கழித்தாலும் அடிக்கடி மனசில் ஒரு இனம்புரியாத உணர்வு இதை எப்படி வர்ணிப்பது என்று தெரியவில்லை. வீரமைந்தனைப் பெற்ற நான் சோர்ந்து கிடக்கலாமா என்ற எண்ணம் என்னை ஆட்கொள்ள என் அன்றாட அலுவல்களைக் கவனிக்கத் தொடங்குகிறேன்,

எட்டாவது நாள் ஒருவாறு காந்தனையும் அனுப்பி வைத்து, நானும் பாடசாலைக்குக் கிளம்பிவிட்டேன். என்னைக் கண்டு அதிபர் திடுக்கிட்டாற்போல் இருந்தது. "ஏன் மிஸ் நீங்கள் இன்னும் கொஞ்ச நாளைக்கு லீவு எடுத்திருக்கலாமே!" அவரது குரலில் தெரிந்தது அனுதாபமா, புரிந்துணர்வா என்று என்னால் இனம் காண முடிய வில்லை.

"இல்லை சேர். வீட்டில தனிமையில இருந்து யோசிப்பதிலும் பார்க்க எனது கடமையில் மூழ்கிறது பரவாயில்லைப் போல தெரியுது" என்று சொல்லிச் சமாளித்தேன்.

மெல்ல ஸ்டாவ் ரூமுக்குள் பிரவேசிக்கிறேன். கலகலத்துக் கொண்டிருந்த சக ஆசிரியர்கள் அனைவரும் "கப்சிப்" என அடங்கிப் போய்விடுகிறார்கள். எல்லோரும் முகத்தை உம் என வைத்துக் கொண்டிருந்தனர். அங்கு நிலவிய மௌனத்தால் என் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது. நானாகவே வலிய அவர்களுடன் பேச்சுத் தொடுக்கிறேன்.

வகுப்பறைக்குள் நுழைகிறேன்.

மாணவர்கள் அனைவரது முகங்களிலும் சோகம் படர்ந்திருக்கிறது. அவர்களது பிஞ்சு நெஞ்சங்களுக்கு முகத்திரை தேவைப்படவில்லைப்போலும், அலையாகப் பாயும் என் மனதை ஒருநிலைப்படுத்திப் பாடத்தைத் தொடங்குகின்றேன். சிறிது விளக்கம் கொடுத்த பின்னர் கணக்குகளைச் செய்யுமாறு மாணவர் களைப் பணித்துவிட்டு என் இருக்கையில் அமர்ந்து கொண்டேன். எனது கண்கள் ஒருமுறை வகுப்பறை முழுவதையும் நோட்டமிட்டு ஒரு மாணவனிடத்தில் வந்து நிலைத்து நிற்கிறது. அதோ... என் சாந்தனைப் போலவே... இடது கையினால்... என்னை அறியா மலேயே என் எண்ணம் சாந்தனை நோக்கிப் பாய கண்கள் என் கட்டுப் பாட்டை மீறியே விட்டன. அவசர அவசரமாகக் கான்ட் பாக்கைத் திறந்து அதற்குள் இருந்த கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைக்குமாப்போல் கண்களையும் துடைத்துக் கொள்கின்றேன்.

அந்தச் சமயம் பார்த்துத்தானா அதிபரும் என்னைக் கவனித்த வாறு அவ்வழியால் போக வேண்டும். சிறிது நேரத்தில் அதிபர் என்னை அழைப்பதாகச் செய்தி வந்தது. அதிபர் முன்னிலையில் தலையைக் குனித்தவாறு நிற்கிறேன். மிஸ் உங்களுக்கு கஸ்டமா யிருக்கும் என்று தான் உங்களை லீவு போடச் சொன்னனான். உங்களுடைய சங்கடத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது இப்பொழுது வேண்டுமானால் நீங்கள் ஸ்டாவ் ரூமில் போய் ஒய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

"சேர்! தனிமைதான் எனக்கு முதல் எதிரி நான் தொடர்ந்தும் வகுப்பெடுக்கவே விரும்புகிறேன்."

இப்படியாக நாட்கள் ஓடி மறைந்தன. ஒருநாள் என் தங்கை இயம்பினாள், "அக்கா முப்பத்தொன்றுக்கு துடக்குக் கழிக்க வேண்டாமே?" என்றாள். உடனே நான் அவசரமாக, "இதென்ன விசர்க்கதை இங்சை என்ன "பொடி" கொண்டந்து வச்சதோ? எப்படி வந்தது துடக்கு? எனக்கெண்டால் சாந்தன் இப்பவும் எங்களோடை தான் அருவமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான் ஆன படியால எதையுமே செய்யிற எண்ணம் எனக்கில்லை"

ஒரே வார்த்தையில் எல்லோருடைய வாய்களுக்கும் பூட்டுப் போட்டு விட்டேன்.

காந்தனுக்கு வாறகிழமை பரிசளிப்பு விழாவாம். அவனுக்கு மூன்று பரிசுகள் கிடைக்க இருக்கிறது. அவன் பாவிக்கும் சப்பாத்துத் தேய்ந்து போய்ப் பழசாகிவிட்டது. அவனுக்குப் புதிதாக ஒன்றை வாங்கிக் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டேன். அன்று மாலை பாடசாலையால் வந்ததும் காந்தனையும் அழைத்துக் கொண்டு நகரத்துக்குப் போகின்றேன். புறப்பட்ட நேரம் தொட்டு என் மனம் போராடிக் கொண்டிருக்கிறது. எப்பொழுதும் இருவருக் கும் சேர்த்தே வாங்கிப் பழகிய கைகள் இன்று இவனுக்கு மட்டும் வாங்க வேண்டி வந்துவிட்டதே! என் மனம் அங்கலாய்க்கிறது. ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டு விட்டேன்.

காந்தனின் சைக்கிள் பாரில் இருந்து நான், எதிரில் தெரிந்த உயரமான மதிலில் ஒட்டப்பட்டிருந்த சாந்தனின் உருவப்படத்தைக் கண்டு விடுகிறேன். என் கண்கள் பனிக்கத் தொடங்க நான் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொள்கின்றேன். என் முதுகில் உஸ்ணமான நீர்த்துளிகள் விழுந்து சிதறுவதை என் உணர்வு புரிந்து கொள்கிறது. ஓ... என் காந்தனும் அண்ணாவின் உருவப்படத்தைக் கண்டு கலங்குகிறான் போலும்! அடுத்த நிமிடம்

நான் ஒன்றுமே தெரியாததுபோல வேறு கதைகளைக் கதைத்து அவனது மனதைத் திசை திருப்ப முயலுகிறேன்.

காந்தனை வார்த்தைகளால் உற்சாகப்படுத்தி படிப்பில் கவனம் செலுத்த வைக்கிறேன். இரவு "புலிகளின் குரல்" வானொலி நிகழ்ச்சியைக் கேட்டு முடித்த பின்னர் நான் படுக்கைக்குப் போகு முன் என் சாந்தனின் படத்தின் முன் இரண்டு நிமிடங்கள் நின்று அவனுடன் மானசீகமாக உரையாடுவதை என் வழக்கமாக்கி விட்டிருந்தேன். அன்றும் அப்படித்தான் என்னை மறந்து சாந்தனுடன் ஒன்றிப் போய் நின்ற வேளை என் பின்னால் நிழல் தெரிகிறது.

"அம்மா..." மெல்ல அழைத்தான் காந்தன். " என்ன ராசா!" கேட்கிறேன். "அம்மா நீங்கள் மறந்து போனீங்களே! நாளைக்கு அண்ணாவுக்குப் பிறந்த நாள் அது தான்..."

எனக்குச் "சுருக்" கென்றது. எப்படி மறந்தேன். என் பிள்ளை யின் பிறந்த நாளை? இப்படித்தான் நாளடைவில் என் பிள்ளையும் என் எண்ணத்திலிரந்து மறைந்து போய் விடுவானோ என்றெல்லாம் என்னைக் கவலை ஆட்கொள்ளத் தொடங்கியது. என்னைச் சுதாகரித்துக் கொண்டு நாளைக்கு அண்ணாவுக்கு விருப்பமானதாய் ஏதும் செய்ய வேணும். ம்... என்ன செய்யலாம்?" சிந்தித்த எனக்கு மூளையில் ஒரு மின்னல் பளிச்சிட்டது.

மறுநாள் பாடசாலைக்கு லீவு போட்டேன். காந்தனும் நானுமாக நகரெல்லாம் அலைந்து திரிந்து பரிசுப் பொருட்கள் வாங்கினோம். கிட்டத்தட்ட மூவாயிரம் ரூபாய்க்கு வாங்கினோம். அன்று மாலை நாங்கள் செஞ்சோலைக்குப் போனோம். அங்குள்ள குழந்தைகளுக்குப் பரிசுப் பொருட்களையும் இனிப்பு வகைகளையும் பகிர்ந்து கொடுத்து அவர்களுடன் அன்றைய மாலைப் பொழுதைக் கழித்தோம். வீட்டுக்குத் திரும்பிய பொழுது எட்டு மணியாகி விட்டது.

என்றுமில்லாதவாறு என் மனம் லேசாகி விட்டாற் போன்ற ஓர் உணர்ச்சி நான் அவசர அவசரமாக றேடியோவைத் தீப்புகிறேன். "கரும்புலிகள்" ஒலிப்பதிவு நாடாவிலிருந்து ஒரு பாடல் என்று அறிவித்து, "தாயக மண்ணிண் காற்றே! என்னில் வீசம்மா!" என்ற பாடல் ஒலிபரப்பாகிறது என் மனதில் ஓர் நிறைவு தோன்றகிறது. என் சாந்தனே இப்பாட்டைப் பாடுவதாக என் உள்ளம் கற்பனையில் மூழ்க் ஒரு கணம் செஞ்சோலைக் குழந்தைகள் என் கண்முன் தோன்றுகின்றனர்.

*"நாளையிந்த நாட்டையாளும்*

*சின்னப்பூக்களே நீங்கள்*

*நம்ப வேண்டும் நாளை தமிழ் ஈழமென்றுமே.*

*நீங்கள் வாழ வேண்டுமென்றே*

*நான் வெடிக்கிறேன் மாமன்*

*நெஞ்சிலுள்ள கனவுகளைத் தான் படிக்கிறேன்"*

*இந்த வரிகள் என் உணர்வுடன் ஒன்றிச் சங்கமமாகி விடுகின்றன.*

- களத்தில் - 31.12.1993

# சுகந்திர தாகம்

*புலர்ந்தும் புலராத அந்த அதிகாலைப் பொழுதில் நிர்மலா கிணற்றில் இருந்து நீரை அள்ளி தன் மேனியில் ஊற்றத் தொடங்கினாள்.*

*ஸ்...! ஸ்...! ஸ்...!*

*குளிர்ந்த நீர் பட்டதும் அவளையறியாமலே அவளது மேனி சிலிர்த்துக் கொண்டது. சிலிர்த்த மேனியை தணிய வைக்கும் நோக்குடன் அவசரமாக அடுத்த வாளி நீரை மொண்டு மேனியில் ஊற்றிக் கொண்டாள். ரியூசனுக்கு நேரமாகி விட்டதேயென்ற அவசரம் அவளை உந்தித்தள்ள சில வாளிகளுடன் தனது குளிப்பை இடை நிறுத்திக் கொண்டு சோப்பை எடுத்து மேனியெங்கும் போடத்துவங்கினாள்.*

*சோப்பின் சுகந்தம் அவளது நாசியைத் துளைத்து அவளுள்ளத்தில் புதியதோர் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. அவளை அறியாமலே அவளது நினைவுகள் வன்னியை நோக்கித் தாவியது.*

*முன்பெல்லாம் இங்கு வீட்டில் பாத்றூமில் குளித்து வந்த அவளுக்கு முதன் முதலாக எதுவித மறைப்பும் இன்றி அம்பலத்தில் நின்று உடைமாற்று வதும், குளத்தில் இறங்கிக் குளிப்பதும் கூச்சத்தை ஏற்படுத்தியது என்னவோ உண்மைதான். ஆனால் நாளடைவில் அதுவே இனிய அனுபவமாக மாறி விட்டது. அங்கு பழகிய அந்தப் பழக்கம் காரணமாகத் தான் இங்கே இந்த வெட்ட வெளியில் நின்று அவளால் குளிக்க முடிகிறது. காரணம் அவர்களது வீட்டின் முன்புறம் அமைந்திருந்த வோட்டர் ராங்கும் அதன்*

கீழிருந்த பாத்றூமும் பாதுகாப்புக் கருதி படையினரால் தகர்க்கப் பட்டுவிட்டது.

அது மட்டுமா? வீட்டின் முன்புறத்து மதிலும் கூட இடிக்கப் பட்டுவிட்டது. அவளுடைய அப்பா மறைவுக்காகப் போட்ட கிடுகு வேலியும் அவர்களால் பிடுங்கி எறியப்பட்டு விட்டது.

நினைவுகளிலிருந்து விடுபட்டவளாய் நிர்மலா குளிப்பை முடித்துக் கொண்டு உடைமாற்றத் தொடங்கினாள். ஏதோ அரவம் கேட்டது பார்வையை நிமிர்த்தினாள். உடைந்த மதிலடியில் நின்று ஓர் உருவம் தன்னையே அவதானித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். கையில் ஆயுதம் தரித்திருந்த அந்த உருவத்தை இனங் கண்டு கொண்டவள் செய்வதறியாது ஒரு கணம் தயங்கினாள். மறுகணம் வீட்டினுள் ஓடி மறைந்தாள்.

"அம்மா!"

அவலமாக ஒலித்தது குரல். ஈரம் சொட்டச் சொட்ட தன் முன்னால் ஓடி வந்து நின்ற மகளை கண்ணுற்ற அம்மா அரண்டு போனாள்.

அழுகைக்கு மத்தியில் நிர்மலா விடயத்தை கூறினாள்.

"அம்மா! நாங்கள் அங்கையே இருந்திருக்கலாம், வீணாய் நீங்கள் தான் எங்களை இங்கை கொண்டு வந்து சிறைப்படுத்திப் போட்டியள்."

ஆத்திரத்துடன் வந்தன வார்த்தைகள்.

"சுதந்திரமில்லாத வாழ்க்கை நரகத்துக்கொப்பானது."

அம்மா முதன் முறையாக உணர்ந்து கொண்டாள்.

"நீ அழாதை பிள்ளை நாளையில இருந்து நானும் கொப்பரு மாய் தண்ணியை அள்ளிக் கொண்டந்து வீட்டுக்குப் பின்னால் கிடாரத்தை வைச்சு ஊத்தி விடுறம் நீ மறைவில நிண்டு குளிக்கலாம். பேந்தென்ன செய்யிறது." - அம்மாவின் மனதில் நெருடல் தோன்றி விட்டதை உணர்ந்து கொண்ட நிர்மலா மௌனத்தைத் தழுவிக் கொண்டாள்.

அம்மாதான் என்ன செய்வாள்? இங்கிருந்து இடம் பெயர்ந்து போய் கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் சில மாதங்கள் படித்து விட்டு பின்னர் அங்கும் இருக்க முடியாத சூழ்நிலை உருவாக மாங்குளம் மகாவித்தியாலத்தில் படிப்பைத் தொடர்ந்து அங்கேயே கா.பொ.த சாதரணதர பரீட்சைக்குத் தோற்றினாள் நிர்மலா.

ஆகக் குறைந்த அடிப்படை வசதியில் கொட்டில் வீட்டில் குப்பி விளக்கொளியில் நிலத்தில் குந்தியிருந்து படித்து நிர்மலா எட்டுப் பாடங்களிலுமே விசேட சித்தி பெற்று பாடசாலையில் முதலிடம் வகித்த போது... அப்பாவினதும் அம்மாவினதும் மனங்கள் குளிர்ந்து போயின இடம் பெயர்ந்து வந்து அனுபவித்த இன்னல்கள் யாவும் ஒரு நொடியில் மறைந்துபோயின. ஆனந்த சாகரத்தில் மூழ்கி எழுந்தனர். மகளை நன்றாகப் படிக்க வைத்து ஒரு டாக்டராகப் பார்க்க வேண்டும் என தாகம் கொண்டனர் விளைவு...

யாழ்ப்பாணம் திரும்ப வேண்டுமென அம்மா, அப்பாவை நச்சரிக்கத் தொடங்கினாள். முதலில் மறுத்தபோதும் பின்னர் இசைந்து விட்டார். எனவே மிகுந்த சிரமத்தின் மத்தியில் இங்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

படிப்பில் கண்ணுங்கருத்துமாக இருந்த நிர்மலாவை அந்தச் சம்பவம் வெகுவாகப் பாதித்து விட்டது. அவள் சூமுக நிலைக்குத் திரும்ப சில நாட்கள் பிடித்தன எனினும் பெற்றோர் தன் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை வீண் போக்க விருப்பமற்று வலு கட்டாயமாகத் தனது கவனத்தை கல்வியில் செலுத்தினாள்.

நாட்கள் நகர்ந்தன தவணைப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. நிர்மலா அல்லும் பகலும் அயராது படித்தாள்.

ஒரு நாள் இரவு அவள் நீண்ட நேரம் விழித்திருந்து படித்துக் கொண்டிருந்தாள். அம்மா மகளுக்குத் துணையாக அவள் படித்துக் கொண்டிருந்த மேசைக்கு அருகில் பாயை விரித்துப் படுத்திருந்தாள்.

கொக்கரக்கோ!...

சாமக் கோழியின் அறைகூவல் அம்மாவின் செவிகளில் விழுந்தது. மகளைப் பார்த்து வாஞ்சையுடன் கூறினாள்.

"சாமமாய்ப் போச்சுது, நிர்மலா! இனி வந்து படுபிள்ளை நாளைக்கு எழும்பிப் படிக்கலாம்."

"அம்மா! இன்னும் கொஞ்சம் படிக்கக் கிடக்குது அதையும் படிச்சிட்டு வந்து படுக்கிறன்."

கெஞ்சிய மகளை மிஞ்ச மனமின்றி காத்திருந்தாள், அம்மா மகளுக்கு கல்வியில் உள்ள ஆர்வத்தையிட்டு அவளது மனம் பெருமிதமடைந்தது.

அவர்களுக்குச் சற்றுத் தொலைவில் அப்பா சயனத்தில் ஆழ்ந்திருந்தார். இனிய கனவொன்றில் சஞ்சரித்துக் கொண்டிருந்த

அவரது முகத்தில் புன்னகை கொப்பழித்துக் கொண்டிருப்பதை எவரும் கவனித்திருக்க முடியாது. அவரது கனவுலகில் டாக்டர் நிர்மலா கையில் ஸ்டெதஸ் கோப்புடன் பவனி வந்து கொண்டிருந் தாள்.

எங்கும் நிசப்தம் நிலவிய அவ்வேளையில் நிர்மலாவுக்கு அலுப்புத் தட்டியது. கைகளை மேலே உயர்த்தி சோம்பல் முறித்துக் கொண்டவள். இயலுமானவரை வாயை அகலமாகத் திறந்து கொட்டாவியை வெளிப்படுத்தினாள். அவளது கண்கள் கொவ்வைப் பழமாகச் சிவந்திருந்தன. தனது கவனத்தை ஒரு நிலைப்படுத்தி மிகுதி வந்த சொற்ப பாடத்தையும் படிக்க முயற்சித்தாள்.

திடும்!.. திடும்!.. திடும்!...

திடீரென வீட்டைச் சுற்றிக் காலடி ஓசைகள் கேட்டன. கனவுலகில் களித்திருந்த அப்பாவும் நனவுலகில் காத்திருந்த அம்மா வும் ஏக காலத்தில் திடுக்கிட்டு எழும்பினர். நிர்மலா வெருண்ட வளாய் ஓடிவந்து அம்மாவைக் கட்டிக்கொண்டாள். அப்பா காதைக் கூர்மையாக்கி ஓசைவரும் திசையை உன்னிப்பாகக் கவனித்தார்.

இதற்கிடையில் பட பட வென முன் கதவு தட்டப்பட்டது. அம்மாவினதும் நிர்மலாவினதும் இதயத் துடிப்புக்கள் சங்கமமாகி உரலொன்றில் இருவர் மாற்றுலக்கை போடுவது போன்ற ஓசையாய் அவர்களது உணர்வுக்குள் உறுத்தியது.

அப்பா எழுந்து போய் கதவைத் திறந்தார். அவரது கைகள் மட்டுமல்ல முழு உடம்பும் உதறலெடுத்தது.

கதவைத் திறந்ததுதான் தாமதம் திமுதிமுவென படையினர் வீட்டினுள் நுழைந்தனர். நிர்மலா நடுங்கியவாறு அம்மாவின் பின்னால் பதுங்கிக் கொண்டாள்.

வீட்டின் மூலை முடுக்கெல்லாம் துளாவிய பின் ஒருவன் மட்டும் அவர்களிடம் வந்தான். நிர்மலா கதிகலங்க நின்று கொண்டி ருந்தாள். சற்றும் எதிர்பாராத வகையில் துப்பாக்கியை அவளது நெஞ்சுக்கு நேரே உயர்த்தியதும் நிர்மலா கண்களை இறுக மூடிக் கொண்டாள். இறைவனை நினைத்து இறுதி வணக்கம் செலுத்து வதைத் தவிர வேறு வழி இருப்பதாக அவளுக்குப் படவில்லை.

ஏய்... எல்.ரீ.ரீ இங்கு வந்தது தானே? கண்களைத் திறந்து அவனை நோக்கினாள் அவள் விழிகள் இமைக்க மறுத்தன. தொண்டைக்குள் ஏதோ அடைத்துக் கொண்டது போன்ற பிரமை தலையை மட்டும் “இல்லை” எனப் பொருள் பட ஆட்டினாள். அப்பா

*முன்வந்து அவனுக்குப் பதிலிறுத்தார்.*

*இங்கை ஒருத்தரும் வாறதில்லை*

*ஆத்திரமடைந்தவனாய் அவன் அப்பா பக்கம் திரும்பினான்.*

*அடோ நமக்குப் பொய் சொல்ல வாணாம் நாங்க இந்த ரோட்டில் ரோந்து போனது இங்க லைற் தெரிஞ்சது. அது எப்பிடி? எல்.ரீ.ரீ க்கு சாப்பாடு குடுத்தது தானே.*

*இதனைக் கேட்டதும் அம்மாவுக்கு எங்கையிருந்து தான் அத்தனை தைரியம் வந்ததோ தெரியவில்லை, அவனைப் பார்த்து மளமளவென்று பொரிந்து தள்ளினாள்.*

*வெளிச்சம் தெரிஞ்சால் அது எல்.ரீ.ரீ. தான் வந்ததெண்டு அர்த்தமே எங்கட தேவையளுக்கு நாங்கள் விளக்குப் பாவிக்கிற தில்லையே அங்கை பார் மேசையை புத்தகம் விரிச்சபடி இருக்குது. எங்கட பிள்ளை ரெஸ்ற்றுக்கு படிச்சுக் கொண்டிருந்தது.*

*அதுக்கு இனி என்ன செய்யப் போறியள்?*

*அம்மா கையைக் காட்டிப் பேசியதும் அவன் சற்றுத் தணிந்து போனான். தடயங்கள் ஏதும் கிடைக்காத பட்சத்தில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அவர்கள் அனைவரும் வெளியேறினர்.*

*தடயம் ஏதும் கிடைத்திருந்தால் பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைத்திருக்குமே என்ற ஆதங்கம் அவர்களுக்கு நிர்மலா முற்றாக நிலை குலைந்து போனாள்*

*அப்பா அம்மா மீது பாய்ந்தார்!*

*நான் சொன்னனான் அங்கையிருந்தே பிள்ளையைப் படிக்க வைக்கலாமெண்டு நீர் கேட்டீரே அங்கை படிக்கிற பிள்ளையளும் கம்பசுக்கு என்ரர் பண்ணுதுகள் தானே நீர் என்னடா என்றால் இங்கதான் ஏதோ பெரிசா ரீயூசன் இருக்குதென்று ஒற்றைக்காலில நிண்டு எங்களை கூட்டிக் கொண்டு வந்தீர் தேவையில்லாமல் வலியப் போய் முள்ளில் சேலையை மாட்டிக் கொண்டம் இனி என்னண்டு விடுபடுறது?*

*அம்மா பதிலேதும் சொல்ல முடியாதவளாய் திருதிருவென முளித்தாள். பேசுவதற்கு திராணியற்றவளாய் நிர்மலா ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டாள். சாளரத்தினூடு அவளது பார்வை வெளியே திரும்பியது அங்கே பிறைச் சந்திரன் கருமுகில்களுக்குள் சிறைப்பட்டு தத்தளித்துக் கொண்டிருந்தான். எங்கும் கும்மிருள் கவ்வியிருந்தது. அவளது இதயத்திலும் இருள் சூழ்ந்து கொண்டது. விளக்கை*

அணைத்து விட்டு அனைவரும் படுத்துக் கொண்டனர். இதயப் படபடப்பு இன்னும் ஓய்ந்தபாடில்லை. இனம் தெரியாத குழப்பம் அங்கு நடந்து கொண்டிருந்தது. நிர்மலா இமைகளை இழுத்து மூடிக் கொண்டாள், நித்திராதேவி அவளை அணைக்க மறுத்து எட்டிப் போயினாள் மாசுகள் படிந்த காற்று அவளது சுவாசத்தை இறுக்கியது. சுதந்திரக் காற்றைத் தேடி அவளது உணர்வுகள் உந்தத் தொடங்கின.

அவளையறியாமலே அவளது மனம் வன்னி மண்ணில் வாழ்ந்த வாழ்க்கையை எடை போட்டது. திறந்த குடிசைக்குள் நிம்மதியாக உறங்கிக் கழித்த நாட்களும் இரவென்றும்பகலென்றும் பாராமல் தெருக்களில் நடமாடித்திரிந்த பொழுதுகளும் அவளது நினைவை ஈர்த்தன.

சட்டென அன்று மாலை நடந்த சம்பவமொன்று அவளது நினைவில் நிலை கொள்ள எத்தனித்தது. நிர்மலா தினமும் ரியூசனுக் குப் போகும் போது ஆக்கரமிப்பாளர்களினது சோதனைச் சாவடி களில் ஏற்படும் வேதனைகளைத் தவிர்க்குமுகமாக ஒழுங்கைகளி னூடாகப் போய் வருவது வழக்கம் அன்று மாலையும் அதே வழியாக வந்து கொண்டிருந்தாள் சிறு சந்தியொன்றில் சில நாய்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தன. நிர்மலா அந்த இடத்தைத் தாண்டியதும் ஒரு நாய் உறுமியவாறே அவளைக் கலைக்கத் தொடங்கியது. அதன் பிடியி லிருந்து தப்புவதற்காக அவள் விரைவாக சைக்கிளை மிதிக்கத் தொடங் கினாள். நாயுமோ அவளை விட்டபாடில்லை. பின்னாலேயே வந்து கொண்டிருந்தது. அதன் வேகம் மட்டும் சற்றுக் குறைந்திருந்தது.

நிர்மலாவின் மூளையில் ஒரு பொறிதட்டியது ஒழுங்கையின் திருப்பத்தில் சட்டென சைக்கிளை நிறுத்தினாள் குனிந்து ஒரு கல்லை எடுத்து அதன் மீதுவீசினாள்.

"லொள்"!...

கிறீச்சிட்டவாறு நாய் திருப்பி ஓடத் துவங்கியது. இந்த நினைவுகளை மீட்டவளது இதயத்தில் இதமான சுகம் தோன்றியது அப்படியே அயர்ந்து போனாள். டாங்!.. டாங்!!.. டாங்!!!...

அதிகாலை கோயில் மணியோசை அவளைத் தட்டியெழுப் பியது நிர்மலா எழுந்து வெளியே வந்தவள் கண்களை நிமிர்த்தி மேலே நோக்கினாள். கருமுகில்கள் கலைந்து நிர்மலமாய்க் கிடந்தது வானம் விடிவெள்ளி அங்கே காலித்திருந்தது. இனி விடியப் போகுது.

அவளது வாய் முணுமுணுத்தது.

- களத்தில் - 25.02.1999

# தெளிவு

*என்னை மறந்த நிலையில் நான் சுவாரசியமான கதைப்புத்தகமொன்றில் மூழ்கிப் போயிருந்தேன். எங்கள் மண்ணின் நிகழ்வுகளைச் சித்திரிக்கும் கதைகள் என்றால் எனக்கு அலாதிப் பிரியம். கதையுடன் ஒன்றிவிட்ட என் உணர்வுகளை சைக்கிள் மணி ஓசை கலைத்து விட்டது.*

*டிரிங்! டிரிங்!!*

*இப்போது கேற்றடியில் அம்மாவின் குரல் கேட்டது. நான் மீண்டும் கதையை வாசிக்கத் தொடங்கினேன். அம்மா "ஐயோ!" என்று கத்தியவாறு ஓடி வந்து என்னைக் கட்டிப்பிடித்து அழத் தொடங்கினாள்.*

*ஒன்றுமறியாது திகைத்த நான் "அம்மா!, என்னெண்டு சொல்லுங்கோவன்", என்று வற்புறுத்திய பின்னர் தான் உனக்குப் பேசி இருந்த மாப்பிளைப் பெடியன் கிளாலிக் கடலுக்கை செத்துப் போச்சுதாம்" என்று கூறி "ஓ" வெனக் கதறினாள்.*

*அப்பொழுது தான் நேற்றைய ஈழநாதத்தில் வெளியாகிய தலைப்புச் செய்தி என் ஞாபகத்தில் வந்தது. "கிளாலிக் கடலில் படுகொலை" என்ற செய்தி யின் பின்னணி தான் இந்த மரணச் செய்தியாயிருக்க வேண்டுமென ஊகித்துக் கொண்டேன்.*

*என்னில் எந்தவித உணர்ச்சி வேறுபாடும் தோன்றவில்லை. முன்பின் தெரியாத ஒருவரின் மரணத்தையிட்டு என் மனம் சலனப்படவேயில்லை. அம்மாவின் அழுகையை நிறுத்த முயற்சி செய்தேன்.*

அம்மா! பெலமாய் அழாதையுங்கோ. சத்தம் கேட்டால் அயலட்டைச் சனங்கள் வந்து குவியப் போகுதுகள். இந்த அம்மாவுக்கு எங்கிருந்துதான் கண்ணீர் வருகிறதோ என்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

எனக்கே என்னுடைய நிலை புரியாத ஒன்றாகி விட்டது. அன்று... பத்திரிகையில் வெளியாகி இருந்த கரும்புலி வீரர்களின் படங்களைப் பார்த்ததும் என் உடம்பெல்லாம் சிலிர்த்தது. உணர்ச்சி வசப்பட்டுப் போனேன். இன்று... என் வாழ்க்கையில் இணைய இருந்தவரின் இழப்பு ஏன் என்னை எந்தவிதத்திலும் பாதிக்கவே யில்லை?

அம்மாவின் குரல் அயலவர்களுக்குக் கேட்டதோ இல்லையோ வீட்டில் பெரியதொரு கூட்டம் கூடி விட்டது. என்பாடு பெரிய திண்டாட்டமாக போய்விட்டது. என்ன செய்வதென்றறி யாமல் பேசாமல் போய் படுக்கையில் விழுந்தேன். வீட்டில் கூடியிருந்தர்களின் உரையாடல்கள் மட்டும் என் காதுகளில் விழுந்த வண்ணமிருந்தன.

“நல்ல காலம் கலா தப்பி விட்டாள். தாலி கட்டி இருந்தால் விதவை எண்டு பேரெடுத்திருப்பாள்.”

“நல்ல கதை சொன்னியள். இப்ப மட்டும் என்ன? இவளுக் கெண்டு பேசி முற்றாக்கிக் கலியாணஞ் செய்து கொண்டு போக வந்த பெடியன் தானே. ஒருவேளை இவளுக்கு ஏதும் செவ்வாய்தோசம் இருந்திருக்குமோ?” என்று ஐயத்தைக் கிளப்பினாள் ஒருத்தி.

“மெய்யே சரசு, வடிவாய்ச் சாதகம் பொருத்தம் பார்த்தனீங் களே?”

“ஓமெணை அக்கா. எல்லாந்தான் பாத்தது. நல்ல பொருத்த மெண்டு சொன்னாங்கள், இப்பிடி நடந்து போச்சே” இது அம்மாவின் குரல்.

அவர்களின் பேச்சுக்கள் போன திசையைப் பார்த்தால் நான் தான் அவரது மரணத்துக்குக் காரணகர்த்தாவாக இருந்ததைப் போலிருந்ததே தவிர, எங்கள் இனத்தை எதிரி அழிக்கவும் பழிவாங்க வும் முனைவது பற்றிய பேச்சுக்கே அங்கு இடமிருக்கவில்லை. சுற்றி வளைத்து என்மீது பழிசுமத்துவதில் தான் ஆர்வமாயிருந்தனர். இவர்களின் அறியாமையை எண்ண எனக்கு வேதனையாயிருந்தது. இதற்கிடையில் அப்பாவின் குரல் கேட்டது.

“சரசு, வெளிக்கிடுமன்: நாங்கள் அங்கை ஒருக்கால் போட்டு

வருவம். "பொடி" இண்டைக்கு வந்திடுமாம். உடனயே எடுத்துப் போடுவினம் வைச்சுப்பார்க்கக் கூடிய நிலையில் இருக்காது நாங்கள் போகாமல் விடுறது சரியில்லைப் பாரும்."

"எங்களைக் காண அதுகளுக்குக் கவலை இன்னும் கூடப் போகுது. எண்டாலும் என்ன செய்யிறது ஒருக்கால் போட்டு வருவம்".

அம்மா சொல்லிக் கொண்டே அறைக்குள் வந்தார். அப்பாவும் பின்னால் வந்தார். எனது கட்டிலருகில் வந்து நின்று, கலா கவலைப்படாத மேனை. மேலை இருக்கிறவன் நினைக்கிறபடிதான் எல்லாம் நடக்கும்" சொல்லி விட்டுப்போய் விட்டார்:

அந்த நேரத்திலும் அப்பாவின் பேச்சைக் கேட்க எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஏதோ நான் கவலையில் மூழ்கிப் போயிருப்பதாக எண்ணும் இவர்களை நினைத்துச் சிரிக்காமல் என்ன செய்வது?

ஆட்டோ ஒன்று வந்து நிற்கும் சத்தம் என் காதுகளில் விழுகிறது. அப்பாவும், அம்மாவும் வேறு சிலரும் புறப்பட்டுப்போவது என் புலனுக்குத் தெரிகிறது. ஆட்டோ புறப்படும் சத்தம் கேட்கிறது. வீட்டில் கூடியிருந்தவர்கள் கலைவதை உணர்கிறேன் பக்கத்து வீட்டுப் பாக்கியம் மாமி மட்டும் என்னிடம் வருகிறாள்.

"இனி என்ன செய்யிறது? உன்ரை விதி அப்பிடியாப் போச்சு. நெடுக அழுது கொண்டு கிடந்தால் மண்டைக்குத்து வந்திடும் எழும்பு பிள்ளை" என்று சொல்லி எனது தலையைத் தடவி விடுகிறார். பேசாமலிருக்கும் என்னை அழவைத்து விடுவது போலிருந்தது அவரின் போக்கு.

"பிள்ளை யாமினி! கொஞ்சம் கோப்பி போட்டுக் கொண்டு வந்து கொக்காவுக்குக் குடு மேனே" பாக்கியம் மாமி தான் எனது தங்கையைக் கூப்பிட்டுச் சொல்லுகிறார்.

எனக்கு என்ன வந்துவிட்ட தென்று இந்த ஆரவாரம்?

தங்கை யாமினி கொண்டு வந்து தந்த கோப்பியை வாங்கிப் பேசாமல் குடிக்கிறேன். ஏன் எனக்கு இந்தச் சங்கடமான நிலை? எனக்கே புரியவில்லை . சிறிது நேரத்தில் பாக்கியம் மாமி போய் விட்டார். போகும்போது,

"பிள்ளை யாமினி நீ ஒண்டும் செய்யாதைபிள்ளை. நான் மத்தியானத்துக்கு உங்களுக்கும் சேத்துச் சமைச்சுக் கொண்டு வாறன்" என்று சொல்லி விட்டுப் போனார். நாங்களிருவருமே மறுத்துச் சொல்ல முடியாமல் இருந்து விட்டோம்.

பாக்கியம் மாமியை நினைக்க எனக்குப் பச்சாத்தாபம் ஏற்பட்டது. தன்னை மறந்து, பிறருக்கு உதவி செய்வதில் பாக்கியம் மாமி எப்போதும் முன்னுக்கு நிற்பார். அவரின் மகள் கார்த்திகாவுக் கும் எனக்கும் ஒரே வயது. தாயைப் போன்ற குணம்தான் அவளுக்கும் அமைந்திருந்தது. சில மாதங்களின் முன் ஒரு நாள் டியூசனுக்குப் போனவள் திரும்பி வரவில்லை. அத்துடன் எனது படிப்புக்கும் முற்றுப் புள்ளி வைத்து விட்டார் அப்பா.

அதன் பின்னர் தான் எனக்கு அமளியாகத் திருமணம் பேசப் பட்டது. அம்மாவின் தாலிக் கொடி எனக்கு அட்டியலாகவும், காப்பு களாகவும் மாறியது. அம்மாவின் மற்றைய நகைகளெல்லாம் அக்காவின் திருமணத்தோடு அவளின் கையையும், கழுத்தையும் அலங்கரிக்கப் போய் விட்டன. இரண்டு மாதங்களின் முன் ஒரு இடம் பொருந்தி வந்தது. மாப்பிள்ளை கொழும்பில் ஒரு கடையில் நிற்கிறாராம் எங்களின் சீதனத்துக்கு ஏற்ற இடம். அவர் வந்து என்னைப் பார்த்து விட்டு பெண் கறுப்பு என்று சொல்லி நிராகரித்து விட்டார். என்னைக் கறுப்பு என்று பழித்தவர், தான் வெள்ளைத் தோல் படைத்தவரா என்றால் அதுதான் இல்லை. அவர் என்னை விடக் கறுப்பு, எனக்கு அப்பா, அம்மா மீது கோபம் கோபமாக வந்தது. எனக்குத் திருமணமே வேண்டாம் என்று எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்டால் தானே.

அன்றிலிருந்து என் மனதில் பெரும் போராட்டம் நிகழ்ந்த வண்ணமிருக்கிறது. திருமணச் சந்தையில் பெண்களை விலை பேசுவதும், அழகு பார்ப்பதும் எனக்கு வெறுப்பைத் தருகின்றன. அப்பா ஒரு தரகர் மூலமாக இந்தச் சம்மந்தத்தைப்பேசி, முற்றாக்கியும் விட்டார். இந்த முறை பெண் பார்க்கும் படலம் புகைப்படம் மூலம் நடந்தேறியபடியால் நிறத்தைப் பற்றி குறை கூற இடமில்லாமற் போய்விட்டது. யாரோ ஒருவருடைய புகைப்படத்தைப் பார்த்த வுடன் அவர் மீது எனக்கு அன்போ, பரிவோ ஏற்பட்டு விடுமா என்ன? என் குழம்பிய மனம் ஒரு நிலைப்பட மறுத்துக் கொண்டிருந்தது. நான் மட்டுமா, என்னைப்போல் எத்தனை பெண்கள் இந்த நிலையில்? நாளுக்கு நாள் என் மனப்புழுக்கம் அதிகரித்ததே தவிரக் குறைந்தபாடில்லை உணர்ச்சியற்ற சடமாக வீட்டினுள் வளைய வந்து கொண்டிருந்தேன்.

அப்பாவும், அம்மாவும் இளமைப் பருவத்துக்கு மீண்டு விட்டவர்கள் போன்று அங்குமிங்கும் ஓடியாடித் திருமண ஒழுங்குகளைக் கவனித்தனர். அம்மா வீட்டுக்கு வெள்ளை அடிக்க

வேண்டுமென்று ஒரே பிடியாக நின்றார். அப்பாவோ செலவை முன்னிட்டு தட்டிக்கழித்து விட்டார், எங்கள் வீட்டில் எப்போதுமே அப்பாவின் கை தான் ஓங்கும். அம்மாவுக்கு வாய் மட்டுந்தான். அப்பாவின் ஒரு அதட்டலில் பெட்டிப்பாம்பாக அடங்கிப் போய் விடுவார்.

வாசலில் வந்து நின்ற ஆட்டோவின் இரைச்சல் என் எண்ணத் தொடரைக் குழப்பி விட்டது. வெளியில் வந்து எட்டிப் பார்த்தேன். அப்பாவும், அம்மாவும் தான் வந்தார்கள். என்னை கண்டதும் ஏதோ பெரிய இழப்பைச் சந்தித்தவர்கள் போல் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள். நான் மௌனமாய் நின்று கொண்டி ருந்தேன். அம்மா, யாமினியைக் கூப்பிட்டு "கிணத்தில தண்ணி அள்ளித் தா பிள்ளை" என்று சொல்லிக் கூட்டிக் கொண்டு போனார்.

இரவு வெகு நேரமாகியும் நித்திரை என்னை அணுக மறுத்தது. யாமினி கூறிய சில வார்த்தைகள் என் நினைவில் மோதின "பொடி"யை வைச்சிருந்த பெட்டியைத் திறக்கவேயில்லையாம், சுட்டுப் போட்டுக் காலால மிதிச்சு முகத்தைச் சிதைச்சுப் போட்டாங் களாம். இப்படிச் செய்தவர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற நினைப்பு யாருக்காவது இருப்பதாகத் தெரியவில்லை.

தாய் மனுசியைப் பாக்கிற நிலையில் இல்லை. மனுசி மண்டையைப் போட்டு அடிக்குது. அந்தப் பொடியன் தான் இவ்வளவு நாளும் உழைத்துத் தங்கச்சி மார் ரெண்டு பேரையும்கரை சேர்த்ததாம்; தங்கச்சிக்காரியள் கரைஞ்சு போறாளவை, அண்ணை, அண்ணை எண்டு கத்திக் குழறினபடிதான். ஓயவே இல்லை" அம்மா தாழ்ந்த குரலில் யாமினிக்குச் சொல்லும் போது என் காது ஒட்டுக் கேட்டு விட்டது. அந்த வார்த்தைகள் என் நெஞ்சில் எதிரொலித்துக் கொண்டே இருந்தன. இப்படித் துயருறுவோர் இவர்கள் மட்டும் தானா? இல்லையே அங்கு கொலையுண்ட அத்தனை பேர்களது உறவினரது நிலையும் இப்படித்தானே இருந்திருக்கும். புரண்டு புரண்டு படுத்துப் பார்க்கிறேன். கண் துயில் கொள்ள மறுத்தது

நீண்ட நேர மனச்சஞ்சலத்தின் பின் என்னையறியாமலே கண் உறங்கி விட்டேன், யன்னலினூடாகப் புகுந்த வெயில் என் முகத்தில் பட்டதும் தான் திடுக்கிட்டு விழித்தேன், விடிந்து வெகு நேரமாகி இருக்க வேண்டுமென ஊகித்துக் கொண்டேன். எப்படி நான் உறக்கத்தில் ஆழ்ந்தேன் எனப் பழைய நினைவுகளை மீட்டுப் பார்த்தேன். என் மனதில் எந்த விதச் சலனமும் இருக்கவில்லை. நிதானமாக எழும் பிக் காலைக் கடன்களை முடிக்கிறேன். கழுவிய

*முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டேன். எல்லாவற்றையும் துடைத்து விட்டதாக ஒரு நினைப்பு. துடைக்கும்போது கையில் அணிந்திருந்த காப்புகள் ஒலி எழுப்ப, எனக்கு யாமினியின் நினைவு வருகிறது, அலுமாரியைத் திறக்கிறேன். அங்கே.. அம்மா எனக்கெனச் செய்து வைத்திருக்கும் நகைகள் என்னைப் பார்த்துச் சிரிப்பது போல் ஒரு பிரமை, கையிலிருந்த காப்புகளையும் கழற்றி அவற்றுடன் வைக்கிறேன்.*

*என் மனம் லேசாகி விட்டது போன்ற உணர்வொன்று என்னை ஆட்கொள்கிறது. என் சிந்தனையில் என்றுமேயில்லாத தெளிவு...*

- சுதந்திரப் பறவைகள் - 1994 தை

# புயலாக மாறும் பிஞ்சுகள்

யன்னலினூடாக புகுந்த மாலை வெயிலின் உறைப்பு. எண்ணங்களை அலைய விட்டபடி தையல் வேலையில் மூழ்கிப் போயிருந்த மைதிலி, தன் நிலைக்குத் திரும்பினாள்.

"நேரத்தோடை போனால் தான் கடைகள் பூட்டமுந்தித் தையலுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு வந்திடலாம். பொங்கலுக்கு இன்னும் மூண்டு நாள் தானே கிடக்கு. அதுக்கிடை யிலை கிடக்கிற சட்டையள் எல்லாம் தைச்சு முடிக்க வேணும். எல்லாரும் பொங் கலுக்குப் போகவேணும் எண்டு சொல்லித்தான் தைக்கத் தந்தவை"

தனக்குள் சொல்லியபடி மைதிலி தையல் மெசினை மூடிவிட்டு எழுந்தாள்.

"அம்மா என்னையும் கூட்டிக் கொண்டு போறீங்களே, கடைக்கு" - என்றாள், தர்சினி.

"இல்லைக் குஞ்சு, நீங்கள் பக்கத்து வீட்டு வாணி அக்காவோடை விளையாடிக் கொண்டி ருங்கோ. நான் டக்கெண்டு போயிட்டு வந்திடுறன். பிள்ளைக்குச் சொக்கா வாங்கிக் கொண்டு வாறன் என்று சொல்லிக்கொண்டு அவசரமாகப் புறப்பட்ட மைதிலி, தர்சினியைப் பக்கத்து வீட்டில் விட்டு விட்டு, ஒழுங்கையில் இறங்கி விறுவிறென்று நடந்தாள். பொழுது சரிவதற்குள் தண்ணீரூற்றுக்குப் போய்த் திரும்பி விட வேண்டுமென்ற அவசரம் அவளுக்கு.

தர்சினியும் வாணியும் "பில்டிங் புளொக்ஸ்" ஸைப் பரப்பி, பல விதமான உருவ அமைப்புக்களைச் செய்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

இருந்தாற்போல் வாணிக்கு வற்றாப்பளைப் பொங்கல் ஞாபகம் வரவே, "தர்சினி அம்மாட்டைக் கேட்டிட்டுப் பொங்கலுக் குப் போறதுக்கு நீர் எங்களோடை வாருமன், எங்கட மெசினிலை போகலாம். கனபேர் வருவினம், எங்கட மெசினிலை போறதுக்கு. உங்கட அம்மாதான் கோயிலுக்குப் போறதில்லையே"

ஆறு வயது நிரம்பிய தர்சினி; சொன்னாள்! "அம்மா சொன்னவா, அப்பாவும், அண்ணாவும் சாமியிட்டைப் போட்டின மாம். அதால அவையைத் தான் கும்பிட வேணுமாம். நாங்கள் ஒவ்வொரு நாளும் அவையின்ரை படத்துக்குத் தான் பூவைச்சு, குத்து விளக்குக் கொளுத்திக் கும்பிடுற நாங்கள்"

இதைக் கேட்டுக் கொண்டிருந்த வாணியின் அம்மம்மா, "எடி விசரி, அவளைக் கோயிலுக்கு ஏன் கூப்பிடுறாய்? போன வருசம் பொங்கலுக்கு எண்டு, போய்த்தானே மைதிலி புருசனையும், புள்ளையையும் பறிகொடுத்தவள் பாவம்! ....அவளுக்கு இந்த முறை கோயிலுக்குப் போக மனம் வருமே?"

தர்சினி குறுக்கிட்டாள் "அம்மம்மா, அப்பாவும் அண்ணாவும் இந்தப் பொங்கலுக்கு வந்திடுவினமே; சாமி இனி விட்டிடுவரே"

வாணியின் அம்மம்மாவின் நிலை தர்மசங்கடமாகியது.

"பிள்ளை தர்சினி, உன்ரை அப்பாவும், அண்ணாவும் செத்துப் போட்டினம். செத்தவை திரும்பி வரமாட்டினம். இது தெரியாதே உனக்கு"

தர்சினி வெடுக்கென்று கேட்டாள்.

"ஏன் அம்மம்மா பொய் சொல்லுறியள். அப்பாவும் அண்ணா வும் சாமியிட்டைத் தானே போனவை. முந்தி, நீங்கள் தானே என் னைத் தூக்கிக் காட்டின நீங்கள் அப்பா, சாமி மாதிரி கண்ணை மூடிக் கொண்டு இருந்தவர். மாலையள் எல்லாம் போட்டு சாமியைத் தூக்கிற மாதிரித்தானே தூக்கிக் கொண்டு போனவை. எல்லாருந் தானே சொன்னவை அப்பா சாமியிட்டைப் போட்டார் எண்டு"

"எடி பிள்ளை; நான் என்னெண்டு உனக்கு விளங்கப் படுத்துறது. போன வருசம் பொங்கலுக்கு, அப்பாவும் நீங்களும் போன நீங்களெல்லோ"

“ஓம் அம்மம்மா, போனநாங்கள்”

“அப்பத்தான் ஆமிக்காரன் காம்பிலை இருந்து ஷெல் அடிச்சவன். சனக் கூட்டத்துக்கை ஷெல் விழுந்து கனசனம் செத்துப் போச்சுதுகள். அதிலை கொம்பரும் கொண்ணையும் செத்துப் போச்சினமடி”

“அம்மம்மா ஷெல் எண்டால் என்ன? நாங்கள் கோயிலுக்கு வெளியாலை நிக்கைக்க இடி முழக்கம் கேட்டுது. நான் பயத்தில கண்ணை இறுக்கி மூடிட் டன்”

“எடி பிள்ளை. உன்னைத் தூக்கி எறிஞ்சுபோட்டுது. நீ மயங்கிப் போனாய் கனபேர் ரெத்த வெள்ளத் துக்க கிடந்தவை. எக்கச் சக்கமான ஆக்கள் காயப்பட்டு அதுக்கை கிடந்தவை. அதிலைதான் கொம்மாவுக்கும், கையிலை காயம்பட்டு மூண்டு விரல் இல்லாமல் போட்டுது. கொம்மாவின்ர கையைப் பாத்தனியல்லோ, எல்லா விரலும் இருக்குதோ?”

“அம்மம்மா, நீங்கள் சொல்லுறது சரிதான் எண்டாலும் நீங்களும் எனக்குப் பொய்தானே சொல்லிப் போட்டியள், அப்பா சாமியிட்டைப் போட்டாரெண்டு”

“நீ சின்னப்பிள்ளை பயந்திடுவாய் எண்டுதான் அப்பிடிச் சொன்னது”

“அம்மம்மா, அப்ப எங்கட அப்பாவும் அண்ணாவும் வரமாட்டினமோ”

இலேசான சிணுக்கத்துடன் கேட்டாள் தர்சினி.

“என்னெண்டு பிள்ளை வாறது. செத்தால் செத்ததுதான். பிறகு வர ஏலாது”

அம்மம்மாவிற்குப் பெரியதொரு உண்மையை அந்தப் பிஞ்சு நெஞ்சத்திற்கு உணர வைத்துவிட்ட பெருமை.

“தர்சினி! தர்சினி!!”.

மைதிலி தண்ணீரூற்றுக்குப் போய்த் திரும்பி விட்ட அறிகுறி.

“வாறன் அம்மா” என்று கூவியபடி ஓடினாள் தர்சினி. அம்மா, அன்போடு வாங்கி வந்து கொடுத்த சொக்லேட் அவளுக்குச் சுவைக்க வில்லை; அம்மம்மா புரிய வைத்த உண்மை சுவையை மழுப்பி விட்டது. இரவு சாப்பிடும் போது தர்சினி அம்மாவிடம் கேட்டாள்.

“அம்மா காம்பிலையோ ஆமிக்காரர் இருப்பினம்? ஏன் அம்மா ஷெல் அடிக்கிறவை? ஆக்களைக் கொல்லவோ?”

திடுக்கிட்டாள் மைதிலி. "தர்சினி, ஆர் சொன்னது உதெல்லாம்?"

"வாணியின்ரை அம்மம்மாதான் சொன்னவ. எனக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சு. அப்பாவும், அண்ணாவும் இனி வரமாட்டினம். நீங்கள் பொய் சொல்லிப் போட்டியள்."

அம்மாவின் முகத்தைப் பார்த்த தர்சினி துணுக்குற்றாள். கண்ணீர் அருவியாய் வழிந்தோட - குரல் தழுதழுக்க - மைதிலி தன் மகளை இறுக அணைத்துக் கொண்டாள்.

***

அன்று வைகாசிப் பொங்கல் நாள். ஊரே அமளிப்பட்டது. மைதிலிக்கு மனமே சரியில்லை. அவளுக்கு இருப்புக் கொள்ள வில்லை. கடந்த வருட நிகழ்வுகள் நினைவில் நிழலாடின.

வீட்டில் எல்லோருக்கும் கணவன் புது உடுப்புகள் வாங்கி வந்தது; எல்லோரும் தடபுடலாய் வெளிக்கிட்டுக் கோயிலுக்குப் போனது; பிறகு தான் மயக்கம் தெளிந்து விழித்த போது யாழ். போதனா வைத்தியசாலையில் கையில் கட்டுப் போட்ட நிலையில் கிடந்தது; தனது கணவன் பிள்ளையின் சடலங்களைக் கூடக் காணக் கிடைக்காமற் போனது; தனது ஒரே பற்றுக்கோடாகிய மகள் தர்சினியை வளர்த்து ஆளாக்கி விட வேண்டுமெனத்தான் திடசங் கற்பம் பூண்டது; தன் எண்ணங்களை, கணவனையும், மகனையுமே நினைத்து நினைத்து அலையவிடாமல் ஒரு நிலைப்ப டுத்தத் தனக்குத்தெரிந்த தையற்கலையைத் தேர்ந்தெடுத்தது - என்று எல்லா வற்றையும் அசைபோட்ட வண்ணம் அமர்ந்திருந்தாள்.

அப்பொழுது "அம்மா, அண்ணா இனி வரமாட்டா னெல்லே. அவன் விளையாடுற ஆமிசெற்றை அலுமாரிக்குள்ள வைச்சிருக்கிறீர்கள். அதை எடுத்து தாங்கோம்மா, நான் விளை யாடப்போறன்" என்று கெஞ்சினாள் தர்சினி.

பிஞ்சு உள்ளத்தை நோக விடக் கூடாது என்ற நோக்குடன், அலுமாரியைத் திறந்து அதைத் தேடி எடுத்துக் கொடுத்தாள் மகளிடம்.

"கவனமாய் வைச்சிருக்க வேணும் குஞ்சு, அண்ணையின்ரை கைபட்ட பொருளெண்டுதான் பக்குவமாய் வைச்சிருந்தனான்"

அவளது வார்த்தைகளை முந்திவிட்டன, கண்ணீர்த்துளிகள், தர்சினி அதைக் கவனிக்கவில்லை. "ஆமி செற்" கையில் கிடைத்த மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தபடி ஓடினாள்.

இடையில் அறுபட்ட நினைவுகள் மீண்டும் தொடர்ந்தன. நீண்ட நேரமாக அப்படியே சமைந்து விட்டாள். ஏதோ எரிந்து கருகும் மணம் மூக்கைத் துளைக்கவே மைதிலிக்குத் தான் அடுப்பில் அரிசிவேக வைத்த நினைவு வந்தது. அவசரமாகக் குசினியை நோக்கி விரைந்தாள்.

குசினிக்குள் யாரோ கதைப்பது போல் குரல் கேட்டது. கிட்டப்போன பின் தான் அது தர்சினியின் குரல் என்று புரிந்தது. "தர்சினி யாரோடு கதைக்கிறாள்" என்று எண்ணியவாறு குசினிக்குள் நுழைந்தவள், துணுக்குற்று அப்படியே நின்று விட்டாள்.

ஆமி செற்றில் இருந்த ஆமியின் உருவங்களை ஒவ்வொன்றாக எடுத்து ஒரு தடியினால் அடித்து, அடித்து எரியும் அடுப்புக்குள் போட்டுக் கொண்டிருந்தாள் தர்சினி.

"டேய்! ஆமிக்காரா நீ தானே அடிச்சு ஆக்களைக் கொல்லுறது? இனி மேல் அடிப்பியா! சொல்லுடா! சொல்லுடா! உன்னை அடுப்புக்கை போட்டு எரிச்சாத்தான் சரி; அப்பதான் இனி அடிக்க மாட்டாய்"

உரத்து ஏசியபடி, கருகி எரியும் அந்த உருவங்களை உறுத்துப்பார்த்துக் கொண்டிருந்தாள் தர்சினி.

- வெளிச்சம்

# விழிப்பு

*இருள் பிரிந்து வெளிச்சம் மிக லேசாகப் பரவிக் கொண்டிருந்த நேரம். ஆடி, அசைந்து குண்டுங்குழி யுமாய்க் கிடந்த பாதையினூடே மிகவும் நிதானமாகப் போய்க்கொண்டிருந்தது, அந்த ஆட்டோ. திரு நெல்வேலிச் சந்தியை நெருங்கியபோது, அதனுள் தூங்கி வழிந்து கொண்டிருந்த ராகவன் விழிப்புப் பெற்றான். நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டவன் தனது பார்வையை வெளிப் புறம் நோக்கி மேய விட்டான்.*

*ஐந்து வருடங்களின் பின் தன் சொந்த ஊரை நோக்கிப் பயணமாகிக் கொண்டிருந்த அவனது மனத் தில் ஏதேதோ விதமான கற்பனைகள், எண்ணங்கள் ஆக்கிரமித்துக் கொள்ள அவன் மௌனமாய் அமர்ந் திருந்தான். ஆட்டோ, கோண்டாவில் சந்தியை அண்மித்ததும், அவனையறியாமலே அவனுள் ஓர் குறுகுறுப்புத் தோன்றி மறைந்தது.*

*அந்தச் சந்தியில் நின்று அவனும் நண்பர்களு மாகச் செய்த அட்டகாசங்கள் ஒரு கணம் நினைவில் வந்தது. தொடர்ந்து இந்திய ஆக்கிரமிப்புப் படை யினரிடம் அதே சந்தியில் வைத்து வசமாக மாட்டிக் கொண்டதும், அந்நிய அரக்கரிடம் நன்றாக வாங்கிக் கட்டியதும் ஞாபகத்தில் வந்து போனது. அவனது கை அவனையறியாமலே முதுகைத் தடவிக்கொண்டது. இன்னமும் அங்கே தழும்பொன்று கிடப்பதை அவனது கைகளின் ஸ்பரிசத்தினால் உணரமுடிந்தது.*

*"ம்!"... அவனைப் பொறுத்த வரையில் அந்தத் தழும்பு நெஞ்சைவிட்டகலாத நினைவுச் சின்னம். திடீரென அவனுக்கு நண்பன் வாசுவின் நினைவு*

வருகிறது. இருவரும் இணைபிரியா நண்பர்கள். ஒன்றாகவே படித்து, ஒன்றாகவே விளையாடி, ஒன்றாகவே கூடித்திரிந்து, ஆக்கிரமிப்புப் படையில் அடி வாங்கியதும் ஒன்றாகத்தான். அத்தனை பிணைப்பு அந்த உறவில்...

ஆனால் அவர்கள் பிரிந்ததும் அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் தான். மறுநாளே வாசுவை வீட்டில் காணவில்லை. ராகவனை அவனது அப்பா அரும்பாடுபட்டுக் கொழும்பிற்கு அழைத்து வந்து விட்டார். இரண்டு மாதங்களாகக் கொழும்பில் நின்று ஏதோ ஒரு வாறு ஒரு ஏஜென்சியைப் பிடித்து அவனைக் கனடாவுக்கு அனுப்பி வைத்தார். ராகவனுக்குக் கனடாவில் அகதி என்ற அந்தஸ்தைப் பெற்றுத் தர அவனது முதுகிலிருந்த தழும்பு முக்கியமாகக் கை கொடுத் தது.

புதிய சூழல், புது நண்பர்கள் புதுமையான அனுபவங் களுடன் ஐந்து வருடங்களை அவன் எப்படியோ கழித்துவிட்டான். கனடாவுக்குப்போன புதிதில் அம்மாவுக்கு கடிதம் எழுதும் போது வாசுவைப் பற்றியும் விசாரித்து எழுதும் பழக்கம் அவனிடம் இருந்தது. அம்மாவிடமிருந்து அவனைப் பற்றிய பதில்கள் எதுவுமே வராததால் நாளடைவில் அவனும் வாசுவைப் பற்றி விசாரிப்பதைத் தவிர்த்துக் கொண்டான்.

இப்போது வாசு எங்கிருக்கிறானோ? என்ன செய்கிறானோ?

அவனது சிந்தையில் புதிதாய் முளைத்தது புதிர் ஒன்று. மறு நிமிடம் அம்மாவிடமிருந்து வந்த கடிதத்தைப் பற்றிய சிந்தனையில் மனம் லயித்து விட்டது. அம்மா எழுதிய வசனங்களை அவனது மனம் அசை போடத்துவங்கியது.

“தம்பி ராகவன், அப்பாவுக்குப் பிறசர் கூடி வருத்தமாய் வார்ட்டில் வைத்திருந்து இப்ப வீட்டிற்கு கொண்டு வந்து விட்டோம் அவருக்கு ஒரு கையையும், காலையும் இழுத்துப்போட்டுது. படுக்கையில் தான் இருக்கிறார். என்னாலையோ, மாலாவாலையோ அவரைத் தூக்கிப் பறிக்க ஏலாது. ஏதோ நீ உழைத்து அனுப்பும் காசில் ஒரு ஆளைப் பிடித்து வைத்துப் பார்க்கிறோம். எதுக்கும் நீ ஒருக்கால் வந்து அப்பாவைப் பார்த்துக் கொண்டு போறது நல்லதென்று நினைக்கிறேன். இன்னொரு முக்கியமான விடயம். உனக்கும் வயது வந்திட்டுது. இங்குள்ள சனங்கள் நெடுகக் கரைச்சல். பெண்ணை உவ்விடம் அனுப்புறதுக்கு நான் முந்தி நீ முந்தி என்று திரியினம். நீ வந்தியென்றால் உனக்கு விருப்பமானதாகப் பார்த்து ஒன்றைச் செய்து கூட்டிக்கொண்டு போகலாம் என்று அப்பா எழுதச் சொன்னார்.”

அம்மா எழுதியதில் நியாயம் இருப்பதாக அவனுக்குப் பட்டது. அங்குள்ள அகதி முகாமில், திருமணமானவர்களுக்குக் கூடிய சலுகைகள் வழங்கப்படுவதை அவன் நேரில் அவதானித் திருக்கிறான். எனவே, தாயகத்தை நோக்கிப் புறப்பட்டுவிட்டான்.

இத்தனை காலமும் தனது சொந்த மண்ணில் என்ன நடக்கிற தென்ற எண்ணமே இல்லாமல் வாழ்ந்து விட்டவனுக்கு, இப்போது தான் ஊர் நினைவுகள் அடிக்கடி வரத்தொடங்கின. சென்ற ஞாயிறன்று நண்பன் சுரேனுடன் பார்த்த இரு குறும்படங்கள் நினைவில் வந்தன. தமிழீழத்தில் தயாரிக்கப்பட்ட "சின்ன விழிகள்" "தாயகக் கனவு" ஆகிய படங்களை அவன் வீடியோவில் பார்த்த போது, தங்களுடைய நாட்டில் இப்படிப்படங்களை எடுக்குமள விற்கு முன்னேற்றமடைந்திருப்பதையிட்டுத் திருப்திப்பட்டுக் கொண்டானே தவிர, அவனிடம் எந்தவிதமான உணர்ச்சியும் தோன்ற வில்லை. ஆனால் அவனது நண்பன் சுரேன் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப்போனான்.

"மச்சான்! எங்கடை மண்ணிலை இப்படியான நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கேக்க நாங்கள் இவ்வளவு தூரத்திலை அந்நியப் பட்டுப் போயிருக்கிறது எனக்கெண்டால் துப்பரவாகப் பிடிக் கேல்ல"

ஆட்டோ ஒரு கிடங்கில் விழுந்து எழும்பியதால் அவனது சிந்தனையும் குலுங்கிப் போய், கலைந்து விட்டது. தனது வீட்டிற்குத் திரும்ப வேண்டிய ஒழுங்கையை நினைவுபடுத்திக் கொண்டவன் டிரைவரிடம் ஆட்டோவை அந்தப் பாதையினூடே செலுத்தும்படி சொன்னான்.

ஆட்டோ, ஒரு குலுக்கலுடன் வீட்டு வாசலில் நின்றது. கிணற்றடியில் நின்று மாலா குரல் கொடுத்தாள்.

"அம்மா! அண்ணா வந்திட்டார்"

அடுத்து, அம்மாவும், மாலாவும் வாசலுக்கு விரைந்து வந்தனர். இதற்கிடையில் சாமான்களை ஆட்டோவிலிருந்து இறக்கி வைத்து விட்டுப் பணத்தைக் கொடுத்து ஆட்டோக்காரனை அனுப்பி வைத்தான் ராகவன்.

"அம்மா! அப்பா எங்கை?"

கேட்டுக்கொண்டே வீட்டினுள் நுழைந்தான் ராகவன். மாலா அவனை அப்பா படுத்திருந்த இடத்துக்கு அழைத்துப் போனாள். மகனைக் கண்டதும் அவர் படுக்கையிலிருந்தவாறே குலுங்கிக்

குலுங்கி அழுதார்.

"ஏன் அப்பா அழுகிறியள்? நல்ல மருந்தெடுத்துக் குடிக்க எல்லாம் சுகமாயிடும். கவலைப்படாதேங்கோ"

அவனது குரல் கரகரத்தது. அவரருகில் அமர்ந்து அவரது கைகளைத் தூக்கித் தடவி விட்டான். மகனது தழுவலில் ஏற்பட்ட சுகத்தினால் தனைமறந்து அயர்ந்து போனார்.

ராகவன் தான் ஆசையாக அங்கிருந்து வாங்கி வந்த பரிசுப் பொருட்களைத் தங்கை மாலாவிடம் கொடுத்தபோது, அவள் அவற்றில் ஆர்வமில்லாமலிருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தான். தான் அவளுக்கென ஆசையாக வாங்கி வந்த செயினை எடுத்து அவளிடம் கொடுத்தபோது, அவள்,

"அண்ணா! நான் இந்தச் சங்கிலியைக் கவனமாய் வைச்சிருந்து வரப்போகிற அண்ணிக்கு பிரசன்ற் பண்ணப் போறன்"

அவளது பேச்சைக் கேட்டு வியப்படைந்த ராகவன்,

"ஏன் மாலா உனக்கெண்டுதானே நான் ஆசையாய் வாங்கிக் கொண்டு வந்தனான் நீயே போடு".

"அண்ணா! நான் என்னெண்டு இதைக் கழுத்தில போட்டுக் கொண்டு திரியிறது. என்ரை சிநேதிகள் கனபேர் கழுத்திலை சயனைட் மாலை போட்டிருக்கினம். எனக்கு இதைப் போடக் கூச்சமாய் இருக்குது".

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அம்மா சொன்னாள்.

"தம்பி! உவள் மாலா உப்பிடித்தான். இருந்திட்டு ஏதும் அலட்டுவாள்"

ராகவனுக்கோ ஊர்ப் புதினங்களைக் கேட்டு அறியவேண்டு மென்ற ஆவல் ஏற்பட்டது. ஆனால் அம்மாவோ அவனை வாய் திறக்க விடாது கலியாணப்பேச்சிலேயே மும்முரமாய் இருந்தாள். அம்மாவின் தொணதொணப்பிலிருந்து விடுபட எண்ணியவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

அவனது சைக்கிள் ஒழுங்கையைக் கடந்து தெருவில் ஏறியது. தெருமுனைப்பில் ஒரு பெரிய கட்-அவுட் அவனது கண்களில் பட்டது. அதனை நெருங்கியவன், உற்றுப் பார்த்தபோது திடுக்கிட்டுப் போனான்.

"சரியாய் எங்கட வாசு மாதிரிக் கிடக்குது"

தனக்குள் சொல்லிக் கொண்டவன், அதன் கீழ்

எழுதியிருந்ததை வாசித்தான்.

"கரும்புலி - கப்டன் லோறன்ஸ்"

அவனது விழிகள் மீண்டும் மீண்டும் அந்தப் படத்தில் தோன்றிய உருவத்திலேயே தமது பார்வையைப் பதித்தன.

வாசுதான் - நிச்சயமாய் இது வாசுதான் அவனது உடலெங்கும் ஒரு புல்லரிப்பு. மனத்தில் இனம்புரியாத சங்கடம்.

"ராகவன் அண்ணா! எப்ப கனடாவிலை இருந்து வந்த நீங்கள்?"

குரல் வந்த திசையில் திரும்பினான்.

"நீர்... நீர் சரண்யாதானே?"

"ஓம் அண்ணா . மாலாவோடை வீட்டுக்கு வாறனான். மறந்து போனீங்களோ?"

"மறக்கயில்லை . ஓ!... நல்ல ஞாபக மிருக்கு"

அவனுக்கு வார்த்தைகள் தடுமாறின. ஒரு கணம், மாலாவுடன் வீட்டிற்கு வந்து போகும் பழைய சரண்யாவை ஞாபகப்படுத்திப் பார்த்தான். இரட்டைப் பின்னலுடன் "கவுண்" அணிந்து திரிந்த சரண்யா, இப்போது கட்டையாக வெட்டிய மயிருடன், ஜீன்ஸ், சேட் அணிந்து அவளது கையில்... ஆயுதம்.

சற்று முன் மாலா சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் அவனுக்குப் புரிந்தது.

"சரண்யா ! இந்தப் படம்..."

"அது தெரியேல்லையே, உங்கடை பிரண்ட் வாசு அண்ணா தான்",

சரண்யா ஒரு கையால், தோளில் மாட்டியிருந்த துப்பாக்கி யைப் பிடித்துக் கொண்டு, மறுகையினால் "ஹாண்டிலை"ப் பிடித்தவாறு, சைக்கிளில் ஏறிப்போய் விட்டாள். அவள் போன திசையையே பார்த்துக் கொண்டு நின்றான், ராகவன்.

அவன் சுய நினைவுக்குத் திரும்ப வெகு நேரமாயிற்று. அவனது மனதில் ஓர் சலனம். சரண்யா வெகு லாவகமாய்த் துப்பாக்கியை அணைத்தவாறு சென்ற காட்சி மீண்டும் ஒருமுறை அவனது கண்முன் தோன்றியது.

அவனது கைகள் தானாகவே சைக்கிளை வீடு நோக்கித் திருப்பின. வீட்டை அடைந்ததும் தங்கை மாலாவிடம் வாசுவைப் பற்றிய முழுத் தகவல்களையும் கேட்டு அறிந்து கொண்டான். அவள் சொன்ன விடயங்கள் அவனைத் திகைப்பில் ஆழ்த்தின. வாசுவின்

அப்பாவுக்கு ஷெல் பட்டு முழங்காலுக்குக் கீழ் இரு கால்களும் துண்டிக்கப்பட்டு விட்டதாம். வாசுவின் தங்கை வாணியும் இயக்கத்துடன் இணைந்து விட்டாளாம்.

ராகவனுக்கு வாசுவின் குடும்பத்தைச் சந்திக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்படவே, உடனே கிளம்பி விட்டான். வீட்டுக்குள் நுழையும்போது அவனது நெஞ்சம் பக் பக் என அடித்துக் கொண்டது. நிமிர்ந்து பார்த்தவனை சுவரில் இருந்த வாறு புன்சிரிப்புடன் வரவேற்றது. வாசுவின் படம்.

ஒரு தரம் சுற்று முற்றும் பார்த்தவன் ஒருவரையும் காணாததால், குரலைச் செருமிக் கொண்டான். வாசுவின் அம்மா, தன்னைக் கண்டதும் அழுது ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறாள் என எதிர்பார்த்திருந்தவனுக்குப் பெரும் ஏமாற்றம்.

உள்ளே இருந்து வந்து எட்டிப் பார்த்த வாசுவின் அம்மா. புன்சிரிப்புடன் அவனை வரவேற்றாள்

"தம்பி ராகவன்! எப்ப வந்த நீர்?"

"இண்டைக்குத்தான் வந்த நான்"

வாசுவின் படமொன்று மேசையில் வைக்கப்பட்டிருந்தது. கறுப்புச்சீருடையில், புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கறுப்புத் தொப்பியும் அணிந்து காணப்பட்ட அந்தப் படத்திற்கு மாலையிடப் பட்டிருந்தது. படத்தின் முன்னால்... அன்றலர்ந்த மலர்கள் அஞ்சலிக்காய் வைக்கப்பட்டிருந்தன.

"உம்முடைய சிநேகிதன் வாசுவைப் பாரும். எத்தினை பெரிய சாதனையைச் செய்து போட்டுப் போட்டான். ம்!..."

அவளது அடிமனத்தில் ஆழப் புதைக்கப்பட்டிருந்த பெற்ற பாசம் ஆழ்ந்த பெரு மூச்சாக வெளிவந்தது. எனினும் அந்தத் தாயின் முகத்தில் ஒரு சாதனையாளனைப் படைத்து விட்ட பெருமை தோன்றியதை அவன் அவதானித்தான்.

நண்பனது படத்தின் முன் நின்று அஞ்சலி செலுத்திய போது... அவனையறியாமலே அவனது கண்களிலிருந்து இரு துளி நீர் நிலத்தில் விழுந்து தெறித்தது.

ஏதோ அரவங் கேட்டுத் திரும்பியவன் அங்கே... வாசுவின் அப்பா தன்னிரு கைகளையும் ஊன்றுகோலாக்கி அரைந்து வந்து கொண்டிருப்பதைக் கண்ணுற்றான். ஒரு நிமிடம் ராகவன் என்ன செய்வதென்றறியாது நிலைகுலைந்து போனான். அவர் தனது கைகளினால் கதிரையைப் பற்றிக் கொண்டே, மெதுவாக எழுந்து

அதில் அமர்ந்து கொண்டார்.

அவரருகிற் சென்ற ராகவன், அவரது கைகளைப் பிடித்துக் கொண்டே விம்மத் தொடங்கினான். அவரது வார்த்தை அவனை வியப்பிலாழ்த்தின.

"அழாதை தம்பி. எங்கடை வாசு தன்னுடைய சாவை அர்த்தமுள்ளதாக்கி அதை விரும்பி ஏற்றுக் கொண்டவன். தன் னுடைய மக்களுக்காகவும், தனது சந்ததிக்காகவும் தன்னுயிரை அர்ப்பணித்த அவனுக்கு, நாங்கள் அவனுக்காக கவலைப்படுவது அறவே பிடிக்காது. இப்பிடி இரு ராசா".

ராகவனது உள்ளமோ ஒரு கணம் அவரைத் தனது தந்தை யுடன் ஒப்பிட்டு எடை போட்டது. அவனது உள்ளத்தின் எங்கோ ஓர் மூலையில் அரிப்பு ஏற்படுவதை அவனால் உணர முடிந்தது. வாசு வுடன் சேர்ந்து செய்த குறும்புகள் அவனது மனக் கண்ணில் நிழலாடின.

"வாசு எப்படியடா உன்னால இப்படியான ஒரு சாதனையைச் சாதிக்க முடிந்தது."

மானசீகமாகக் கேட்டுக் கொண்டான்.

ஆறேழு வருடங்களின் முன். அவர்களது அயலிலுள்ள கந்தசுவாமி கோயிலில் அன்று தேர்த்திருவிழா. நண்பர்களிருவரும் நேரத்தோடு கோவிலுக்குப் போயிருந்தனர். காலை எட்டு மணிக்கே தேர் இழுக்கத் தொடங்கி, தேர் இருப்பிற்கு வர உச்சிப் பொழுதாகி விட்டிருந்தது. கோயிலின் வீதிகளெங்கும் மக்கள் வெள்ளம். தேரில் வைத்து சுவாமிக்கு அர்ச்சனை செய்விப்பதற்காகக் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது மக்கள் நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.

ராகவனும் வாசுவும் ஒரு புறமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். இருந்தாற்போல் மக்களிடையே சலசலப்பு. யாரோ ஒரு வயதான மாது மயக்கம் போட்டு விழுந்திட்டாளாம். செய்தியறிந்ததும் வாசு ஓடோடிப்போய் நீர் கொண்டு வந்து தெளித்து அந்தப் பெண்ணுக்கு மயக்கம் தெளிய வைத்தான், மயக்கம் தெளிந்ததும் அவளை ஒரு கரையில் உட்கார வைத்து விட்டு, அவளது அர்ச்சனைத் தட்டைத் தானே வாங்கிப் போய் வரிசையில் நின்று அர்ச்சனை செய்வித்துப் பிரசாதம் வாங்கி வந்து கொடுத்தான். மனம் நெகிழ்வுற்ற அந்தத் தாய் அவனை மனமார வாழ்த்தினாள்.

"தம்பி! உன்ரை பண்பான குணத்துக்கும், பரோபகார மனத்துக்கும் நீ ஒரு நாளைக்கு எல்லோராலும் போற்றிப் புகழப்படக்

கூடிய ஒரு உச்ச நிலையிலை இருப்பாய். தெய்வத்தின்ரை சந்நிதியிலை இருந்து கொண்டு சொல்லுற இந்தத் தாயின்ரை வாக்குப் பலிக்காமல் போகாது"

அவளது வாக்கு இன்று நிஜமாகிவிட் டதா?

ராகவனால் எதையுமே ஊகிக்க முடியவில்லை. அன்று அவன் வாசுவைக் கண்டித்தது நினைவில் வந்தது.

"ஏனடா வாசு, உனக்கு வேறை வேலையில்லையே. இந்த வெய்யிலுக்கை போய் வரிசையிலை நிண்டு அந்த மனிசிக்கு அர்ச்சனை செய்விச்சுக் கொண்டு வாறாய்?

"என்னடா மச்சான் செய்யிறது. அந்த மனிசியைப் பாக்க எனக்கு என்ர அம்மாவைப் போல கிடந்துது. பாவம் எண்டிட் டுத் தான் உதவி செய்தனான். எனக்கு உப்பிடி மற்றவை கஷ்டப்படுற போது பாத்துக் கொண்டிருக்கேலாது".

ராகவனுக்கு இப்போது புரிந்து விட்டது ஓ! வாசு இந்த மண்ணிலுள்ள தாய்மார் படும் இன்னல்களைக் கண்டு அவர்களுக் காக, அவர்கள் படும் துயரைத் துடைப்பதற்கென்றே தன்னுயிரை ஈந்து, இந்த மண்ணிற்கே மைந்தனாகி விட்டான்.

வாசுவின் பெற்றோர் அவனது பிரிவினால் பெரிதும் பாதிக்கப்பட்டதாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் கூட அவர் களது கண்களில் ஒரு விதமான சோகம் இழையோடியதை அவனால் அவதானிக்க முடிந்தது. பெற்றவர்களாயிற்றே! பிள்ளைப் பாசம் அவர்களை அசைக்காமல் போகுமா என்ன !

அவர்களிடமிருந்து விடை பெற்ற வாசு, கனத்த இதயத்துடன் வீட்டை அடைந்த போது அம்மா ஒரு செய்தியுடன் அவனுக்காகக் காத்திருந்தாள்.

"தம்பி! புரோக்கர் வந்து இவ்வளவு நேரமும் காத்துக் கொண்டிருந்து போட்டு இப்பதான் போறார். நல்ல சீதன பாதனத் தோடை, வடிவான ஒரு பொம்பிளை இருக்காம். நாளைக்கு நல்ல நாளாம். பொம்பிளையை வந்து பாத்து ஒரு முடிவைச் சொல்லட்டாம்"

"சும்மா இருங்கோ அம்மா, எனக்குக் கலியாணமும் வேண்டாம். கனடாவும் வேண்டாம். எனக்கு எத்தினையோ வேலையள் கிடக்கு."

மகனின் சினத்துக்குக் காரணம் புரியாதவளாய், தாய் விழித்தாள்.

- வெளிச்சம் - சிறுகதைச்சிறப்பிதழ்

# விண்ணிலிருந்து

*வைகறை இனியதாய்ப் புலர, பூமாதேவியைப் போர்த்தியிருந்த இருள் மெதுவாக விலகியது. விண்ணிலிருந்து நீர்த்துளிகள் பொட்டுப் பொட்டாக இறங்கி மண்ணை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. பொழுது புலர்ந்து விட்டதைக் குறிப்பினால் உணர்ந்து கொண்ட தேவகியின் உறக்கம் கலைந்தது. அவளது பார்வை அந்த வகுப்பறையைச் சுற்றித் துளாவியது.*

*அவர்கள் தங்கியிருந்த அந்த வகுப்பறையில் இரு குடும்பங்கள். தேவகி தங்கள் பகுதியைச் சுற்றி தனது சேலை ஒன்றினால் மறைப்புச் செய்திருந்தாள். அந்த மறைப்புக்கும் தான் அவர்களது வாழ்க்கை, குண்டுங்குழியுமான பாதையில் உருளும் வண்டிலை ஒத்ததாய்ப் போய்க் கொண்டிருந்தது.*

*கண் நிறைந்த கணவன் இன்று கால் ஒன்றை இழந்த நிலையில் வாசற் புறத்தை அண்டினாற் போல் படுத்திருந்தான். காலை இழந்துவிட்ட நிலையிலும் கூட தன் குடும்பத்தவருக்குக் காவல் அரணாக இருக்க விழையும் கணவனை நினைத்த போது அவன் மீது அவளுக்குப் பச்சாத்தாபம் ஏற்பட்டது.*

*“ எல்லாம் என்னால் வந்த வினைதான்”*

*“ம்!... நீண்டதொரு பெருமூச்சுடன் அவளது மனம் பழைய சந்தர்ப்பங்களை அசை போடத் தொடங்கியது.*

*விளக்குவைத்தகுளம் அவர்களது சொந்தக் கிராமம். அங்கு அவர்கள் வசித்து வந்த வீடும், தென்னந்தோட்டமும் வயற் காணிகளும் அவர்களது*

பூர்வீகச் சொத்து. அவளது கணவன் முகுந்தன் ஒரு கடின உழைப்பாளி, எந்நேரமும் வயலென்றும், தோட்டமென்றும் ஓடிஓடி அவற்றைப் பராமரிப்பதிலேயே தனது காலத்தைக் கழிப்பவன். அமைதியாகப் போய்க் கொண்டிருந்த அவர்களது வாழ்க்கையிலும் ஒரு நாள் இடி விழுந்தது.

ஆக்கிரமிப்பாளனின் அடாவடித் தனத்தினால் அடுத்தடுத்து ஏவப்பட்ட எறிகணைகள் அவர்களது குடியிருப்பின் சுற்றாடலில் வீழ்ந்து பாரிய சேதங்களை விளைவித்ததைக் கண்டு அவர்கள் முற்றாக நிலைகுலைந்து போனார்கள். உயிர்களை மட்டும் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் தம்மிரு செல்வங்களுடன் ஓட்டம் பிடித்தார்கள், கனகராயன் குளத்தில் இருந்த தேவகியின் சகோதரன் வீட்டில் வந்து தஞ்சம் புகுந்தனர். ஒன்று, இரண்டு, மூன்று என்று நாட்கள் நகர்ந்து போயின. சுகந்திரமாகவே வாழ்ந்து பழகி விட்ட தேவகிக்கு இன்னொருவரின் தயவில் வாழ்வது அறவே பிடிக்க வில்லை, கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் தனது கைப்படச் சமைத்து உணவு பரிமாறவேண்டும் என்ற தாபம் அவளுள் நெருப்பாய் மூண்டது.

அடிக்கடி அடுப்படியை நோக்கி ஓடி வந்து கையை நீட்டும் குழந்தைகள் அங்கு அனாதரவாகி விட்டதாக அவள் கருதினாள்.

இரண்டு மூன்று நாட்களாக குண்டுத் சத்தங்கள் எதுவும் கேட்கவில்லை. புயலுக்குப் பின் அமைதியாக அதனைக் கருத்தில் கொண்டு மக்கள் சிலர் தத்தம் வீடுகளுக்குச் சென்று பொருட்களை எடுத்து வருவதாகக் கதை அடிபட்டது. தேவகியின் விருப்பத்துக்கும் அதுவே உந்துசக்தியாக அமைந்துவிட்டது.

முகட்டைப் பார்த்தவாறு படுத்திருந்து ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிப் போயிருந்த கணவனை அணுகினாள்

“ஏனப்பா நீங்களும் ஒருக்கா வீட்டைப் போய் பார்த்துக் கொண்டு சமையல் பாத்திரங்கள், அரிசி, மா, தேங்காய் என்று கொஞ்சச் சாமான்களையும் கட்டிக் கொண்டு வாங்கோவன், உங்கை எல்லோரும் போய்வருகினமாம்”

மனைவியின் வார்த்தைகளைக் கேட்டு துள்ளி எழுந்தான் முகுந்தன்,

“நானும் அதைப்பற்றித் தான் யோசிச்சுக் கொண்டு இருந்தனான். அதுக்கென்ன நாளைக்கே போய் வீடு, வாசல் என்ன நிலை என்று பார்த்திட்டு, சாமான்களையும் கட்டிக்கொண்டு வாறன்”

வழமைபோல் மறுநாட்பொழுதும் நிசப்தமாய் விடிந்தது. முகுந்தன் தனது சைக்கிளில் புறப்பட ஆயத்தமானான். தேவகியும் பிள்ளைகளும் அவனை வாசல் வரை வந்து வழியனுப்பினர்.

“இஞ்சருக்கோப்பா போறது கவனம். ஏதும் சத்தம் கேட்டால் திரும்பி வந்திடுங்கோ. நீங்கள் போய் வருமட்டுக்கும் எனக்கு மனதில் நிம்மதியே இருக்காது”

“அதெல்லாம் நான் கவனமாய்ப் போய் வருவன். நீர் ஒன்றுக்கும் யோசியாதையும். சகு, கவி! குளப்படி செய்து அம்மாவுக்குக் கரைச்சல் கொடுக்கக் கூடாது என்ன!”

“அப்பா கொய்யாப்பழ பிடுங்கிக் கொண்டு வாங்கோ” இது சுகுவின் வேண்டுகோள். இளையவனான கவி அம்மாவிடம் இருந்து அப்பாவிடம் தாவினான்.

“அப்பா! நோக்கு மாம்பழம்”

மழலை மொழி பேசிய மகனை அணைத்து முத்தமிட்டுவிட்டு தேவகியிடம் அவனைக் கொடுத்தான் முகுந்தன். சைக்கிளில் தாவி ஏறி மிதிக்கத் தொடங்கினான்.

தேவகி தன் மார்பின் மீது படிந்து கிடந்த தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றியவாறு இறைவனை வேண்டிக் கொண்டாள்.

அன்றைய பகற்பொழுதும் அமைதியாய் கழிந்தது. மாலையானதும் தேவகியும் பிள்ளைகளும் தெருவில் வந்து நின்று முகுத்தனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

திடீரெனப் பேரிரைச்சல் ஒன்று வான் பரப்பில் கேட்டது. சுகு பதற்றத்துடன் கூறினான்.

“அம்மா! அப்பாவும் போயிருக்கிறார். கிபிரும் அந்தப் பக்கமாத்தான் சுத்துது...”

தேவகிக்கும் உள்ளூரக் கலக்கம் தான். எனினும் குழந்தை களைச் சாந்தப்படுத்தினாள்.

“எங்கடை அப்பா பத்திரமாக வந்து சேருவார். நீங்கள் பயப்படாதேங்கோ!”

சிலர் சைக்கிள் தாங்காத சுமைகளை முன்னும் பின்னுமாக ஏற்றி, பெரும் சிரமத்துடன் பள்ளமான இடங்களில் ஓடியும் சற்று மேடான இடங்களில் உருட்டியும் கொண்டு வருவதை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். தொலைவில் தெரியும் ஒவ்வொரு தலைகளையும் முகுந்தன் என்று எண்ணுவதும் ஏமாற்ற

மடைவதுமாய் பொழுது கழிந்தது.

இதற்கிடையில் வான் பரப்பில் வலம் வந்த இரண்டு கிபிர் விமானங்களும் அடுத்தடுத்து குண்டுகளைப் பொழிந்ததனால் ஏற்பட்ட அதிர்வொலிகள் அவர்களைக் கிலி கொள்ளச் செய்தது. அழத்தொடங்கிய கவியைச் சமாளிப்பதே தேவகிக்குப் பெரும் பாடாகப் போய்விட்டது. பொழுது கருகும் நேரத்தில் தான் அவர்களுக்கு அந்தச் செய்தி கிட்டியது.

விளக்குவைத்த குளத்தில் அவர்களது அயலவர்கள் சிலர் ஒன்று சேர்த்து அத்தியாவசியமான பொருட்கள் சிலவற்றை லொறி ஒன்றில் ஏற்றி வந்திருக்கிறார்கள். முகுந்தனும் இரண்டு நெல் மூட்டை களை அதில் போட்டு விட்டு சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். லொறியைக் குறி வைத்து கிபிர் விமானம் தாக்கியதால் அச்சொட்டாக அந்தக் குண்டு லொறியின் மீதே விழுந்து விட்டது. இந்தக் கோரச் சம்பவத்தில் லொறியின் சாரதியும் மற்றும் இருவரும் பலியாகி விட்டனர். லொறியின் பின்னால் வந்து கொண்டிருந்த முகுந்தன் கிபிரின் இரைச்சலைக் கேட்டு சைக்கிளை ஒரு பக்கமாக நிறுத்தி விட்டு மதவொன்றினுள் புகலிடம் தேடி ஓடியிருக்கிறான். இதற்கிடையில் லொறியைத் தாக்கிய குண்டின் சிதறலொன்று அவனது காலைப் பதம் பார்த்ததுடன் துண்டாடி விட்டது. கிபிர் மறைந்ததும் அவ்விடத்திற்கு விரைந்த இளைஞர்கள் சிலர் முகுந்தனுக்கு முதலுதவி அளித்து அவனை மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதித்திருக் கிறார்களாம்.

பேரிடியாகக் கிடைத்த செய்தியினால் துடிதுடித்துப் போன தேவகியும் பிள்ளைகளும் அண்ணனின் உதவியுடன் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார்கள்.

அங்கே முகுந்தனுக்கு நினைவு திரும்பியிருந்தது. கணவனின் கலவரம் நிறைந்த முகமும் குழந்தைகளின் அவலக் குரல்களும் அவளை உலுப்பியெடுத்தன. செய்வதறியாது ஒரு கணம் திகைத்து நின்றவள், மறுகணமே மனத்தைரியத்தை வலிந்து வரவழைத்துக் கொண்டாள். கணவனையும் பிள்ளைகளையும் தேற்றினாள்.

இந்த நிகழ்வுக்குப் பின்னர் தேவகி புதுத்தென்பு பெற்றாள். குடும்பத்தை நிர்வகித்துக் கொண்டு செலுத்துவது தன் பொறுப்பு என்பதை உணர்ந்து கொண்டாள். பொருள், பண்டம். வீடு. காணி என்ற எல்லாவற்றையுமே இழந்தாயிற்று. இனி வாழ்க்கையை ஓட்டிச் செல்ல வழிதேட வேண்டுமெனத் தீர்மானித்தாள். தனது கைகளில் அணிந்திருந்த தங்க வளையல்களை விற்றுப் பணமாக்கினாள்.

தினமும் கணவனைப் போய் பார்த்து வர வசதியாக அந்த சுற்றாடலில் இருந்த உறவினர் ஒருவரின் வளவுக்குள் சிறு குடிசை ஒன்று அமைத்துக் கொண்டு தனிக்குடித்தனம் தொடங்கினாள்.

இன்று அந்த நிலையும் நீடிக்கவில்லை. தொடர்ந்து பெய்து வந்த மழையினால் அவளது குடிசைக்குள் வெள்ளம் புகுந்துவிட்டது. எனவே இந்தப் பாடசாலை வகுப்பறையே இப்போதைக்குத் தஞ்சம் என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

நினைவுச் சுழற்சியிலிருந்து விடுபட்ட தேவகி. தன் மீது கிடந்த கவியின் கைகளை மெல்ல விலக்கி விட்டு எழும்பினாள்.

"பாவம் பிள்ளைகள் கறுத்து, நல்லாய் மெலிந்து போயிட்டுதுகள் ஆன சாப்பாடும் இல்லை..."

மனதுக்குள் நினைத்துக் கொண்டவளாய், வாயிலில் படுத் திருந்த கணவனை கடந்து வெளியே வந்தாள். தொடர்ந்து பெய்த மழையினால் ஆங்காங்கே வெள்ளம் தெட்டந் தெட்டமாக தேங்கி நின்றது. ஒரே சேறும் சகதியுமாக கிடந்தது நிலம். எத்தனையோ ஏதிலிகள் கால் பதிக்கும் நிலமல்லவா அது. சில்லென்று குளிர் காற்று அவளது மேனியைத் தழுவிய போது உடல் புல்லரித்தது. கை களிரண்டையும் மடித்து மார்புக்கு குறுக்காகக் கட்டிக் கொண்டாள். "டொக்! டொக்" சத்தம் கேட்டுத் திரும்பியவள். கணவன் அங்கு நின்று கொண்டிருப்பதைக் கண்டாள்.

"ஏனப்பா இந்தக் குளிருக்கை எழும்பி வந்தனீங்கள்?"

அவளது வார்த்தையில் பாசமும் இரக்கமும் கலந்திருந்தது.

"நான் என்ன செய்ய பழகின பழக்கம் அப்படி. வெள்ளன காத்தால எழும்பி, தோட்டம் துரவென்ற திரிஞ்ச காலம் போயிட்டுது. ம்...!"

அவனது ஏக்கத்தை வெளிப்படுத்தியது பெருமூச்சு. அவசரமாக இடைமறித்தாள் தேவகி.

"அப்படிச் சொல்லாதையுங்கோ நாங்கள் என்றோ... ஊருக்குப் போய் நிம்மதியாய் வாழத்தான் போறம். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு."

"நீர் என்ன சொல்லுறீர். இனியும் நான் ஒற்றைக் காலோடை தோட்டம் செய்ய ஏலுமோ?"

"ஏன் நான் இருக்கிறன் தானே. நீங்கள் ஏன் யோசிக்கிறியள்"

மனைவியின் நம்பிக்கை கலந்த ஆறுதல் மொழி முகுந்தனைச்

சிறிது ஆசுவாசப்படுத்தியது.

தேவகி தனது வேலைகளைக் கவனிக்கலானாள், கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் தேநீர் தயாரித்துக் கொடுத்து விட்டுத் தானும் குடித்தாள். பின்னர் காலை உணவுக்காகப் பாண் வாங்குவதற்கு உண்டியலில் கிடந்த சில்லறைகளைத் தட்டி எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். கடைவாசலில் பெரும் கூட்டம் நின்றிருந்தது. ஏற்கனவே ஒரு பெட்டி பாண் வந்து தீர்ந்து விட்ட தாம். அடுத்தது வரும் வரை அனைவரும் காத்திருந்தனர். தேவகியும் அந்தக் வட்டத்தினருடன் இணைந்து கொண்டாள்.

ஏதோ இரைச்சலொன்று விண்ணிலிருந்து கேட்டது. அனைவரும் அதனை உன்னிப்பாகச் செவிமடுத்தனர். சந்தேக மில்லை. அது கிபிர் விமானத்தின் இரைச்சல்தான்.

இரைச்சல் படிப்படியாக அதிகரித்து அவர்களது தலைக்கு மேல் அதிர்ந்த போது, செய்வதறியாது நிலைகுலைந்த மக்கள் சிதறி ஓடினர். மரங்களின் கீழ் சிலரும் நிலத்தில் சிலருமாக அனைவருமே குப்புறப்படுத்துக் கொண்டனர்.

“டுடும்ம்.. டுடும்...”

நிலத்தின் அதிர்வுகள் அவர்களது செவிகளுக்குத் துல்லியமாகக் கேட்டது. பதிந்து குண்டுகளை வீசிய விமானம் அவர்களுக்கு மேலால் உயர்ந்து எழுந்த போது...

அங்கு தெய்வத்தை வேண்டாதவரில்லை. தேவகியும் இறைஞ்சினாள்.

“எம் பெருமானே என்ரை பிள்ளைகளை அந்தரிக்க விட்டிடாதே என் அப்பனே!”

சிறிது சிறிதாக இரைச்சல் தேய்ந்து அற்றுப் போனதும் அனைவரும் எழுந்தனர். அவர்களது உடலிலும் உடைகளிலும் சேறும் சகதியும் அப்பிக் கிடந்தன.

தலைவிதியை நொந்து கொண்டவளாய் தேவகி பாண் வரம் வரை காத்திருந்து வாங்கிக் கொண்டு விரைந்தாள்.

சுகுவும், கவியும் பாடசாலை வாசலில் காத்து நின்றனர். அவளைக் கண்டதும் “அம்மா” என்று அழைத்தவாறு ஓடி வந்து கட்டிக் கொண்டனர்.

“அம்மா நாங்கள் சரியாப் பயந்திட்டம்”

“சுகு சொன்னான் கவியைத் தூக்கிக் கொண்டே தேவகி

கூறினாள்.

"அது எங்கையோ அடிச்சவங்கள்"

அம்மா வந்து விட்ட செய்தியை அறிவிக்க சுகு அப்பாவிடம் ஒடினான்.

சிலமணிநேரம் கழிந்தது. கூட்டுறவு உணவுக் களஞ்சியத்தின் மீது குண்டு விழுந்தது. வைக்கப்பட்டிருந்த அத்தனை உணவுப் பொருட்களும் சேதமாகிவிட்டதாகச் செய்தி பரவியது.

"ஏன் தான் இப்பிடி இரக்கமில்லாமல் எங்கட வைத்தில அடிக்கிறாங்களோ!"

அங்கலாய்த்தாள் தேவகி.

"கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே" என்றது போல அவங்களுக்கு அழிவு காலம் கிட்டிட்டுது..."

மனதில் தோன்றியதை முகுந்தன் கூறினான்.

அச்சமயத்தில் அடுத்த வகுப்பறையிலிருந்து வானொலியில் "வானம்பாடியின்" செய்தி போய்க் கொண்டிருந்தது. "வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்த பாடசாலைகளில் தஞ்சமடைந்திருக்கும் தென்பகுதி மக்களுக்கு ஹெலிக்கொப்டர் மூலம் சமைந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

- களத்தில் - 3.06.1999

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

1. வேர் பதிக்கும் விழுதுகள் - சிறுகதைகள் (2015)
2. மறையாத சூரியன் - நாவல் (2016)
3. கீறல் - சிறுகதைகள் (2016)
4. மௌனத்தின் சிறகுகள் - நாவல் (2017)
5. அனலிடைப்புழு - சிறுகதைகள் (2017)
6. மலைச்சாரலின் தூவல் - நாவல் (2018)
7. காகிதப்படகு - 3 குறுநாவல்கள்(2018)
8. அப்பாவின் தேட்டம் - சிறுகதைகள்(2019)
9. பாலைவனத்து புஷ்பங்கள் - குறுநாவல்கள் (2019)
10 உயிர் சுமந்த கூடு - சிறுகதைகள் (2020)

மலரன்னையின் இத்தொகுப்பில் உள்ள கதைகள் யாவும் எங்கள் இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்யும் கதைகள்... இத்தொகுப்பில் உள்ள கதை களை உணர்ச்சி பூர்வமாக வாசிப்பவர்களுக்கு சில நாட்களுக்கு தூக்கம் வராது... எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமைகளின் சாட்சியமாய் இத் தொகுப்பின் கதைகள் அமைந்துள்ளன... எல்லாம் மறந்து, எதுவுமே நடைபெறவில்லை... என நம்மில் பலர் எல்லாம் மறந்து போலி வாழ்வு வாழ்ந்து வருகின்றோம்... இத்தொகுப்பில் உள்ள கதைகள் யாவும் எப்படியான ஓர் இடர்மிகுந்த வாழ்வை நாம் வாழ்ந்தோம் என்பதை 'அசை' போட வைக்கின்றது. ஒரு தமிழ்த்தாயின் மன உணர்வுகளை, கொதி நிலையை இந்த தொகுப்பு வாயிலான உணர்ந்து கொள்ளலாம்.

– க.பரணீதரன்

ISBN 955524963-6
9789555249638